திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2019 விலை ரூ.5/-



ஒண்டிமிட்டா

ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

12-04-2019 முதல் 21-04-2019 வரை


இரதசப்தமி (12-02-2019) பருவ
தினத்தை முன்னிட்டு திருமலையப்ப
ஸ்வாமி "ஏழு வாகன"ங்களில்
எழுந்தருளிய திருக்காட்சிகள்
கருட வாகனம்
சூரியப்பிரபை வாகனம்
கல்பவிருக்ஷ வாகனம்
சர்வ பூபால வாகனம்
அனுமன் வாகனம்
சந்திரப்பிரபை வாகனம்
சிறிய சேஷ வாகனம்



*ஜயத் யாச்ரித ஸந்த்ராஸ த்வாந்த*
*வித்வம்ஸநோதய: |*
*ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா*
*பரமவ்யோம பாஸ்கர:||*

**அடியார்களின் அச்சமென்னும்**
**இருளை ஒழிப்பதற்காக**
**தோன்றியவனாய், சீதா தேவியால்**
**ஒளி மிகுந்தவனாய்,**
**பரமாகாசமெனப்படும்**
**ஸ்ரீவைகுண்டத்திற்கு சூர்யனாய்**
**விளங்குமவனான இராமபிரான்**
**மேம்பட்டு விளங்குகின்றான்.**

*- ஸ்ரீமஹாவீர வைபம்*

*யோ ந ஹ்ருஷ்யதி ந த்$_3$வேஷ்டி*
*ந சோசதி ந காங்க்ஷதி |*
*சுபா$_4$சுப$_4$ பரித்யாகீ$_3$*
*ப$_4$க்திமாந்ய: ஸ மே ப்ரிய: ||*

**எவன் ஒருபோதும்**
**மகிழ்வதில்லையோ,**
**வெறுப்பதில்லையோ,**
**துயரப்படுவதில்லையோ, எதற்கும்**
**ஆசைப்படுவதில்லையோ,**
**எவனொருவன்**
**நல்லதும் தீயதுமான செயல்கள்**
**அனைத்தையும்**
**துறந்தவனோ, அந்த என் பக்தன்**
**என்னிடம் பக்தியுள்ளவன் எனக்குப்**
**பிரியமானவன்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 12–17*



# ஸ்வஸ்தி ஸ்ரீவிளம்பி/ஸ்ரீவிகாரி வருஷம், பங்குனி/சித்திரை மாதம், உத்தராயணம் வஸந்தருது, சகவருஷம், 1941-42, கலியுகாதி, 5120, ஏப்ரல், 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | திங்கள் | துவா | அவி | தனியநாள் விருத்தி திதி, அன்னமய்யா நினைவு நாள். |
| 2 | 19 | செவ் | துவா | சத | பிரதோஷம், திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம். |
| 3 | 20 | புதன் | திர | பூரட் | மாத சிவராத்ரி, பாதிப்பு, துவஜாரோஹணம். |
| 4 | 21 | வியா | சசி | உத்ரட் | மழை பாதிப்பு, சர்வ அமாவாசை. |
| 5 | 22 | வெள்ளி | அமா | ரேவ | பாதிப்பு. |
| 6 | 23 | சனி | பிர | ரேவ | ஸ்ரீவிகாரி சாந்த்ரவருஷம், தெலுங்கு வருடப்பிறப்பு, யுகாதி, சந்த்ர தரிசனம், வைத்-சிரா, ஸ்வேத வராஹ கல்பாதி, திருமலையப்ப ஸ்வாமி யுகாதி ஆஸ்தானம். |
| 7 | 24 | ஞாயிறு | துவி | அஸ்வி | ஸுவ்ருஷ்டி தனியநாள், ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கருடசேவை. |
| 8 | 25 | திங்கள் | திரி | பர | கிருத்திகை, உத்தம மன்வாதி ஆந்தோளன திரிதினய கௌரி விரதம், ஸ்ரீமத்ஸ்யஜெயந்தி. |
| 9 | 26 | செவ் | சது | கார் | கணேச தமன பூஜா. |
| 10 | 27 | புதன் | பஞ் | ரோகி | லக்ஷ்மி பஞ்சமி, கூர்மகல்பாதி குரு வ.ஆ, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருத்தேர், ஸ்ரீமதுரகவியாழ்வார் திருநட்சத்திரம். |
| 11 | 28 | வியா | சஷ் | மிரு | ஸ்கந்த தமனாரோஹணம்,திதி த்வயம், வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவ ஆரம்பம், துவஜாரோஹணம், திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், துவஜாவரோஹணம், சக்கர ஸ்நானம். |
| 12 | 29 | வெள்ளி | சப் | திரு | புதன்-மீனம். |
| 13 | 30 | சனி | அஷ் | புன | அசோகாஷ்டமி, பவானி யுத்பத்தி, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவ ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 14 | 1 | ஞாயிறு | நவ | பூச | தமிழ் வருடப் பிறப்பு, விஷு, ஸ்ரீராம நவமி, சூரியன் மேஷம், திருமலையில் ஆஸ்தானம். |
| 15 | 2 | திங்கள் | தச/ஏகா | ஆயி | சுக்ரன்-மீனம் க்ஷய திதி. காமத ஏகாதசி, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பட்டாபிஷேகம், வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி கருட சேவை. |
| 16 | 3 | செவ் | துவா | பூர | தனிய நாள், பாதிப்பு, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புக்கோத்ஸவம் ஆரம்பம். |
| 17 | 4 | புதன் | திர | உத் | பிரதோஷம், அனங்கத் திரயோதசி, திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம், திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 18 | 5 | வியா | சசி | ஹஸ் | சுப நாள். விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபட, வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி திருத்தேர், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புக்கோத்ஸவம் நிறைவு. |
| 19 | 6 | வெள்ளி | பௌர் | சித் | சித்ரா பௌர்ணமி, சித்ரகுப்த பூஜை, கரி நாள், வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், துவஜாவரோஹணம், சக்கர ஸ்நானம், திருமலையப்ப ஸ்வாமி வசந்தோத்ஸவம் நிறைவு, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம் துவஜாரோஹணம், திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி பொன்னக்கால்வாய் உத்ஸவம், ஸ்ரீமதுரகவியாழ்வார் சாத்துமுறை, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருத்தேர். |
| 20 | 7 | சனி | பிர | சுவா/சித் | திதித்வயம், சைத்ர பஹுளா. |
| 21 | 8 | ஞாயிறு | துவி | விசா | வ்ய-சிரா, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி அவப்ருதம், சக்கர ஸ்நானம். |
| 22 | 9 | திங்கள் | திரு | அனு | சங்கடஹர சதுர்த்தி, குரு(வ) விருச்சிகம், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி புஷ்ப யாக மஹோத்ஸவம், ஸ்ரீபராசர பட்டர் திருநட்சத்திரம். |
| 23 | 10 | செவ் | சது | கேட் | வாஸ்து கா.8.58-9.54, நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி கருடசேவை. |
| 24 | 11 | புதன் | பஞ் | மூல | ப்ளுட்டோ வக்ர ஆரம்பம். |
| 25 | 12 | வியா | சஷ் | பூரா | நீர் நிலைகள் அமைக்க குழாய்க் கிணறுபோட, சஷ்டி. |
| 26 | 13 | வெள்ளி | சப் | உத்ரா | வாகனம் வாங்க-பயில. |
| 27 | 14 | சனி | அஷ் | திவோ | காலாஷ்டமி, நடராஜர் அபிஷேகம், ச்ரவணம், நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம், அவப்ருதம், சக்கரஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 28 | 15 | ஞாயிறு | நவ | அவி | கரி நாள். |
| 29 | 16 | திங்கள் | தச | சத | சுப நாள், திரிதினஸ்ப்ருக்(நட்), ஸ்ரீஇராமானுஜர் உத்ஸவம் ஆரம்பம். |
| 30 | 17 | செவ் | ஏகா | சத | வருதினி ஏகாதசி. |




# ஸப்தகிரி

சமயமாத இதழ்


வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


**ஏப்ரல் 2019** மலர் 49 இதழ் 11


## உள்ளுறை


பக்கம்

**மத்ஸ்ய அவதாரம்** *- திரு. ஏ. கே. கோபி, கள்ளக்குறிச்சி.* **7**

**நவமியில் இராமன் பிறந்தான்** **10**
*- திருமதி. கௌசல்யா விஜயன், வேலூர்.*

**ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 16** **14**
**மதுரகவியாழ்வாரின் ஆசாரிய நிஷ்டை**
*- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*

**எம்பெருமானாரும் பட்டரும்** **18**
*- திரு. பி. திருவேங்கடாசாரியார் ஸ்வாமி, திருவல்லிக்கேணி.*

**திருமலையான் மனம் கவர்ந்த அன்னமாச்சார்யார்** **20**
*- திரு. கே.எஸ். மணி, செஞ்சிக்கோட்டை.*

**நமது திருக்கோயில் : ஸ்ரீகோதண்ட ராமாலயம், ஒண்டிமிட்டா** **23**
*-திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி.*

**பச்சை தோரணம் : அறம் காத்த அண்ணல்** **31**
*- திரு. கே. இராமநாதன், சேலம்.*

**முத்திரை பதிக்கும் சித்திரை** **35**
*- அமரர். வி.எஸ். ஸ்ரீநிவாசன், சென்னை.*

**வலங்கைமான் ஸ்ரீமதுவன ராமர் கோயில்** **37**
*- அமரர். வி.பி.கே. மூர்த்தி, பாபநாசம்.*

**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–தேவஹூதி கர்தமர் கதை** **39**
*- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.*

**சிறார் வாக்கு : அநந்தாழ்வார் வைபவம்** **42**
*- செல்வி. ஸ்மிருதி கிருஷ்ணன், அடையார்.*

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** **43**
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*

**108 திவ்யதேச வைபவம் – சிறுபுலியூர்** **47**
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**பகவத் கீதை–இளைய சமுதாயம்**
**இலட்சயப்பாதையில் உள்ள ஆறு தடைகள்** **49**
*- திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.*

**ஆயுர்வேதம் – வேம்பு** *- திருமதி. வி.உஷா, திருப்பதி.* **51**

**2019, ஏப்ரல் மாத ராசி பலன்** **53**
*- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

*ஓவியம் :*
**திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264363**
**அலைபேசி எண் : 98663 29955**

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ***ஸ்ரீசீதா தேவியுடன் ஸ்ரீகல்யாண ராமர், ஒண்டிமிட்டா.***

பின்னட்டை : ***ஸ்ரீசீதாராம லக்ஷ்மண மூர்த்திகள், திருமலை.***

உங்களுடன்...

# வசந்த கால தமிழ்ப் புத்தாண்டு

பண்டைய காலத்தில் சனாதன தர்ம அநுசரணைக்கு இருப்பிடமாக ஆலயங்கள் திகழ்ந்தன. அறம், பக்தி, கல்வி, ஆன்மீகம், ஓவியம், சங்கீதம் முதலானவை தோன்றும் இடமாகவும் ஆலயங்கள் திகழ்கின்றன. அனைவரையும் ஒன்றிணைத்தும், நாட்டை நன்மார்க்கத்தில் வழி நடத்தியும், மக்களை பக்தி மார்க்கத்தில் செல்லவும் இவ்வாலயங்கள் எண்ணிலடங்கா சேவையைச் செய்கின்றன. ஆலயம் மருத்துவ நிலையமாகவும், நீதிமன்றங்களாகவும் சமுதாயத்தை நல்வழியில் வழிநடத்துவதில் ஆலயங்களைத் தவிர வேறு சிறந்த இடங்களே இல்லை என்றே கூறலாம்.

இன்றைய காலகட்டத்தில் நம் சனாதன தர்மமும் இந்து பண்பாடும் குன்றின்மேல் இட்ட விளக்கு போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானமும் பல ஆண்டுகளாக தர்ம விழிப்புணர்வினையும், சாம்பிரதாயங்களையும் பன்முகமாக பிரச்சாரம் செய்து வருகின்றது. இதற்கு துணையாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களையும் உயர் நிலைக்கு கொண்டுச் செல்ல வேண்டும் எனும் உயர் நோக்கில் அவர்களிடையே தார்மீக விழிப்புணர்வினை ஏற்படுத்தி, ஆத்ம அவநம்பிக்கையை போக்குவதற்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் பல செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் பெரும்பான்மையாக தாழ்த்தப்பட்ட மற்றும் பின்தங்கிய வகுப்பினர் உள்ள கிராமங்களில், அவர்கள் வணங்கும் தெய்வ ஆலயங்களை நிர்மாணித்து, அவர்களையே அங்கு அர்ச்சகர்களாக நியமித்து, சாம்பிரதாய முறையினையும், அர்ச்சனை செய்யும் வசதி வாய்ப்பினையும், ஆலயக் கல்வியையும், இந்து பண்பாட்டினையும் கற்பிப்பதற்காக தி.தி.தே. 2017 மே மாதம் முதல் “அர்ச்சக பயிற்சி”யினை நிர்வகித்து வருகின்றது. இதுவரை சுமார் அறுநூறு பேர் அர்ச்சகப்பயிற்சி பெற்றுள்ளனர். இதற்காக தகுந்த பாடதிட்டங்களையும், ஆலயக் கல்வி புத்தகங்களையும் எளிய மொழி நடையில் அச்சிட்டு, பயிற்சி பெற்ற கல்வியாளர்களின் வாயிலாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்து தர்ம பிரச்சார பரிஷத் வாயிலாக பயிற்சியை அளிக்கின்றது.

பதகவிதா பிதாமகரான அன்னமய்யாவும் “பிரம்மம் ஒக்கடே பரபிரம்மம் ஒக்கடே” என்று மனித குலத்தில் உயர்வு, தாழ்வு இல்லை என்றும், இறைவனின் பார்வையில் அனைவரும் ஒன்றே என்றும் வலியுறுத்தினார். இந்த புதிய “விகாரி” ஆண்டில் சிறப்பாக தர்ம காரியங்களை செய்து, சனாதன தர்ம பிரச்சாரம் பரவலாக நடைபெற எம்பெருமானின் கருணையால் முன்னுக்குச் செல்வோம். இந்த தெலுங்கு “உகாதி” மற்றும் சித்திரை மாத தமிழ்ப்புத்தாண்டு நன்னாளில் மனித இனம் முன்னேற, அன்னமய்யாவின் கனவும் நனவாக சமுதாயம் அமைதியுடனும், ஆனந்தத்துடனும் வாழ எல்லாம் வல்ல அத்திருவேங்கடமுடையானிடம் பிரார்த்திப்போம்.

# மத்ஸ்ய அவதாரம்

திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி

ஆழ்வார்கள் அர்ச்சாவதார திவ்யதேசத்து எம்பெருமான்களை அனுபவிக்கையில் மயங்கி உகக்கும் அளவிற்கு எம்பெருமான் தம்முடைய அவதாரங்களையும் மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களையும் ஒரே அர்ச்சாவதாரத்திலே காட்டியருளி, ஆழ்வார்களுக்கு பேரின்பம் அருள, அவ்வனுபவத்தினை பாசுரங்களிலே அருளிச் செய்துள்ளனர் ஆழ்வார்கள்.

## உயிரளிக்கும் வித்து :

*''பழகியான் தாளே பணிமின் - குழவியாய்த்
தானேழுலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே
மீனா யுயிரளிக்கும் வித்து''*

–நான்முகன் திருவந்தாதி – 22

நவீன அறிவியலின் பரிணாமக் கொள்கை உயிரினங்கள் நீரிலேதான் முதன்முதலில் உருவாகின என நிறுவுகிறது. ஸ்ரீமந்நாராயணன் உலகினை படைக்கத் துவங்குகையில் நான்முகனுக்கு வேதங்களையும், உயிரினங்களின் மூலவித்துக்களையும் மச்ச அவதாரம் எடுத்து காத்தருளியதை திருமழிசையாழ்வார் மீனாய் உயிரளிக்கும் வித்து என மச்ச அவதாரத்தினை அனுபவித்தருள்கிறார்.

## பிரளயம் :

*''கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்டகாலம்
குலவரையின் மீதோடி யண்டத்தப்பால்
எழுந்தினிது விளையாடு மீசனெந்தை''*

–பெரிய திருமொழி 6–6–2.

திருநறையூரில் சேவை சாதித்தருளும் ஸ்ரீனிவாசன் திருமங்கையாழ்வாருக்கு மச்சாவதாரத்தினை காட்டியருள்கிறான். பிரளயம் அண்டசராசரங்களை மூழ்கடித்த தருணத்தில் மச்சாவதார எம்பெருமான் படகிலே மூல வித்துக்களை சுமந்து கொண்டு மலைகளின் மீது நீந்தியும் பெருவெள்ளம் அண்டத்திற்கப்பாலும் சென்ற போதும் அது வரையிலும் சென்று விளையாடி காத்தருளியதையும் காட்டியருள்கிறான்.

*''வானோரளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம்
வலியுருவின் மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட''*

–பெரிய திருமொழி 8.8.1

திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாளை சேவிக்கும்போது மச்ச அவதாரத்தின் பிரம்மாண்டத்தை (வலியுருவில்) காட்டுகிறான் எம்பெருமான். அதாவது பிரளயப் பெருவெள்ளமானது மீனின் ஒரு செதிளுக்குள்ளே அடங்குமாறு மிகப் பெரிய மச்ச அவதாரம் எடுக்கப்பட்டதாய் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் அருளுகிறார்.

*''வாதை வந்தடர வானமும் நிலனும் மலைகளும்
அலைகடல் குளிப்ப
மீது கொண்டுகளும் மீனுருவாகி விரிபுனல் வரிய
கட்டொளித்தோன்''*

–பெரிய திருமொழி 9.1.3

திருக்கண்ணங்குடியுள் சேவை சாதித்தருளும் லோகநாதப் பெருமாள் மச்ச அவதாரத்தில் செதிலி



டையே அடக்கிய பெருவெள்ளத்தால் கடல் வெறும் தரையாகியும் (விரிபுனல் வரிய கட்டொ ளித்தோன்) மறுபடியும் கடல்நீரினை வெளியில் விட பெருவெள்ளம் தோன்றிய அதிசயத்தினையும் மலைகளோடு பூமியும் ஆகாயமும் பெரு வெள் ளத்தில் மூழ்கிக் குளித்த பிரம்மாண்டத்தையும் காட்டி திருமங்கையாழ்வாரை பாசுரமிடச் செய் தருள்கிறான்.

## பல அவதாரங்கள் :

ஒரு திவ்ய தேசத்து எம்பெருமான் பல அவ தாரங்களை தம்முடைய திருமேனியிலே காட்டிய ருளும் அற்புதத்தை ஆழ்வார்கள் பாசுரங்களிலே அனுபவித்து மகிழ்கிறார்கள்.

*''அன்னமும்மீனு மாமையு மரியுமாய எம்மாயனே!''*

– பெரிய திருமொழி 2.7.10.

*''கெண்டையும் குறளும் புள்ளும்*
*கேழலுமரியும் மாவும்''*

– பெரிய திருமொழி 4.5.6.

*''ஏன மீனாமையோடு அரியும்சிறு குறளுமாய்*
*தானுமாய தரணித் தலைவனிடம்''*

– பெரிய திருமொழி 5.4.8.

*''அன்னமும் கேழலும் மீனுமாய*
*ஆதியை நாகை யழகியாரை''*

– பெரிய திருமொழி 9.2.10.

வேதங்களை மீட்டு பிரமனுக்கு அருளும் அன்ன பட்சி மற்றும் மச்ச அவதாரங் கள், தேவர்களுக்கு அமுதம் கிடைக்கச் செய்வதற்கான ஆமை அவதா ரம், பூமிப்பிராட்டியினை மீட்க எடுத்த வராக அவதாரம், பக்தப் பிரகலாதனுக்காக எடுத்த நரசிம்ம அவதாரம், இந்திரனுக்கு உதவுவதற்கான வாமன அவதாரம் இவற்றையெல்லாம் திரு மங்கையாழ்வாருக்கு திருவிடவெந்தை லக்ஷ்மி வராகப் பெரு மாள், திருமணிக்கூடத்து வரதராஜப் பெருமாள், திருவரங்கம் ஸ்ரீரங்க நாதர், திருநாகை நீலமேகப் பெருமாள் தங்களுடைய அர்ச்சாவதார நிலைகளிலே காட்டியருளுவதை மேற்கண்ட பெரிய திருமொழி பாசுரங்களிலே அனுபவித்து மகிழலாம்.

## திவ்யதேசம் :

*''முந்நீரை முன்னாள் கடைந்தானை மூழ்த்தநாள்*
*அந்நீரை மீனாயமைத்த பெருமானை*
*தென்னாலி மேய திருமாலை எம்மானை*
*நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே.''*

– பெரிய திருமொழி 6.8.2.

திருநறையூரில் சேவை தந்தருளும் ஸ்ரீநிவாசன் மேற் கண்ட பாசுரத்தில் தம்முடைய அர்ச்சாவதாரத் திருமேனியில் கடலினைக் கடைந்த ஆமை அவதாரத்தினையும் கடலினுள் தோன்றிய மச்ச அவதாரத்தினையும் காட்சிப்படுத்தும் அதே தருணத்தில் திருவாலி திவ்ய தேசத்தின் வயலாலி மண வாளன் அர்ச்சாவதாரத்தினையும் திருமங்கையாழ்வாருக்கு ஒருங்கே காட்சி கொடுப்பது பேரதிசயமன்றோ!!

## உபதேசம் :

*''நிலையிட மெங்கு மின்றி நெடுவெள்ளம்*
*உம்பர் வளநாடு மூட இமையோர்*



*தலையிட மற்றெமக்கோர் சரணில்லை*
*என்ன அரணாவனென்னு மருளால்*
*அலைகடல் நீர்குழம்ப அகடாடவோடி*
*அகல்வானுரிஞ்ச முதுகில்*
*மலைகளைமீது கொண்டுவரு மீனை மாலை*
*மறவாதுஇறைஞ் சென்மனனே!"*

– பெரிய திருமொழி 11.4.1.

ஊழிப் பெருவெள்ளம் பெரும்வேதத்தோடு பெருகி நிற்க, இடமில்லாமலும் நேரமில்லாமலும் இந்திர லோகம் வரை சென்று மூழ்கடிக்க எத்தனிக்கையில் இந்திராதி தேவர்கள் மகாவிஷ்ணுவை சரணமடைந்து காப்பாற்றியருளுமாறு வேண்டினர். எம்பெருமான் மச்ச அவதாரம் எடுத்து அவர்களுக்காக குலமலை முதலான மலைகளை தம் முதுகிலே தாங்கி வந்து தேவர்கள் தங்கு வதற்கு உதவினார். அத்தகைய ஆபத்பாந்தவனான எம்பெருமானை தம்முடைய மனம் மறவாமல் பிரார்த் தனை செய்தபடி இருக்க வேண்டுமென மனதிற்கு உப தேசம் செய்தருள்கிறார் திருமங்கையாழ்வார்.

**கருணை :**

*"தேவுடைய மீனமாய்ஆமையாய் ஏனமாய் அரியாய்*
*குறளாய் மூவுருவினிராமனாய்க் கண்ணனாய்க்*
*கற்கியாய் முடிப்பான் கோயில்"*

– பெரியாழ்வார் திருமொழி 4.9.9.

எம்பெருமான் பாகவதோத்தமர்களை காத்தருள் வதற்காக மச்ச அவதாரம் முதல் கண்ணன் அவதாரம் வரை எடுத்து கடைசியாக கற்கி அவதாரம் எடுக்கப் போவதை பெரியாழ்வார் மேற்கண்ட பாசுரத்தில் அருளு கிறார். மூவுரு ராமன் (பரசுராமர், ராமர், பலராமர்)

*" மீனாய்ஆமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய்*
*கானாரேனமுமாய்க் கற்கியாமின்னம்*
*கார்வண்ணனே"*

– திருவாய்மொழி 5.1.10.

பிரபன்னஜனகூடஸ்தரான நம்மாழ்வார் ஒரு படி மேலே சென்று நீருண்ட கார்மேகமானது மழையினை அனைத்து இடங்களிலும் பெய்த பிறகு மறுபடியும் வறட்சி நிலங்களுக்கு மேலும் பெய்வதற்கு நகருவது போல எம்பெருமானும் மச்சம் முதல் கற்கி வரை அவ தாரங்களை எடுத்தபோதிலும் பாகவதோத்தமர்களை காப்பதற்காக மேலும் பல அவதாரங்களை எடுப்பதற்கு சித்தமாய் இருப்பதையே *"இன்னங் கார்வண்ணனே"'* என்று நம்மாழ்வார் மேற்கண்ட திருவாய்மொழிப் பாசுரத் தில் அருளுவதாக வியாக்கியானங்கள் அருளுகின்றன.

**புருஷார்த்தம் :**

*"மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த்*
*தானாய் பின்னுமிராமனுமாய்த் தாமோதரனாய்க்*
*கற்கியும்*
*ஆனான்றன்னை கண்ணபுரத்தடியன்*
*கலியனொலிசெய்த*
*தேனாரின்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம்*
*நில்லாவே"*

– பெரிய திருமொழி 8.8.10.

திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் மச்சா வதாரம் முதல் கற்கி அவதாரம் வரை தம்முடைய திரு மேனியிலே காட்டியருள திருமங்கையாழ்வார் மிகவும் பக்திப் பரவசமானவராய் இத்தகைய பரம காருணிக னான எம்பெருமானை சேவித்தால் பக்தர்களின் அனைத்து பாவங்களும் நில்லாமல் விலகியோடி ஸ்ரீவைகுண்டப்பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கும் என அறுதியிடுகிறார்.

நவக்கிரகங்களை விஷ்ணுவின் பத்து அவதாரங் களோடு தொடர்புபடுத்தும் தசாவதார ஸ்தோத்திரம் மச்ச அவதாரத்தினை கேது கிரகத்தோடு தொடர்புபடுத்து கிறது. அதன்படி நவதிருப்பதி எனும்படியான திவ்ய தேசங்களை நவகிரகங்களோடு தொடர்புபடுத்தும் போது ராகு கேது ஸ்தலமாக திருத்தொலைவில்லி மங்க லம் எனும் இரட்டைத் திருப்பதி இருப்பதால் அரவிந்த லோசனன் மச்ச அவதாரத்திற்கான திவ்ய தேச எம்பெருமானாக விளங்கியருள்கிறார். மேலும் மச்ச அவதாரத்திற்கான திவ்ய தேசமாக சாளக்கிராமத்தினை பூர்வர்கள் கொண்டாடுகின்றனர்.

பெருமாள் அனுக்கிரகிக்கும் எண்ணிறந்த திருக் கல்யாண குணங்களில் மச்ச அவதாரம் வெளிப்படுத் துவது "ஈஷணத்வம்" எனப்படும் கடாக்ஷத்தால் இரட்சிப் பவன் எனும் குணமாகும். திருப்பதிக்கு அருகில் நாகலா புரம் எனுமிடத்தில் வேதங்களை காத்தருளியவன் எனும் படி வேதநாராயணன் எனும் திருநாமத்தோடு மச்ச அவ தாரத்தில் மூலவர் எம்பெருமான் அருள்பாலிக்கிறார். இத்தலத்தில் எம்பெருமானின் திருவடிகள் மீனின் வால் போன்றே காட்சியளிப்பது வேறெங்கும் காண இயலாதது.

*"ஓம் சமுத்ரராஜாய வித்மஹே*
*கட்கஹஸ்தாய தீமஹி*
*தன்னோ மத்ஸ்ய ப்ரசோதயாத்"*

– மத்ஸ்ய காயத்ரி

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



# நவமியில் இராமன் பிறந்தான்

– திருமதி. கௌசல்யா விஜயன், வேலூர்.

**தசரதன் கவலை :**

தசரதன் அயோத்தியை அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டான். வீரத்தில் சிறந்தவனாய் பல மன்னர்களை வென்று தன் நாட்டு மக்களை உயிராகக் கருதி நல்லாட்சி செய்தவன். அவனுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் பெரிதும் வருந்தினான். தனக்குப்பின் சூரிய குலத்து மன்னர்களால் சிறப்பாக ஆளப்பட்ட அயோத்தி நகரமும், அதில் வாழும் மக்களும், முனிவர்களும், அந்தணரும் பகைவர்களான அரக்கர்கள் படையெடுப்பால் துன்புற்று வருந்துவார்களே என்று வருந்தினான். அதனால் தனக்கொரு வாரிசு வேண்டும் என்று விரும்பிய தசரதன் அதற்கான வழியை அறிவதற்காகத் தம் குலகுருவான வசிட்டரிடம் சென்று, தன் மனதைப் பெரிதும் வாட்டும் குழந்தைப் பேற்றுக்கான வழிமுறைகளை கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

**வசிட்டரின் மனவோட்டம் :**

தசரதன் கூறியவற்றைக் கேட்ட வசிட்டரின் மனதில், முன்பொரு நாள் தேவலோகத்தில் நடந்த நிகழ்வுகள் காட்சிகளாகத் தோன்றின. "அனந்தன் என்னும் பெயருடைய ஆதிசேஷன் மீது வீற்றிருக்கும் திருமால், தேவர்களுக்குத் துன்பம் செய்யும் அரக்கர்களை அழிப்பேன்" என்று கூறிய வாக்குறுதியை எண்ணிப் பார்க்கிறார். அரக்கர்களால் தொடர்ந்து துன்பத்துக்கு ஆளாகும் தேவர்கள் இந்திரனுடன் சென்று சிவபெருமானைத் துதித்து அரக்கர்களை அழிக்க வேண்டும் என்று வேண்டினர். அப்போது சிவபெருமான் நான் இனி அரக்கருடன் போரிடமாட்டேன் என்றார்.

சிவபெருமான் தேவர்களையும், இந்திரனையும் அழைத்துக் கொண்டு பிரம்மன் இருக்கும் மேரு மலைக்குச் சென்றார். தேவர்கள், அரக்கர்கள் தங்களுக்கு இழைக்கும் கொடுமைகளை பிரம்மனை வணங்கிக் கூறினார்கள். பிரம்மனும், மற்ற தேவர்களும், சிவனும் தாமரை மலர் போன்ற தம் கைகளைக் கூப்பி மரகத மலை போன்ற திருமாலை மனதால் வணங்கினார்கள். பாற்கடலில் ஆதிசேஷன் மீது அரிதுயில் கொண்டிருந்த திருமால் தேவர்கள் வேண்டுதலை ஏற்று, செம்பொன் குன்று போன்ற கருடன் மீது சங்கு, சக்கரங்களைக் கைகளில் ஏந்தியவராய்த் தேவர்கள் முன் தோன்றினார். திருமாலைக் கண்டு ஆடிப்பாடி மகிழ்ந்த தேவர்கள் "அரக்கர்கள் தவம் செய்து எங்களிடம் பெற்ற வரத்தால் பலம் பெற்று எங்களை வருத்துகிறார்கள் எம்மைக் காத்தருள்க" என்று வேண்டினார்கள்.

திருமால் அவர்களது வேண்டுதலை ஏற்று "நான் வஞ்சகர்களான அரக்கர்களை வெட்டிக் கொன்று உங்களைக் காப்பேன். நீங்கள் அஞ்சி வருந்த வேண்டாம். நீங்கள் அனைவரும் பூவுலகு சென்று வானரர்களாகப் பிறக்க வேண்டும் என்றார். இராவணன் பிரம்மனிடம் வரம் பெற்றபோது, "மனிதர், குரங்குகளைக் கேவலமாக நினைத்து அவர்களை விலக்கி முனிவர், தேவர், அரக்கர்களால் தனக்கு மரணம் நேரக்கூடாது

என்று வரம் பெற்றான். அதனால் நான் தசரதன் மகனாக வும், என் சகோதரர்களாக அனந்தன் என்னும் ஆதிசேஷ னுடனும், சங்கு, சக்கரங்களுடனும் மனிதனாகப் பிறந்து இராவணனை அழிப்பேன்" என்று வாக்களித்தார். இதனை கேட்ட தேவர்கள் ஆடிப்பாடி திருமாலை பரவி னார்கள். அவரது கட்டளையை ஏற்ற தேவர்களில் பிரம்மன் நான் முன்பே "சாம்பவானாகப் பிறந்து விட்டேன் என்றான். நீங்களும் அவ்வாறே அவதாரம் செய்யுங்கள்" என்றான்.

இந்திரன் நான் "வாலியாகவும்", "அங்கதனாகவும்" அவதாரம் செய்வேன் என்றான். சூரியன் வாலியின் தம்பியான சுக்ரீவனாக அவதாரம் செய்வேன் என்றான். நெருப்புக் கடவுள் நான் "நீலன்" என்னும் பெயருடன் வானரமாகப் பிறப்பேன் என்றான். வாயு, எனது அம்சம் "மாருதி" என்று சொன்னான். திரிபுரம் எரித்த சிவன் நானும் வாயுகுமரனான "அனுமனாகப்(மாருதி)" பிறப் பேன் என்றார். மற்ற தேவர்களும் வானரர்களாகப் பிறப்போம் என்று கூறியதை நினைவு கூர்ந்து வசிட்டர் தசரதனிடம் உன் மனத்துன்பம் நீங்கி உனக்கொரு மகன் பிறக்க வழியுண்டு என்றார். அதற்காக நீ ஒரு யாகம் செய்ய வேண்டும் என்றார். இதனைக் கேட்டு தசரதன் மிகவும் மகிழ்ந்து, வசிட்டர் கால்களில் விழுந்து வணங்கி னான். அந்த யாகம் செய்ய வேண்டிய முறைகளைக் கூறும்படி வேண்டினான்.

வசிட்டரும் அந்த யாகத்தின் பெயர் புத்திர காமேஷ்டி யாகம். அதனைச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர் கலைக்கோட்டு முனிவர் மட்டுமே என்றார். இதனைக் கேட்ட தசரதன் வசிட்டரை வணங்கி, அம் முனிவர் எங்கிருக்கிறார் என்பதனைக் கூறுங்கள் என்று வேண்டினான்.

வசிட்டரும், தற்பொழுது கலைக்கோட்டு முனிவர் உரோமபத நாட்டில் உள்ளார். தசரத மன்னா! "உரோம பதன் நாட்டுக்குச் சென்று கலைக்கோட்டு முனிவரை அழைத்து வா" என்றார். வசிட்டர் கூறியபடி தசரதனும் உரோமபதன் நாட்டிற்குச் சென்றார். உரோமபதன் தசர தனை நோக்கி, தாங்கள் என்னை நாடி வந்த காரணத் தைக் கூற வேண்டும் என்று வேண்டினான். தசரதனும் வசிட்டர் தன்னிடம் கூறியவற்றைக் கூறினான். அதனைக் கேட்ட உரோமபதன் நான் கலைக்கோட்டு முனிவரை உமது அரண்மனைக்கு அழைத்து வருவேன் என்றான். அதன் பின் தசரதனும் அயோத்தி வந்தடைந்தான்.

### கலைக்கோட்டு முனிவர் அயோத்தி வருதல் :

உரோமபதன் கலைக்கோட்டு முனிவர் இருப்பிடம் சென்று அவர் பாதம் பணிந்து, "ஸ்வாமி தேவேந்திரனுக் காக அரக்கர்களை அழித்த தசரதன் தங்கள் உதவியை நாடி வந்தார்" என்றான். முனிவனும் அயோத்திச் செல்ல உடன்பட்டு தேரைக் கொண்டு வரச் சொன்னான். அயோத்தி வந்த முனிவரைப் பெரிதும் மகிழ்ந்து வர வேற்றான் தசரதன். அவர் பாதங்களில் வீழ்ந்து வணங் கினான். பிறகு முனிவரிடம், தனக்கு புத்திர பாக்கியத் திற்காக யாகத்தை செய்தருளும்படி வேண்டினான். தசரதனின் வேண்டுகோளை கேட்ட முனிவரும் தசரதா! உன் துன்பம் நீங்கியது. இந்த உலகைமட்டுமல்ல ஏழு உலகங்களையும் ஆளும் சிறப்புடைய மகனை நீ பெறு வாய். அதற்காக மிகப் பெரிய யாகம் ஒன்றை இன்றே தொடங்கலாம் என்றான்.

### புத்திர காமேஷ்டி யாகம் :

ஒரு நொடிப் பொழுதில் மிகப் பெரிய புத்திர காமேஷ்டி யாகத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பன்னிரெண்டு மாதங்கள் தொடர்ந்து யாகம் வளர்க் கப்பட்டது. தேவர்கள் வானுலகில் நெருங்கி நின்று யாகத்தைக் கண்டனர். அப்போது வேள்வித் தீயிலிருந்து சிவந்த கண்களுடன் பூதம் ஒன்று, அழகிய பொன்தட்டில் தூய்மையான அமுதம் ஒத்த பிண்டத்தைக் கையால் எடுத்துக்கொண்டு வந்தது. பொன் தட்டைத் தரையின் மீது வைத்து விட்டு மீண்டும் வேள்வித்தீயில் சென்று மறைந் தது. முனிவரும் தசரதனிடம் மன்னர் மன்னா! நீ இப்பூதம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!**

- முதன்மை மருத்துவ அலுவலர்

கொடுத்த அமுதப் பிண்டத்தை அரசிகளுக்குத் தருக என்றார். தசரதனும் பட்டத்தரசிகளான கோசலை, கைகேயி, சுமித்திரையின் கைகளில் பிண்டத்தை அருளினான். பின் தட்டில் சிதறியிருந்த பருக்கைகளைத் திரட்டி மீண்டும் சுமித்திரைக்கே அருளினான். யாகத்திற்குரிய பிற நிகழ்வுகளையும் முனிவர் கூறிய வண்ணம் தசரதன் செய்து முடித்தான்.

## இராமன் பிறந்தான் :

தசரதனின் பட்டத்தரசிகளான கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவர் வயிற்றிலும் அந்த அமுத பிண்டம் கருவாக வளர்ந்து பத்தாம் மாதத்தில் முழுமதி போல நிறைவடைந்தது. நிலமகள் மகிழும்படி புனர்பூசம் என்னும் விண்மீனும், தேவர்களும், கடக ராசியும் எழுந்து துள்ளி ஆரவாரம் செய்யும் நல்ல நேரத்தில் சித்தர், இயக்கர் அவரது தேவியரும், முனிவரும், வானுலகில் உள்ளவரும், நித்திய சூரிகளும் ஆரவாரம் செய்யவும், உலகம் நன்மை அடைய வேண்டும் என்பதற்காகவும், கார்மேக வண்ணனான "இராமனை" நவமி திதியில் கோசலை பெற்றெடுத்தாள்.

கைகேயி, பூச நட்சத்திரமும் மீன ராசியும் சிறந்து விளங்கும் நாளில் "பரதனை" (சக்கரத்தின் அம்சம்) பெற்றெடுத்தாள். இவ்விருவருக்கும் இளையவளான சுமத்திரை ஆயில்ய நட்சத்திரத்தில், கடக ராசியில் "இலக்குவனை"யும் (ஆதிசேடன் அம்சம்), மக நட்சத்திரத்தில் சிம்ம ராசியில் "சத்ருக்கனை"யும் (சங்கின் அம்சம்) பெற்றெடுத்தாள்.

## தசரதனின் கொடை :

இராமன் தசரதனுக்கு மகனாகப் பிறந்ததால், அரக்கர்கள் அழிந்தனர் என்று தேவர்கள் மகிழ்ந்தனர். "கின்னரர்" பாட "அரம்பையர்" ஆடினார்கள். தசரதன் தனக்கு நான்கு பிள்ளைகள் பிறந்த செய்தியைக் கேட்டவுடன் மகிழ்ந்து நீராடி நெல் முதலிய எட்டு பொருட்களை தானம் செய்து குலகுரு வசிட்டருடன் மக்களைக் கண்டு மகிழ்ந்தான்.

அயோத்தி மக்கள் அளவில்லா ஆனந்தமடைந்து ஆடிப்பாடினார்கள். தசரதன் தனக்கு கப்பம் கட்டும் (வரி கட்டும்) சிற்றரசர்கள் இனி ஏழு ஆண்டுகளுக்கு வரி கட்ட வேண்டாம் என்றான். தன்னால் சிறை வைக்கப்பட்ட அரசர்களை விடுவித்தான். அயோத்தி நகரம் எங்கும் விழாக்கோலம் காணட்டும், கோவில்களைப் புதுப்பியுங்கள், அறச்சாலைகளையும், நாற்சந்திகளையும் அமையுங்கள், தெய்வங்களுக்கு தீபமேற்றி மாலை அணிவியுங்கள் என்று பறையறையச் சொன்னான். வள்ளுவனும் யானை மேல் இருந்து பறையறைந்து செய்தியைக் கூறினான்.

## அயோத்தி மக்களின் ஆரவாரம் :

இதனைக் கேட்ட மக்கள் எண்ணையையும், நறுமணப்பொருட்களையும் வீதிகளில் தூவினார்கள். பன்னிரெண்டு நாட்கள் இவ்வாறு மக்கள் ஆடிப்பாடினர். பன்னிரெண்டாம் நாள் வசிட்டர், "ஆதிமூலமே" என்றழைத்த கஜேந்திரன் என்னும் யானையின் காலைக் கவ்விய முதலையைக் கொன்று யானையைக் காத்த உண்மைப் பொருளானத் திருமாலின் அவதாரமாகப் பிறந்துள்ள தசரதனின் மூத்த மனைவியான கோசலையின் மகனுக்கு "இராமன்" என்றும், இரண்டாம் மனைவியான கைகேயையின் மகனுக்கு "பரதன்" என்றும் தசரதனின் மூன்றாம் மனைவியான சுமித்திரையின் முதல் மகனுக்கு "இலக்குவன்" என்றும், அவள் பெற்ற இரண்டாம் மகனுக்கு "சத்ருக்னன்" என்றும் பெயர் சூட்டினார்.

வசிட்டர் சக்கரவர்த்தி தசரதன் மக்கள் நால்வருக்கும் வேதங்களையும், படைப்பயிற்சிகளையும் கற்பித்தார். நால்வரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். பொழில்களில் விளையாடியும், நீராடியும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தனர். தேவர்களும் எப்பொழுதும் அவர்களை விட்டு விலகாதிருந்தனர். அயோத்தி நகர மக்கள் பெற்ற தாய்போல அவர்களது வளர்ச்சியைக் கண்டு களித்தனர்.



திருமலை திருப்பதி
தேவஸ்தானம்



# “ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்ப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்ப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடை யாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. எனவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

*கொண்டுவரப்படுகிறது.*

*அது எங்ஙனே எனில் ஒரு நாளைக்கு ஆகும் செலவு :*

| | | |
|---|---|---|
| 1) | காலை உணவு | - 6 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 10 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 10 இலட்சம் |
| | மொத்தம் | - 26 இலட்சம் |

0877-2264258
0877-2264375
0877-2264237

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இந்தத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகின்றது. நன்கொடையாளர்/தனிப்பட்ட நபர்/நிறுவனங்கள்/நிறுமங்கள்/அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.26 இலட்சமோ/காலை உணவு ரூ.6 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.10 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.10 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

“சிறப்பு அலுவலர், ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிராசாத அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம் நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி”

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களை காணலாம்.



# மதுரகவியாழ்வாரின் ஆசாரிய நிஷ்டை



– திரு. எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.

எந்த உயர்ந்த அர்த்தங்களும் பரதெய்வத்தை மதித்து வணங்குவதைப் போல் குருவையும் மதித்து வணங்குபவனுக்கே சொல்லப்பட வேண்டும். குருவை தெய்வமாகக் கொள்ள வேண்டும். தைத்திரீய உபநிஷத் *"ஆச்சார்ய தேவோ பவ"* என்கிறது.

குரு தான் பிரம்மம். குருதான் மேலான வழி. குரு தான் மேலான வித்தை. குருதான் மேலான பொருள். குருதான் அடையத்தக்கவன். குருதான் மேலான செல்வம். குருதான் எல்லாம். இதுவே ஆசாரிய சிஷ்டை. பகவானைப் பற்றி உபதேசம் செய்வதால் எம்பெருமானைக் காட்டிலும் சிறந்தவன்.

## ஆசாரியனே சிறந்தவன் :

வேதங்கள், தேவதைகளிடம் பக்தி செய்யச் சொல்வதை விட, ஆசார்யனிடம் பக்தி செய்ய வேண்டுவதையும், அவன் காட்டிக் கொடுக்கும் பர தெய்வத்திடம் பக்தி செய்ய வேண்டுவதையுமே அதிகம் வலியுறுத்தின. யார் ஆசாரியன் என்றொரு கேள்வி. அம்பொன் அரங்கற்கும், ஆவிக்கும், சம்பந்தங் காட்டி, தடை காட்டி, உம்பர் திவம் (பேறு) என்னும் வாழ்வுக்கு சேர்த்த நெறி (உபாயம்) காட்டுபவன் ஆசாரியன். (விளாஞ்சோலைப் பிள்ளை வாக்கு)

பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் பாலம் அமைப்பவன் குரு. இதயத்தில் உள்ள அஞ்ஞான இருட்டை விரட்டி அடிப்பவன் குரு.

ஈஸ்வர சம்பந்தம் நல்லதுதான். ஆனால் அது பந்தம், மோட்சம் இரண்டுக்கும் பொதுவாக இருக்கும். ஆனால் ஆசாரிய சம்பந்தம் என்பது மோட்சத்துக்கு ஹேதுவாக இருக்கும் என்கிறது ஸ்ரீவசன பூஷணம்.

## ஆசாரிய அபிமானமே மதுரகவியாழ்வார் வாழ்க்கை :

இந்த ஆசாரிய நிஷ்டையை உலகுக்குத் தன் செயலாலும், சொல்லாலும் நிரூபித்துக் காட்டியவர்தான் மதுரகவியாழ்வார். இதைச் சொல்வதே மதுரகவி ஆழ்வார் வாழ்க்கைச் செய்தி. பாண்டிய நாட்டில் உள்ள திவ்ய தேசம் திருக்கோளூர். அது தான் மதுரகவியாழ்வார் அவதரித்த ஊர்.

எம்பெருமானுக்கு "வைத்த மாநிதிப் பெருமாள்" என்று பெயர். குபேரன் தன்னுடைய நிதி களை எல்லாம் இழந்து, வைத்த மாநிதிப் பெருமாளை நோக்கி தவம் இருந்து நவநிதிகளையும் பெற்றதாக தல வரலாறு

கூறும். நமக்கும் மதுரகவியாழ்வார் மூலமாக நவ நிதியத்தை வைத்த மாநிதிப் பெருமாள் தந்திருக்கிறார். அவர் மூலமாகத் தான் நவநிதியங்களான ஆழ்வார்களின் அருளிச் செயல் பாசுரங்களும் நமக்குக் கிடைத்தன.

பிராமண குலத்தில் பிறந்த இவர் வேத வேதாந்தங்கள் என்று மரபுக்கே உரிய கல்வியைக் கற்று, இளம் வயதிலேயே பெரிய பண்டிதர் ஆனார். இறையநுபவம் பெற வேண்டி வடமதுரை, காசி, கயை, நைமிசாரண்யம், சாளக்கிராமம், பதரிகாச்ரமம் என்று அத்தனைத் தலங்களையும் தரிசித்தவர், ஸரயூ நதிக்கரையில் அமைந்திருக்கும் அயோத்தி மாநகரத்தை அடைந்தார்.

அங்கே அர்ச்சாவதார அழகனாய் எழுந்தருளியிருக்கும் இராமபிரானைச் சேவித்துக் கொண்டே பல நாட்கள் தங்கியிருந்தார். ஓர் நாள் இரவு. தான் பிறந்த ஊரான திருக்கோளூரின் திசை நோக்கித் தொழுவதை வழக்கமாகக் கொண்டிருந்த மதுரகவிகள், அன்றும் தென்திசை நோக்கி தியான ரூபமாய்த் தொழுது நின்றபோது, வானத்தில் அதிசயிக்கத்தக்க ஓர் ஜோதியைக் கண்டு வியந்தார்.

ஜோதி தெரியும் திசையையே ஆதாரமாகக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

### நம்மாழ்வாரே குரு :

பல நாட்கள் நடையாய் நடந்து திருக்குருகூர் அடைந்தார். அங்கே அழகே ஓர் வடிவாய், சின்முத்திரையோடு, ஆடாது அசையாது, வாடாது, வதங்காது, அமர்ந்திருக்கும் பாலகனின் எழில் தோற்றத்தைக் கண்டார். உள்ளுணர்வும் மெய்யுணர்வும் உந்தித் தள்ள தன் குருவைக் கண்டார். அடுத்த கணம் வயதில் மூத்தவரான மதுரகவிகள், ஞானத்தில் மூத்தவரான நம்மாழ்வாரின் திருவடிகளில் வீழ்ந்தார். *''அடியேனை ஏற்றருள வேண்டும்''* என்று பிரார்த்தித்தார்.

இப்படிப்பட்ட சீடருக்காகவன்றோ வேறு யார் தொடர்பும் இல்லாமல், இத்தனை காலம் காத்திருந்தார் அவர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஆழ்வார் செந்தமிழால் எம்பெருமானைப் பாட ஆரம்பித்தார். அவற்றை மதுரகவியாழ்வார் ஓலைப்படுத்திக் கொண்டே வந்தார். வேதம், தமிழில் ஆழ்வாரின் வாய்மொழியாக வெளிப்பட்டது. அதை மதுரகவியாழ்வார் எழுதிக் கொண்டே வந்தார். ஆழ்வார்கள் 12 பேர். அதிலே தலையானவர் நம்மாழ்வார்.

“அவயவி” என்பார்கள். “பிரபன்ன ஜன கூடஸ்தர்” என்றும் சொல்லுவார்கள். வேதங்களை நான்காக வகுத்து அதனை உலகமெல்லாம் பரப்பியவர் வேத வியாசர். வியாசரைப் போன்ற நம்மாழ்வாரின் தமிழ் வேதமான திருவாய்மொழியைப் பாடிப் பரப்பியவர் மதுரகவியாழ்வார்.

### நம்மாழ்வாரும் மதுரகவிகளும் :

பகவானைப் பார்த்து, பகவானே “நீ எனக்கு அமுதமாக இருக்கிறாய்” என்று பாடினார் நம்மாழ்வார். அப்படிப் பாடிய நம்மாழ்வாரின் திருப்பெயரை *“தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே என”* அதரத்தில் ஊறும் அமுதமாகக் கொண்டார் மதுரகவி ஆழ்வார். ஆவியே அமுதே என அச்சுதனைப் பற்றினார் அவர் (நம்மாழ்வார்). *''தேவுமற்றறியேன்''* என்று நம்மாழ்வாரை விடாப்பிடியாகப் பிடித்து கொண்டவர் மதுரகவியாழ்வார். அதனால்தான்

*“அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு*
*துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்*
*தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே!”*

என்று மதுரகவியாழ்வாரின் ஏற்றத்தை வேதாந்த தேசிகர் பாடினார்.

### சத்ருக்கண நிஷ்டை :

இராமாயணத்திலே பரதனைத் தவிர வேறு அறியாத சத்ருக்கணனின் தன்மையில் ஆழ்வார் பாவம் இருப்பதாக தமது விரிவுரையில் நம்பிள்ளை பேசுவார்.

பிதுர் வாக்ய பரிபாலனம் போன்ற சாஸ்திர தர்மங்களை நடத்திக் காட்டிவன் இராமன். அவனுக்கு ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்தவன் இலக்குவன். (பகவத் தொண்டு) அதனால் ஸ்ரீமாந் ஆனவன். பகவான் உகந்த தொண்டையும் பகவான் நியமித்த தொண்டையும் செய்தவன் பரதன். அதனால் நிகரிலா புகழை அடைந்தவன். பரம பாகவதன் என்று நிலை அடைந்தவன். அந்த பாகவதனுக்கு அருகிருந்து தொண்டு செய்தலையே தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டவன் சத்ருக்ணன். இதைத்தான் பக்தியின் நிறைவான நிலை (சரம பர்வ நிஷ்டை) என்பர். அந்த நிஷ்டையே மதுரகவியின் நிஷ்டை. ஆசாரிய நியமனத்தாலே பகவானை தரிசித்தவர். ஆசாரியர்களிலே வடுக நம்பியின் நிஷ்டையும் இதுதான்.

### ஆசாரிய அபிமானம் காட்டும் பிரபந்தமே இவருடையது :

ஆசாரிய அபிமான பிரபந்தமே கண்ணிநுண் சிறுத்தாம்பு.

*"வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல்*
*சீர்த்த மதுரகவி செய்கலையை ஆர்த்த புகழ்*
*ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே*
*சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து"*

என்று இதன் சிறப்பை உபதேச ரத்னமாலையில் போற்றுவர் ஸ்ரீமணவாள மாமுனிகள்.

வேதங்களின் சுருக்கம் திருமந்திரம். அந்த எட்டெழுத்து மந்திரத்தின் இடையில் உள்ள பதம் "நம:" பதம். "ம" என்றால் எனக்கு; "ந" என்றால் இல்லை என்று அர்த்தம். "நான் எனக்கு உரியவன் அல்ல" என்பதுதான் நம பதத்தின் பொருள். "நான் எம்பெருமானுக்கு சேஷமானவன்" என்று சொல்வதுதான் அந்தப் பதத்தின் பொருள்.

நான் என்னுடையவன் அல்ல என்று சொன்னால் அடுத்த கேள்வி எழும். பின் நீ யாருக்கு உரியவன் என்று.

சாதாரண விடையாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பெருமானுக்கு உரியவன் என்று சொல்லலாம். சிறப்பான பொருளில் இதன் பொருளைத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் இந்த ஆத்மாவானது ஆசாரியனுக்கு உரியது என்று தான் விடை வரும். இந்த விடையைச் சொல்வது தான் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தம்.

ஆழ்வார்கள் அருளிச் செயலின் பாசுரங்களை எல்லாம் ஒரு தட்டிலும், மதுரகவி ஆழ்வார் பாடிய கண்ணிநுண் சிறுதாம்பு பாசுரத்தை ஒரு தட்டிலும் வைத்தால் கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரம் வைத்த தட்டு தான் பாரத்தால் இறங்கி இருக்கும். காரணம் அது ஆசாரிய அபிமானத்தைக் காட்டும் பிரபந்தம்

### இங்கேயே மோட்சம் :

பெருமானின் கிருபை இருந்தால் நாம் இறப்பிற்குப் பின் சென்று வைகுந்தத்தை காண முடியும்.

ஆச்சாரிய அபிமானமும் அருளும் நம்பிக்கையும் இருந்தால் அந்த வைகுந்தத்தை இங்கேயே காணலாம்.

*"குருகூர் நம்பிக்கு அன்பனாய் மதுரகவி சொன்ன சொல் நம்புவார்வதி வைகுந்தம் காண்மினே"*

என்று இதைத்தான் தன் அனுபவமாகப் பாடினார் மதுரகவி.


### நாதமுனிகள் தந்த சாவி :

எம்பெருமானைத் தெரிந்து கொள்வதற்கு 4000 பாசுரங்கள் வேண்டும். 4000 பாசுரங்கள் எம்பெருமானைக் காணுவதற்கான வாசல் என்று சொன்னால் அந்த வாசலைத் திறக்கின்ற சாவிதான் கண்ணிநுண் சிறுதாம்பு.

மதுரகவியாழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற சாவி கொண்டுதான் நாதமுனிகள் 4000 பாசுரங்களையும் பெற்றார். நம்மாழ்வார் மதுரகவியாழ்வாரை தனக்காக எழுதிக் கொண்டதை "ததேக சேஷி" என்ற பதத்தால் ஸ்ரீநாதமுனிகள் தனியனிலே காட்டுகின்றார்.

### வேதத்தின் உட்பொருள் இதுதான் :

பாட்டு கேட்கும் இடமாக பரமபதத்தையும், கூப்பாடு கேட்கும் இடமாக பாற்கடலையும், குதித்த இடமாக விபவத்தையும், வளைத்த இடமாக அர்ச்சாவதாரத்தையும் காட்டுவார்கள்.



## வாசகர்களுக்கு அறிவிப்பு

பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ்இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர்
அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

மதுரகவியாழ்வாருக்கு இந்த இடங்கள் அனைத்தும் நம்மாழ்வார் தான். அவரை சமஸ்த விஷயமுமாய் (எல்லாமுமாய்) அன்னையாய் அத்தனாய் தன்னை ஆண்டிடும் தெய்வமாய் நினைத்தார். "ஆராவமுதே" என அழைத்து புகல் ஒன்றும் இல்லா அடியேன் உன் அடிக் கீழ் புகுந்தேன் என்று பரமாத்மாவின் திருவடிகளில் சரண் புகுந்தார் நம்மாழ்வார். அந்த "நம்மாழ்வார் பாசுரங்களைப் பாடி" *"நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன் பாவின் இன்னிசை பாடி மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே"* என்று ஆழ்வாரிடம் சரணம் புகுந்தார் மதுரகவியாழ்வார். வைணவத் தத்துவத்தில் ஆண்டவனுக்கு, அடிமைப்படுதலை "முதல் நிலை" என்பர். அவன் அடியார்க்கு அடிமைப்படுதலை "இறுதி நிலை" (சரம நிலை) என்பர். இதனை மதுரகவியாழ்வாருக்கு யார் சொல்லித் தந் தது? நம்மாழ்வார்! எப்படி? மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான் என்று ஆசாரியனின் உதவியை காட்டி கண்ணீர் வடிக்கிறார் மதுரகவி (பாட்டு9) *"பயிலும் சுடரொளி"* என்கிற திருவாய்மொழி மூலமும் *"நெடுமாற்கு அடிமை"* என்ற திருவாய்மொழி மூலமும் இதனைச் சொன்னார்.

*"கல்லைக் குழித்து நீரை நிறுத்துவாரைப் போல"* இந்த அற்புதமான கருத்துக்களை நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார் மனத்திலே நிறுத்தி விட்டதாக நஞ்சீயர் விரிவுரை இடுவார்.

### நம்மாழ்வார் நிஷ்டையும் மதுரகவிகள் நிஷ்டையும் :

பகவான் பல அவதாரங்களை எடுத்தாலும் கூட கிருஷ்ணாவதாரம் சிறப்பானது. அதிலும் அவருடைய பால லீலைகள் சிறப்பானது. காரணம் பகவான் தன் மேன்மையையும் பெருமையையும் எளிமையையும் ஒன்றாக காட்டியது அதில்தான். வெண்ணெய் திருடி அகப்பட்டுக் கொண்டு ஆய்ச்சியின் குறுந்தாம்பினால் கட்டுப் பட்டவன்.

மத்துறு கடை வெண்ணெய் களவினில் ஆப்புண்டு எத்திறம் உரலிடை இணைந்திருந்து ஏங்கிய எளிவே! என்று சௌலப்பிய குண விசேஷத்தில் ஆறு மாதம் மோகித்து விழுந்தார் நம்மாழ்வார். அப்படி மயங்கி கிடந்த நம்மாழ்வாரிடம் மயங்கினார் மதுரகவி ஆழ்வார்.

### பிடித்தார் பிடித்தாரைப் பற்றி :

வேத வேதாந்தங்களின் அர்த்தத்தை தன்னுடைய சீடனுக்கு மறைக்காமல் காட்டுவது ஆசாரியன் வேலை. அப்படிக் காட்டிக் கொடுத்த ஆசாரியனுடைய புகழைப் பரப்புவது சீடனின் வேலை. ஆச்சாரியரான நம்மாழ்வாரின் நான்கு வேதத்துக்கு நிகரான நான்கு பிரபந்தங்களையும் பரப்பியவர் மதுரகவி ஆழ்வார். அதற்காக தாமிரபரணி தண்ணீரைக் காய்ச்சி ஒரு திரு உருவத்தையும் பெற்றார். எங்கெங்கும் அவர் புகழைப் பரப்பினார்.

*"பெருமான் வகுளாபரணன் அருள் கூர்ந்து ஓவா துரையா பிரமா மறையின் ஒரு சொல் பெறுமோ உலகிற் கவியே'* என நம்மாழ்வார் பிரபந்த ஏற்றத்தை நாடு போற்ற பரப்பினார். அதன் பெருமைக்கே மதுரமான வாக்கினால் பதினோரு பாசுரங்களைப் பாடினார். ஆசாரியனைப் பற்றிய பாடல்கள் "மதுரம்" என்பதினாலேயே இவருக்கு மதுரகவியாழ்வார் என்று பெயர்.

ஆசாரிய சேஷத்துவத்தின் சிகரம் என்று மதுரகவி ஆழ்வாரை அழைப்பர். அவர் பகவானைப் பிடித்தார். பகவானைப் பிடித்த ஆழ்வாரை இவர் பிடித்தார். *"பிடித்தார் பிடித்தாரைப் பற்றி"* என்று இதுவும் நம்மாழ்வார் காட்டிக் கொடுத்த வழிதான். ஆயிரம் திருவாய்மொழி படிக்க அவகாசமில்லாதவர்கள் கண்ணிநுண் சிறுத்தாம்பு 11 பாடல்களையும் கட்டாயம் படிக்க வேண்டும்! ஆசாரிய அபிமானத்தைப் பெற அதுவொன்றே வழி.

ஸ்ரீமதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்.

வாழ்க்கை நெறிகள் தொடரும்...




*"ராமாநுஜேர்முநிர் ஜீயாத்யோ ஹரேர் பக்திமந்த்ரத:
கலிகோலாஹல க்ரீடாமுதக்ரஹ மபாஹரத்"*

ஹரிபக்தி ஒரு யந்த்ரம் என்றும், அது கலிபுருஷனின் அட்டஹாஸங்களை ஓட ஓட விரட்டியது. அதற்குக் காரணம் எம்பெருமானார் ஆவார். அவருக்குப் பல்லாண்டு.

*"ஸ்ரீபராசர பட்டார்ய சரணௌ ஸம்ச்ரயே மஹதி
யதி வக்த்ர
ரங்கேரங்கேச கோஷ்ட்யாம் ப்ராஹ்மீ ப்ரந்யருதி"*

நம்பெருமாளுடைய திருவோலக்கத்தில் எந்த பட்டருடைய முகம் நடைமேடையை ஒத்ததோ, அந்த மேடையில் ப்ரம்ம வித்யையானது அங்கு நர்த்தனமாடுகிறது. அந்த பராசரருடைய திருவடிகளே அதற்குக் காரணம். அப்பேர்ப்பட்ட புகழையுடைய ஸ்ரீபராசர பட்டரின் திருவடிகளை ஆச்ரயிப்போம்.

ஆழ்வார்கள், எம்பெருமானைத் தவிர வேறு எவரையும் தொழ மாட்டார்கள். *"திருவில்லாத்தேவரை தேறேல்மின் தேவு"* என்ற நிலைப்பாட்டினை உடையவர்கள் ஆழ்வார்கள். அமுதுபோன்ற, மேலெழப் பார்த்தோமேயானால் ஓரளவுக்கு அதன் அர்த்தங்களை அறிய முடியும். ஆனால், நம் ஆசார்யர்கள், அவற்றை தங்களது அனுஷ்டானத்திலும் கொண்டு வந்து, வைஷ்ணவத்திலும் நடைமுறையாக்கி தரிசனத்தை நிலைநாட்டினர். அவர்களில் தலைவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார் ஆகியோர் *"குரூத்தம கூரநாத பட்டார்ய தேசிக"* என்கிறார் மணவாள மாமுனிகள். "யதிராஜ விம் சதியில்", அதில் நடுநாயகமாக விளங்கியவர் நம் எம்பெருமானார்.

ஆளவந்தாரால் நேரே கடாக்ஷம் பெற்று அருள் பெற்றவர் நம் ஸ்வாமி எம்பெருமானார். வேதார்த்த ஸங்க்ரஹம், வேதாந்த ஸார தீபங்கள், கீதாபாஷ்யம் ஆகியவற்றை, "கூரநாத:" என்று போற்றும்படியான கூரத்தாழ்வான் போல்வார்க்கு உபதேசித்தார். வேத வ்யாஸரின் ப்ரம்மஸூத்ரங்களுக்கு, வேத வாக்கியங்களின் உண்மைக் கருத்துகளை முரண்பாடில்லாத வகையில், ஆளவந்தாரின் விருப்பப்படி எம்பெருமானார் பூர்த்தி செய்தார்.

பங்குனி உத்திரத்தில், பெரிய திருவோலக்கத்தில், பரமபதத்தில் இருப்பது போன்ற சேர்த்தியில் "கத்ய த்ரையத்தை" சமர்ப்பித்தார். சரணாகதி திவ்ய சாஸ்த்ரத்தை அறிந்து உய்ந்து போகும் வழியை நமக்குக் காட்டினார். அதனால் நமக்கு "உய்யவழி உடையவர் வழி" ஆகும். ஆசார்யர்களில் அதிக ஏற்றம் கொண்டவர் ஸ்ரீபராசர பட்டர் என்றால் அது மிகையாகாது. கூரத்தாழ்வானுக்கு இரட்டை திருக்குமாரர்கள் திருவவதரித்த தினம் சுபக்ருத் வருஷம் வைகாசி மாதத்தில் பௌர்ணமி திதியும் அனுஷ நக்ஷத்திரமும் கூடிய புதன் கிழமையாகும்.

திருக்குமாரர்கள் அவதரித்தவுடன், பதினேழாம் நாள், ஸ்ரீபாஷ்யகாரர் ஆழ்வான் திருமாளிகைக்குச் சென்று, குழந்தைகளைக் கொண்டு வர எம்பாரிடம்




பணிக்க, எம்பாரும் குழைந்தைகளை எடுத்து வரும் போது, திருஷ்டி தோஷங்கள் வராதபடியாக, ரக்ஷையாக, "த்வய" மந்த்ரத்தை அநுஸந்தித்து, வாழ்த்திக் கொண்டே எம்பெருமானார்க்குக் காட்டினார்.

எம்பெருமானாரும், எம்பாரை, "இக்குழந்தைகள் உய்வதற்கான செய்கையை செய்தற்கு முற்பட்ட படியால் இவர்களுக்கு நீரே ஆசார்யராகக் கடவீர்" என்றார். மூத்த குழந்தைக்கு "பராசரபட்டர்" என்றும், வியாசரின் அவதாரமான இளைய குழந்தைக்கு "வேத வ்யாஸ பட்டர்" எனவும் திருநாமம் சாற்றினார். இதனால் ஆளவந்தாரின் குறையை நிவர்ப்பித்தார் எம்பெருமானார். வேதவ்யாஸ பட்டருக்கு, தன் பாட்டனாரான ஸ்ரீராம ஸோமயாஜியாரின் பெயரான "சீராமப்பிள்ளை" என்ற திருநாமமும் உண்டு.

ஸ்ரீரங்கநாதன் அபிமான புத்ரரானபடியால் "ரங்க நாத புத்ரர்" என்று பராசரபட்டர் அழைக்கப்படுகிறார். மிக்க சிறுவயதில், ஒரு நாள் திருவாய்மொழியை அனுஸந்திக்கும்போது *"உறுமோ பாவியேனுக்கு"* என்று பாசுரத்தை கூரத்தாழ்வான் கூறக் கேட்டு, அதில் "சிறு மாமனிசர்" என்ற வார்த்தையை பட்டர் வினவ, அதற்கு பிரயத்க்ஷமாக "அருளாளப் பெருமாள் எம்பெருமானார்" போன்றோர் என்றார் கூரத்தாழ்வான். ஒரு நாள் ஸ்ரீபாஷ்யகாரர், பட்டரின் வேதாந்த உபந்யாசத்தைக் கேட்டு, அவருக்கு "வேதாந்தாசார்யார்" என்ற சிறப்புப் பெயரை அளித்தார். மேல் நாட்டில், திருநாராயணபுரத்தில் பங்குனி உத்திர நக்ஷத்திரத்தில் அவதரித்த "மாதவசூரி" என்பவர் "வேதாந்தி" என்றழைக்கப்பட்டார். எம்பெருமானார் நியமித்தபடியே "திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம்" கொண்டு, பட்டர் அவரை திருத்தி "நஞ்சீயர்" என்று திருநாமம் சாற்றினார்.

பட்டர் இயற்றிய ஸ்ரீகுணரத்ன கோஸத்தில், "மாதர் மைதிலி" என்ற சுலோகத்தில், தேவர்கட்கு தேவனான அழகிய மணவாளன் உம்மிடம் ஏற்பட்ட பித்தனானவன். மகனின் நன்மையை விரும்பி மிகவும் கோபம் கொள்கிறான். அப்போது தேவரீர் எம்பெருமானிடம், "சினம் வரக் காரணம் என்?" என்று கேட்க, "அபராதங்களைச் செய்தவன்" என்று கூற அப்போது தேவரீர் "இப்படி ஆராய்வது உம்முடைய குணத்திற்கு ஏற்றதன்று". ஏனெனில் "குற்றங்களே மலிந்த இவ்வுலகில் குற்றமற்றவன் எவனிருக்கிறான்? மணற்சோற்றில் கல் ஆராய்வாருண்டோ?" என்று கூறி, எம்பெருமானின் வாத்ஸல்ய, ஸௌசீல்யாதி குணங்களை அடியார்களிடத்திலும், ஞானம், சக்தி முதலானவற்றை விமுகர் விஷயத்திலும் செய்து இவனைக் காப்பீர்" என்று அவனது (எம்பெருமானது) சினத்தை முற்றிலும் நீக்குகிறாள்.

சேதனர்களின் அபராதங்களைப் போக்குகிறாள். சேதனனை பகவானுக்கு பிரியமாக்குகிறாள். ஆகவே, பிராட்டி, ஆழ்வாரின் வாக்குப்படி *''அகலகில்லேன் இறையுமென்று''* எம்பெருமான் திருமார்பிலே வர்த்திக்கிறாள். அதனால் எம்பெருமானுடைய ஸ்வதந்த்ரம் தாழ்ந்து, அருள் மேலிட்டு, குற்றவாளியான நம்மைக் காக்கிறான்" என்கிறார்.

பிராட்டிக்கு நம்மிடம் இருக்கும் அன்பை, *"ஜனன பவந... மோதயே"* என்கிற சுலோகத்தில், பிறந்த வீடு என்கிற காரணத்தால், தேவரீர் திருப்பாற்கடலை மதிக்கிறீர். அதனால் அங்கே வசிக்கிறீர். உம்முடைய உயிரைக் காட்டிலும் சிறந்த கணவரான நாராயணனிடம் உள்ள பேரன்பால், கணவன் வீடான பரமபதத்தில் வசிக்கிறீர். தன் தகப்பன் வீடான திருப்பாற்கடல், தன் கணவன் வீடான பரமபதம் இரண்டையும் மறந்து, எங்களைப் போல கைம்முதலில்லாத பாமரர்களைக் காக்கும் பொருட்டு திருவரங்க மாநகரில், எல்லோருடைய கண்களுக்கும் இலக்காய் மிக மகிழ்வுடன் எழுந்தருளியிருக்கிறீர்.

ஒரு பெண்ணுக்கு முதலில் விருப்பமானது அவளது பிறந்த வீடு. திருமணத்திற்குப் பிறகு பிறந்தகத்தையும் நினைக்கமாட்டாள். புக்ககத்தையே விரும்புவாள். ஆனால் குழந்தைகள் பிறந்த பின் அவள் வசிக்க விரும்புவது குழந்தைகளிடத்தில் தான். அதிலும் ஏதுமறியாத பிள்ளைகளிடத்திலே அவள் கருணை அதிகமாகிறது. ஆகவே, பதிக்குணங்களையும் நினையாமல் பிராட்டி அடியார்களிடம் "தாய்ப் பசுவானது கன்றிடத்து" உள்ள வாத்ஸல்யத்தினால், "திருவாளன் திருப்பதி"யான ஸ்ரீரங்கத்தில் ஆனந்த அனுபவம் செய்கிறாள்.



# திருமலையானின் மனம் கவர்ந்த அன்னமய்யா

இறைவனைப் போற்றிப் பாடும் பாடல்கள் மூலம் பக்தி உணர்வை பாமர மக்களிடையே பரப்பியவர்கள் சங்கீத மூர்த்திகளான தியாகராஜ பாகவதர், முத்துசுவாமி தீட்சிதர், ஸ்யாமா சாஸ்திரிகள் போன்றவர்கள். இவர்களைத் தவிர முத்துத்தாண்டவர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர், பாபநாசம் சிவன் உள்ளிட்ட எண்ணற்ற கவிகளைச் சொல்லலாம்...

இப்படிப்பட்ட பெரும் கவிகள் பட்டியலில் தாள்ளப்பாக்கம் அன்னமய்யா குறிப்பிடத்தக்கவர். திருப்பதியிலிருந்து கடப்பா செல்லும் வழித்தடத்தில் சுமார் 105 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் தாள்ளப்பாக்கம். இங்கு ராஜம்பேட்டை என்ற நிறுத்தத்தில் இறங்கினால் அங்கிருந்து அன்னமய்யாவின் அவதாரத்தலத்தை அடையலாம்.

இவர் திருமலை திருவேங்கடவன் மீது தான் கொண்டிருந்த அதீத பக்தியின் காரணமாக இனிய தெலுங்கு மொழியில் பல்லாயிரம் பாடல்களைத் தானே இயற்றிப் பாடியவர். அன்னமய்யா, சிறுவயதிலேயே, திருப்பதி திருவேங்கடவன் அருளோடு பாடத் தொடங்கினார், தம் வாழ்நாளில் சுமார்... 32 ஆயிரம் கீர்த்தனைகள் பாடியிருக்கிறாராம். ஆனால், அவைகளில் நமக்கு கிடைத்திருப்பது சுமார் 13 ஆயிரம் கீர்த்தனைகள் மட்டும் தான்.

வேதம், புராணம், உபநிஷதம் போன்றவற்றில் இருக்கும் ஆழமான கருத்துக்களைத் தன் எளிய பாடல்கள் மூலம் சாமானியர்களிடமும் கொண்டு சேர்த்தவர். திருமால் ஏந்தி இருக்கக் கூடிய ஆயுதங்களுள், வாளின் அம்சமாக அவதரித்தவர் என்கின்றனர். அவர் தெலுங்கு, சமஸ்கிருதம் என இரு மொழிகளில் தேர்ந்த புலமை கொண்டவராக விளங்கினார்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் நாராயண சூரி – அக்காலம்மா, தம்பதிக்குத் திருமகனாக அவதரித்தார். அன்னமய்யா திருப்பதி திருவேங்கடவனைப் பிரார்த்தித்து அவரது திரு அருளால், பிறந்த குழந்தை.

எட்டு வயதும், எட்டின் மடங்கில் வருகிற வயதுகளும் (எட்டு, பதினாறு, இருபத்து நான்கு...) ஒவ்வொருவரின் வாழ்வில் பல்வேறு திருப்பு முனைகளை ஏற்படுத்த வல்லது. அதன்படி அன்னமய்யாவுக்கு எட்டு வயதாக இருக்கும் போதே, திருப்பதியில் அருள்பாலிக்கும் அலர்மேலு மங்கைத் தாயார் இவரது கனவில் தரிசனமளித்தார். இந்தத் தரிசனத்தால் பெரிதும் பரவசப்பட்ட அன்னமய்யா, நூறு பாடல்களை அலர்மேலு மங்கைத் தாயாரின் மீது எழுதினார். இதில் இன்னொரு ஆச்சரியம்



– திரு. கே.எஸ். மணி,
செஞ்சிக்கோட்டை.

என்னவென்றால் அன்னமய்யாவுக்கு அதற்கு முன் பாடல்கள் புனையும் திறன் கிடையாது.

ஒரு நாள் பசுக்களுக்கு புல் அறுத்து வருவதற்காக அன்னமய்யா அனுப்பப்பட்டார். அதுவரை அவருக்குப் புல் அறுத்து பழக்கம் இல்லை. கையில் அறிவாளுடன் சென்றவர் அறுப்பதற்குத் தேவையான புல், எங்கே மண்டிக் கிடக்கின்றன என்று தேடிக் கொண்டிருந்தார். அப்போது நடைபயணமாக திருமலை திருவேங்கடவனின் திருநாமங்களான **"கோவிந்தா... கோவிந்தா..."** என்று கோவிந்தனை, போற்றிப் பாடியபடி ஒரு பஜனைக் குழுவினர் பாத யாத்திரையாகச் சென்று கொண்டிருந்தனர். பக்திப் பரவசமான அவர்களது முகமும்

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. பகவான் ஸ்ரீராமராக அவதாரம் செய்த நக்ஷத்திரம், திதி எது?
2. பரதன், லட்சுமணன் அவதரித்த நட்சத்திரங்கள் எவை?
3. தசரதர் புத்ர பாக்யம் வேண்டி செய்த வேள்வியின் பெயர் என்ன?
4. ஸ்ரீராமர் அவதரித்த நட்சத்திரம் எந்த ராசியைச் சேர்ந்தது?
5. ராமலக்ஷ்மணர்களை 14 வயதிலேயே தன்னுடன் அழைத்துச் சென்ற முனிவர் யார்?
6. ராமர் நடந்துச் சென்ற போது அவர் கால் பட்டு பெண்ணுருவம் பெற்ற ரிஷி பத்தினி யார்?
7. சீதை எந்த நாட்டு ராஜ குமாரி? சீதையின் பிதா யார்?
8. லக்ஷ்மணனின் மனைவியின் பெயர் என்ன?
9. ராமர் மணம் முடித்து வரும் வழியில் அவர் யாருடைய வில்லை முறித்தார்?
10. பரதன், சத்ருக்னன் மனைவிகளின் பெயர்கள் என்ன?

விடைகளுக்கு 50ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திரு. ராமஸ்வாமி ஐயங்கார், சென்னை.

### 66. சாஸ்த்திர நீதிகள் :

வசந்தா யௌவநா விருக்ஷா:
புருஷா தன யௌவனா: |
ஸௌபாக்ய யௌவநா நார்யௌ
புதா வித்யாசு யௌவநா: ||

மரம், செடிகளுக்கும் வசந்த காலம் தான் சந்தோஷமான காலம். புருஷர்களுக்கு அவர்கள் சம்பாதிக்கும் காலம் இளமை பருவமாம்! பெண்களுக்கு இளமை காலம் மிகச் சிறந்த சமயம்! படித்த வித்வான்களாக விளங்குவதற்கு நல்ல படிக்கும் காலத்தில் படித்து தெரிந்து கொள்வதே!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

பாடல்களின் வரிகளும் அன்னமய்யாவை ஈர்க்க, அந்த நேரத்தில், புல்லை அறுக்க அறிவாளை உயர்த்தியவர் தவறுதலாக தன் கையை வெட்டிக் கொண்டார். கோவிந்தா... கோவிந்தா என்று சொல்லி ரத்தம் வடியும் கையை சுத்தம் செய்து கொண்டார்.

அதன் பின் அறிவாளை வீசி எறிந்தார். வீடு திரும்ப மனம் வரவில்லை. திருப்பதி செல்லும் பஜனைக் குழுவினரோடு தன்னையும் இணைத்துக் கொண்டு, பகவானின் மீது கீர்த்தனைகள் பாடிக் கொண்டு, அவர்களுடன் பயணிக்கத் தொடங்கினார். ஒரு ஏகாதசி தினத்தன்று திருமலையை இவர்கள் அடைந்தனர். திருவேங்கடவன் கருவறை முன் முதன் முறையாக, தரிசனத்திற்கு அன்னமய்யா நின்றபோது கதவுகள் சாத்தப்பட்டிருந்தன... பெருமாளின் தரிசனம் உடனடியாகக் கிடைக்கவில்லை. இத்தனை தொலைவு பயணித்து வந்த நமக்கு தரிசனம் உடனே கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன் வேங்கடவனைத் துதித்து கீர்த்தனை பாடிக் கொண்டிருந்த போது, மூடி இருந்த கதவுகள் தாமாகவே திறந்து கொண்டனவாம்.

அப்போது ஆலயத்துக்குள் இருந்த அர்ச்சகர்கள் பிரமிப்புடன் அன்னமய்யாவைப் பார்த்தனர். அவரின் எதிர்கால வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்று திருவேங்கடவனே திட்டமிட்டான். திருமலையில் ஒரு சாதுவின் கனவில் திருவேங்கடவன் தோன்றி "இங்கே வந்து இருக்கின்ற அன்னமய்யா என் பக்தன். அவனுக்கு உடனடியாக "பஞ்ச சம்ஸ்காரம் செய்து வை, தவிர முத்ரதாரணத்தையும் செய்" என்று அவருக்குக் கட்டளை இட்டார். அதன்படி அவருக்கு பஞ்ச சம்ஸ்காரமும்



முத்ரதாரணமும், திருமாலின் பன்னிரு திருநாமங்களையும் உடலில் தீட்டுவதும் செய்து வைத்தார் அந்த சாது... அன்னமய்யா தனது எட்டு வயதில் திருமலைக்கு வந்தார், அதன் பின் எட்டு ஆண்டு காலம் திருவேங்கடவனின் நிழலிலேயே இருந்தார். அப்போது இந்த எட்டு வருடமும் திருவேங்கடவன் சேவையும், கீர்த்தனைகள் புனைவதிலும் காலம் கழித்து வந்தார்.

எட்டு வயதில் காணாமல் போன தங்கள் மகன் திருமலையில் தங்கி இருக்கிறான் என்ற தகவலைக் கேள்விப்பட்டு தாள்ளப்பாக்கத்திலிருந்து அன்னமய்யாவைத் தேடி பெற்றோர்கள் வந்தனர்.

மகனின் திருமுகத்தைப் பார்த்து, "மகனே நீ இல்லாமல், எங்களால் வாழ முடியாது. எங்களோடு தாள்ளப்பாக்கம் வந்து விடு. உன் திருமணத்துக்குப் பெண் பார்த்தாகி விட்டது. நாங்கள் பார்த்து வைத்திருக்கும் இரு பெண்களையும் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும்" என்று மன்றாடி வேண்டிக் கொண்டனர், ஆனால் அவர் திருமணத்திற்கு மறுத்து விட்டார்.

அன்று இரவு அன்னமய்யா கனவில் திருவேங்கடவன் தோன்றி, "பெற்றோர்களின் பேச்சுக்கு எந்த மறுப்பும் தெரிவிக்காதே! அவர்கள் உனக்காக பார்த்து வைத்திருக்கும் இரு பெண்களையும் மணம் புரிந்துக் கொள். உன்னைப் போல் உன் வாரிசுகளும் எதிர் காலத்தில், என்னை வணங்கி பாடி பெரும் பேறு பெறுவார்கள்" என்று அருளினார். (தற்பொழுதும் இவர்களின் வாரிசுகள் தான் திருமலை ஆலயத்தில் கீர்த்தனைகள் பாடி வருகின்றனர்.)

இதன் பிறகு அன்னமய்யா திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள "திம்மக்கா, அக்கலம்மா" என்கிற இருவரும் அன்னமாச்சார்யாவின் மனைவியர் ஆனார்கள். திருமணம் முடிந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு இருந்தாலும், பெரும் பகுதி காலத்தைத் திருமலையிலேயே கழித்தார். அவ்வப்போது தாள்ளப்பாக்கம் வந்து தனது குடும்பத்தையும் கவனித்து வந்தார்.

அன்னமாச்சார்யாவுக்கு எந்த வைணவ ஆலய பெருமாளைத் தரிசித்தாலும் அந்த மூலவர் திருமலை திருவேங்கடவனைப் போலவே திருக்காட்சி தந்தனர். நாம சங்கீர்த்தனமும் பஜனைத் திருவிழாக்களையும் எங்கு எங்கு நடத்தினாரோ, அங்கெல்லாம் இவருக்குப் பெரும் செல்வம் குவிந்தது. அவற்றையெல்லாம் பெருமாளுக்கு விழா எடுப்பதற்கே பயன்படுத்தினார்.

அன்னாமாச்சார்யாவின் பெருமைகளை அறிந்த கர்நாடக இசையின் தந்தை புரந்தர தாசர் அவரைச் சந்திக்க வந்தார். அன்னமாச்சார்யாவுக்கும் புரந்தர தாசரை சந்திப்பது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டபோது பிரமித்துப் போனார்கள். காரணம் அன்னமாச்சார்யரை புரந்தர தாசர் பார்க்கும் போது அவர் வேங்கடவனாகவே காட்சித் தந்திருக்கிறார். புரந்தர தாசரை அன்னமாச்சார்யார் பார்க்கும்போது விட்டலனாகவே காட்சித் தந்திருக்கிறார்.

இப்படியாக திருமலை திருவேங்கடவனுக்கு இசையால் எண்ணற்ற பாமாலை அணிவித்து காலம் முழுக்க ஏழுமலையானின் புகழை மட்டுமே பாடி வாழ்ந்தவர் அன்னமய்யா.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும்பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : **1800-425-4141** க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

# ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம், ஒண்டி மிட்டா என்ற கிராமத்தில் சிறப்பு வாய்ந்த இராமாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயக் கருவறையில் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ள ஸ்ரீராமர், லட்சுமணர்,சீதை விக்கிரகங்கள் கிருதயுகத்தில் உருவானதாகக் கருதப்படுகிறது. ஜாம்பவான் இமயமலையை விட்டு தென் திசையை நோக்கி தவம் செய்யப் புறப்பட்டார். நீர் நிலைகள் மற்றும் பழங்கள் நிறைந்த மரங்களைச் சுற்றி திரியும் கரடிகள் மிகுந்து காணப்பட்ட அந்த அழகிய வனத்தில் ஓர் மேடான பகுதியில் குடிசை ஒன்றை ஏற்படுத்தி "இராம தாரக மந்திர"த்தை உச்சரித்து ஜாம்பவான் தவமியற்றினார். ஸ்ரீராமர் அவதரித்தது திரேதா யுகத்தில் தான். அப்படியிருக்க ஜாம்பவான் எவ்வாறு இராம தாரக மந்திரத்தை உச்சரித்து தவமியற்ற இயலும் என்ற கேள்வி அனைவரின் மனதில் எழுவது நியாயமே. இப்பொழுது வரை 27 மஹா யுகங்கள் கடந்து விட்டன. 28 வது மஹா யுகம் நடந்து கொண்டிருக்கிறது. அதாவது இதுவரை 27 திரேதா யுகங்கள் கடந்து விட்டது. அதன்படி 27 முறை ஸ்ரீராம சந்திர மூர்த்தி இப்பூமியில் அவதரித்தார் . எல்லா இராமரும் வேறு வேறு அல்ல. எல்லோரும் ஒருவரே! எல்லாம் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ரூபமே!

தவம் புரியும் ஜாம்பவான் முன்னர் ஸ்ரீராமசந்திர மூர்த்தி எழுந்தருளி அவருக்கு சிரஞ்சீவியாக இருக்க வரம் அருளினார். இத்தகைய வரலாறு கொண்ட இத்தலம் கலியுகத்தில் இரண்டாவது வைகுண்டமாக கருதப்படுகிறது. இவ்வாறாக கிருத யுகத்தில் அல்லாமல் திரேதா யுகத்திலும் விதைக்கப்பட்டது. ஸ்ரீராமர் மிருகண்டு முனிவர் மற்றும் பல முனிவர்களின் யாக யக்ஞங்களுக்கு இடையூறு விளைவித்த அரக்கர்களை சம்ஹாரம் செய்து முனிவர்களையும், மக்களையும் காப்பாற்றினார். இவ்வாலயத்தின் மேற்கில் மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தை இன்றும் நாம் காணலாம்.

**இராம தீர்த்தம் :**

ஒரு கோடைகாலத்தில் மழையின்றி வெப்பத்தின் தாக்கத்தால் பறவைகள், பசுக்கள் மற்றும் இதர உயிரினங்களும் துன்புறுவதைக் கண்ட சீதா தேவி ஸ்ரீராமரை பார்த்து, "ஸ்வாமி! இங்குள்ள உயிரினங்கள் நீரின்றி வாடுகின்றன" என்றார். சீதையின் விருப்பதிற்கிணங்க ஸ்வாமியும் தனது அம்பை பூமியின் அடியில் செலுத்த, அவ்வில்லானது பாதாள கங்கையோடு வெளியே வந்தது. அந்நீரினை சீதையும் ஸ்ரீராமரும் பருகினர். இன்றும் இத்தீர்த்தம் "இராம தீர்த்தம்" என்ற பெயரோடு நமக்கு தரிசனமளிக்கிறது.

**தல புராணம் :**

ஸ்ரீராமபிரான் தந்தையின் ஆணைபடி, பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்தபோது, பல்வேறு இடங்களுக்கு சீதை மற்றும் லக்ஷ்மணருடன் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். ஸ்ரீராமருக்கு சுக்ரீவரின் நட்பு



ஏற்பட்டது. ஆஞ்சநேயரும், ஜாம்பவானும் சீதையைத் தேடத் தொடங்கினர். ஜாம்பவான் தனக்கு கிருத யுகத்தில் ஸ்ரீராமசந்திர மூர்த்தி தரிசனமளித்த ஒண்டிமிட்டாவிற்கு வந்தான். அந்த இடத்தை வணங்கி விட்டு, சீதா தேவியை தேடச் சென்றான். கலியுகத்தில் இங்கு ஆலயம் நிர்மா ணிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் ஸ்ரீராமலக்ஷ்மண சீதை வன வாசம் செய்வது போன்று கொலுவீற்றிருக்கின்ற னர். இங்கு வாழும் மக்கள் இத்தலத்தை இரண்டாம் அயோத்தியாக அழைக்கின்றனர்.

கி.பி. 1356 ஆம் ஆண்டில் விஜய நகர மன்னர் புக்கராயர் காசி முதல் இராமேஸ்வரம் வரை தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். யாத்திரையின் நடுவில் ஒண்டிமிட்டாவை அடைந்தார். ஸ்ரீசீதா ராம லக்ஷ்மண சிற் பங்களை ஒரே கல்லில் வடித்து, வித்யாரண்ய மஹரிஷி முன்னிலையில் இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தார்.

“ஸ்ரீராமர்” கிருத யுகத்தில் ஜாம்பவானுக்கு வரமளிக்க ஒண்டிமிட்டாவிற்கு வந்தார். திரேதா யுகத்தில் முனிவர்களின் யாகத்தை காப்பதற்காக வந்தார். இக்கலியுகத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக ஒண்டி மிட்டா கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

புக்க ராயர் காலத்தில் ஒண்டிமிட்டா ஆலயம் கர்ப்பாலயம், அதன் மேலே சிறிய கோபுரம், அந்தரால யம் மற்றும் முகமண்டபம் மட்டுமே இருந்தது. கி.பி. 1600 ஆம் ஆண்டில் இவ்வாலயம் விரிவாக்கமடைந்தது. சித்தவடத்தை ஆண்டு வந்த மட்லராஜு அனந்தராஜுவின் குமாரர் திருவேங்களநாதன் அவருடைய குமாரர் குமார அனந்த ராஜு போன்றோரால், மூன்று நூற்றாண்டுகளாக இவ்வாலயம் அழகாக விரிவாக்கம் செய்யப்பட்டது. இவ்வாலயத்தினை பல்வேறு விதமாக சீரமைத்தனர். ரங்க மண்டபம், பெரிய வளாகம், கோட்டை வடிவில் மஹா பிராகாரம், மூன்று நிலைகள் கொண்ட காலி கோபுரம் அமைத்தனர். கிழக்கு கோபுர வாயிலுக்கு அருகில் மேற்கு திசை நோக்கி சஞ்சீவ ராயர் ஸ்வாமி என்ற திருப்பெயரோடு அனுமன் எழுந்தருளி யிருக்கும் ஒரு சிறிய ஆலயம், இரத சாலை, இரதம், ராம தீர்த்தம் போன்றவற்றையும் அமைத்தனர். சிற்பக் கருவூலம் என அழைக்கும் விதமாக அனைத்து தூண்களும் மிக நுணுக்கமாக வடிக்கப்பட்ட சிற்பங்களோடு காட்சியளிக் கின்றது. 32 கல்தூண்களால் நிறைந்த ரங்க மண்டபம் கண்போர் கண்களைக் கவரும் விதமாக அமைந்துள் ளன. அக்னி திசையில் மடைப்பள்ளியும், தென்மேற்கு திசையில் கல்யாண மண்டபமும், தென் திசையில் இரண்டு வரவேற்பு மண்டபங்களும் அமைந்துள்ளன. கிழக்கு பகுதியில் 32 அகன்ற படிகட்டுகளைக் கடந்துச் சென்றால் வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமஹா விஷ்ணுவை தரிசனம் செய்தாற்போல் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமியை தரிசிக்கலாம். கிழக்கு வாயிலில் ஆன்மீகம் மற்றும் பாகவத கதைகள், சீதாராம திருக்கல்யாணக் காட்சிகள் (சீதாராம தலம்பராலு) பக்தர்களின் கண்களைக் கவரும் விதமாக அமைந்துள்ளன.

ஆலயத்திற்கு தென்புறம் ஏரிக்கரையின் கீழ் இராம தீர்த்தம் உள்ளது. அத்தீர்த்தத்தில் பக்தர்கள் நீராடி ஸ்வாமியை தரிசிக்க இவ்வாலயத்திற்கு வருவர். பிரம் மோத்ஸவ நாட்களில் சக்கர ஸ்நானம் இங்கு நடை பெறும். ஏரிக்கரையின் மீது வீற்றிருக்கும் ஆஞ்சநேய ஸ்வாமி அப்பகுதியில் நடந்துச் செல்வோரின் கண்டங் களை (ஆபத்து) நீக்கி வருகின்றார். சங்கராந்தி நாளில் “பார்வேட்டி உற்சவ”த்தில் வில்லேந்திய ஸ்ரீராம சந்திர மூர்த்தியை தரிசிக்கலாம்.


ஆலயத்தில் தினசரி உற்சவத்தோடு ஆண்டு முழு வதும் இதர உற்சவங்களும் நடைபெறுகின்றன. இவ் வாலயத்தில் ஸ்ரீராமநவமி பிரம்மோத்சவம் ராமநவமி











அன்று தொடங்கி பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறுகிறது. நவமி அன்று ஸ்ரீராம ஜெயந்தி யோடு ஸ்ரீசீதா தேவியின் அருளால் சிறந்த கவிஞ ராகத் திகழ்ந்த, தெலுங்கு மொழியில் ஸ்ரீமத் பாக வதத்தை இயற்றிய, ஸ்ரீராம பக்தருமான பொம்மேர போதணா ஜெயந்தியும் இங்கு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

## வாசுதாஸு சேவை :

இருபதாம் நூற்றாண்டில் ஸ்ரீவாவிலி கோலினு சுப்பாராவ் ஒண்டிமிட்டா ஆலயத்திற்கு பல திருப்பணிகளைச் செய்துள்ளார். தனது சொத்துக்கள் அனைத்தும் ஸ்வாமிக்கே எழுதி வைத்தார். துறவறம் பூண்டு ஒரு தேங்காய் சிறட்டையில் பிக்ஷை பெற்றும், நிதி வசூல் செய் தும் இங்கு புதியதாக கட்டிடங்களையும் கட்டி னார். ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகளை செய்ததோடு, திருத்தேர் அமைத்து உற்சவங் களையும் நடத்தினார். சிறந்த ஞானியும் கவிஞ ரும், ஆந்திர வால்மீகி என்று போற்றப்படும் இவருடைய சேவை ஒப்பற்றது. இவர் தெலுங்கு மொழியில் வால்மீகி இராமாயணம் இயற்றி, “மந்தரம்” என்ற பெயரோடு விரிவுரையும் எழுதி னார். இவர் மக்களால் “வாசுதாஸு” என்று அன்பு டன் அழைக்கப்பட்டார்.

## ஆலயத்தின் வளர்ச்சி :

ஆந்திர மாநிலம் 2014 ஆம் ஆண்டு ஆந்திரா மற்றும் தெலுங்கானா என்ற இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட போது, 2015 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் இந்த ஆலய நிர்வாகத்தை ஏற்று, அதற்கு அடுத்த ஆண்டு ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் ஆந்திர மாநில அரசு சார்பில், திருமலை திருப்பதி தேவஸ்தான மேற்பார்வையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆலய மேம்பாட்டு பணியை மேற்கொண்டது. ஸ்ரீசீதா ராம திருக்கல்யாணத்திற்கென்று ஒரு அழகிய கல்யாண மண்ட பத்தை கடப்பா செல்லும் வழியில் அமைத்தது, வசதி குடில் களையும் அமைத்தது, பிற திருப்பணிகளையும் தேவஸ்தான நிர்வாகம் நிறைவேற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. 2016 ஆம் வருடத்திலிருந்து லக்ஷ கணக்கில் பக்தர்கள் இங்கு நடை பெறும் திருக்கல்யாணத்தை கண்டு களிக்கின்றனர்.

## ஆலயத்தைச் சுற்றி அழகுக்கோலம் :

ஆலயத்தின் தென்பகுதியில் உள்ள நீரோடையை மூடி விட்டு, அந்நிலத்தை சமன்படுத்தி, உத்யானவனம் என்ற அழகிய பூங்காவை அமைத்தனர். ஆலயத்தைச் சுற்றி திருமாட வீதி களை அமைத்தனர். ஆலயத்தின் கிழக்கு பகுதியில் புஷ் கரணியை அமைத்தனர்.

ஆலயத்தில் அலங்காரம், பூஜைகள், பக்தர்களுக்குப் பிரசாதம், வேத நாதம் போன்ற அனைத்து வகையிலும் சிறந்த வளர்ச்சியை இவ்வாலயம் அடைந்தது. ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட மின்விளக்குகளால் இவ்வாலயம் இரவு நேரத் திலும் ஒளிர்வதைக் காணலாம். ஒவ்வொரு சனிக்கிழமையும் திருமலை லட்டு பிரசாதமும், மாதந்தோறும் “திருவோணம்” நட்சத்திரத்தன்று ஸ்ரீசீதாராம திருக்கல்யாணம் மற்றும் சனிக் கிழமை நடைபெறும் அபிஷேகத்திற்கும் பக்தர்கள் அதிக அள வில் பங்கு கொண்டு ஸ்ரீராமரின் அருளுக்குப் பாத்திரமா கின்றனர்.

தெலுங்கு மூலம் : திரு. கே. நரசிம்மலு, திருப்பதி.
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 32

## இடமிருந்து வலம்

1. சுமதி என்னும் மன்னனின் தவத் திற்கு இணங்கி திருமால் காட்சிய ளித்த தலம்...... (8)
3. ஏழு மோட்ச புரிகளில் ஒன்று....(4)
9. லட்சுமிக்குரிய மலர் .....(5)
15. சூரியனை முதல் கடவுளாக வழிபடும் மதம்...(4)
16. திருமலையில் ஸ்வாமி புஷ்கரணி குளக்கரையில் இவர் கோயில் உள் ளது....(4)
17. இராவணனின் தம்பி....(7)
19. கம்பனின் மானசீக குரு.... (6)
20. திருப்பதி மலை அடிவாரத்தை ...(4) என்பர்.
21. கருடன் இறைவனுக்கு எதிரில் இல் லாமல் 50 அடி உயரமுள்ள கல் தூணில் இருக்கும் தலம்....(6)

## வலமிருந்து இடம்

7. ராமர் வில் உடைத்த அரண்மனை யாருடையது....(4)
8. பாகவத புராணத்தில் கிருஷ்ணனின் வரலாறு உள்ள பகுதி....(10)
11. பாற்கடலைக் கடைந்த போது வெளிப் பட்ட பசுக்களில் ஒன்று....(3)
12. சப்த ரிஷிகளில் ஒருவர்.... (4)
14. இராமானுஜரின் வழி எது....(5)

## மேலிருந்து கீழ்

1. புராணங்களில் வராக க்ஷேத்திரம் என போற்றப்படும் மலை ....(7)
2. லட்சுமி குபேரர் அருள் கிடைக்க பூஜை அறையில் இதை வைக்க வேண் டும்....(9)
5. கூரத்தாழ்வார் பாடிய துதி....(9)
6. சூரியனை ஜோதிட சாஸ்திரத்தில் எவ்வாறு அழைப்பர்... (7)
10. ராகவேந்திரர் ஜீவ சமாதி ஆன இடம்....(6)
13. குலசேகராழ்வார் பாடியது....(8)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | | 3 | | | 4 |
| | 5 | | ■ | ■ | ■ | 6 | | | | 7 | ■ |
| | | | | | | | | | | | 8 |
| | | | 9 | | | | | 10 | | 11 | ■ |
| | | | | | 12 | | ■ | | ■ | 13 | ■ |
| | | | | | | | 14 | | ■ | | ■ |
| | | 15 | | | | | | | | | |
| ■ | | | 16 | | | | | | | | |
| ■ | | 17 | | | 18 | | | | | | |
| 19 | | | | | | | ■ | | | | |
| 20 | | | | ■ | | | ■ | | | | |
| 21 | | | | | | 22 | ■ | 25 | 23 | | 24 |

**தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.**
**விடைக்கு 36 ம் பக்கம் பார்க்க**

14. ராமனின் தரிசனத்திற்காக காத்திருந்த மூதாட்டி .......(3)
18. குந்திக்கு சூரியன் மூலம் பிறந்த மகன்... (4)

## கீழிருந்து மேல்

22. தேவரிஷி என்று போற்றப்படுபவர்.... (4)
23. திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் தாயாரை இப்படியும் அழைப்பர்....(6)
24. இராமலிங்க அடிகளார் பெருமாள் மீது போற்றிப் பஞ்சகம் பாடிய திவ்ய தேசம்.....(6)
25. வைகுண்டத்தில் உள்ள காவலர்களில் ஒருவர்...(4)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

—பிரதான ஆசிரியர்






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**நாகுலாபுரம்
ஸ்ரீவேதவல்லி சமேத
ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
18-04-2019 முதல்
27-04-2019 வரை**



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்

02-04-2019 முதல் 11-04-2019 வரை

**02-04-2019**
**செவ்வாய்க்கிழமை**
பகல் :
இரவு : சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம்

**03-04-2019**
**புதன் கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**04-04-2019**
**வியாழக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**05-04-2019**
**வெள்ளிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**06-04-2019**
**சனிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**07-04-2019**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**08-04-2019**
**திங்கட்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**09-04-2019**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**10-04-2019**
**புதன் கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**11-04-2019**
**வியாழக்கிழமை**
பகல் : பல்லக்கு உத்ஸவம், சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## வாயல்பாடு (வால்மீகிபுரம்)
## ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்

10-04-2019 முதல்
19-04-2019 வரை

**10-04-2019**
**புதன் கிழமை**
பகல் : .....
இரவு : சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம்

**12-04-2019**
**வெள்ளிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**14-04-2019**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**16-04-2019**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**18-04-2019**
**வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்



11-04-2019
வியாழக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ......

13-04-2019
சனிக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

15-04-2019
திங்கட்கிழமை
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

17-04-2019
புதன் கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

19-04-2019
வெள்ளிக்கிழமை
பகல் : பல்லக்கு உத்ஸவம், சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்
12-04-2019 முதல் 21-04-2019 வரை

12-04-2019
வெள்ளிக்கிழமை
பகல் : ந்யாசாபிஷேகம்
இரவு : அங்குரார்ப்பணம்

13-04-2019
சனிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சேஷ வாகனம்

14-04-2019
ஞாயிற்றுக்கிழமை
பகல் : வேணுகானாலங்காரம்
இரவு : ஹம்ச வாகனம்

15-04-2019
திங்கட்கிழமை
பகல் : வடபத்ரசாயி அலங்காரம்
இரவு : சிம்ம வாகனம்

16-04-2019
செவ்வாய்க்கிழமை
பகல் : நவநீத கிருஷ்ணாலங்காரம்
இரவு : ஹனுமத்சேவை

17-04-2019
புதன் கிழமை
பகல் : மோஹினி சேவை
இரவு : கருட சேவை

18-04-2019
வியாழக்கிழமை
பகல் : சிவதனுர்பாணாலங்காரம்
இரவு : வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம்

19-04-2019
வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : .....

20-04-2019
சனிக்கிழமை
பகல் : காளியமர்தனாலங்காரம்
இரவு : குதிரை வாகனம்

21-04-2019
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்





19–02–2019 அன்று தி.தி.தே. நிர்வகித்த வேங்கட மலையில்
உள்ள குமாரதார தீர்த்த முக்கோட்டி நிகழ்ச்சி





தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்களாக பதவி பொறுப்பேற்பு

திரு. வேணாடி ராமசந்த்ராரெட்டி (21–02–2019)

திரு. எஸ். பிரசாத் பாபு (22–02–2019)



தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவராக
பணியாற்றிய திரு. போல பாஸ்கர் ஐ.ஏ.எஸ்.
அவர்களை வழி அனுப்பிய போது



தி.தி.தே. புதிய இணைச்செயலாட்சித்தலைவராக
(திருப்பதி) 10–02–2019 அன்று பதவி பொறுப்பினை
ஏற்ற திரு. பி. லக்ஷ்மிகாந்தம், ஐ.ஏ.எஸ்.அவர்கள்

# அறம் காத்த அண்ணல்

திரு. கே. இராமநாதன், சேலம்.

அறம் என்னும் தர்மம் அழியாத ஆற்றலைப் பெற்றிருக்கிறது. எனவே அது இவ்வுலகில் என்றும் நீடித்து நிலைத்து நிற்கும் தன்மை கொண்டு திகழ்கிறது. அது வேதங்கள் வகுத்த வழி அனைத்தையும் பொறுத்துக் கொண்டு, எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு செல்கின்ற இயல்பைக் கொண்டுள்ளது. அதனால் அறத்தின் ஆணிவேர் எச்சூழலிலும் சாய்வதில்லை. மாறாக, மறம் என்னும் அதர்மம் வேதத்தில் விதிக்கப்பட்டதைச் செய்யாமல் விலக்கப் பட்டதைச் செய்யும் தன்மை கொண்டது. அது மனித வாழ்வில் மின்னல் போன்ற விரைந்த முன்னேற்றத்தைத் தர வல்லது. ஆனால் அழிவு தந்து தாக்கும்போது அதர்மம் தன் வலிமையிழந்து வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்ந்து விடுகிறது. இவ்வுண்மையை வியாசர் தம் மகாபாரதத்தில்,

*"அதர்மேணைத்தே தாவத் ததோ*
*பத்ராணி பஷ்யதி।*
*தத சபத்னான் ஜகதி ஸமூலஸ்து வினஸ்யதி ॥"*

என்று குறிப்பிடுகிறார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தாம் இயற்றிய இராம காதையில் எளியோர்க்கு எளிதில் இரங்கும் பண்பின் உறைவிடமான இராமனின் பெருமைகளை நயம்பட விளக்கிச் செல்கிறார். "வையத்துள் வாழ் வாங்கு வாழவும், வானுறையும் தெய்வ நிலை அடையவும்" ஆணி வேராய் நிற்பது மனித வாழ்வின் அறப்பண்புகளே. எனவேதான் வள்ளுவர் இறைவனை அறவாழி அந்தணன் என்று குறிப்பிடுகிறார். வாழ்வின் உண்மை இன்பம் அறம் தழுவி நிற்பதாலே என்பதை வலியுறுத்தும் வள்ளுவர்,

*"அறத்தான் வருவதே இன்பம் மற்று எல்லாம்*
*புறத்த புகழும் இல"*

என்று கூறுவதைக் காணலாம். அவ்வகையில் வள்ளுவர் வழி வந்த கம்பரும் தம் காவியத்தில் மனம்-மொழி-மெய்யால் அறம் காத்து நிற்கும் அண்ணல் இராமனின் சிறப்பை மனித வாழ்க்கைக்கு ஒளியென உணர்த்தி நிற்கிறார்.

**நும்பணி மறுப்பனோ :**

தசரதன் தான் முதுமையடைந்து தளர்வுற்றதை உணர்ந்தார். எனவே அரசாட்சியை தலைமகன் இராமனிடம் ஒப்படைத்துவிட்டு, பிறப்பு நீக்கும் தலவாழ்வு பூண்டு, கானகம் செல்ல எண்ணினார். அவர் தன் எண்ணத்தை வசிட்டன் முதலான அமைச்சர்களிடம் கூற, அவர் களும் மன்னனின் எண்ணம் போற்றதற்குரியதே என்றனர். அதைக் கேட்டு மகிழ்ந்த தசரதன் சுமந்திரனிடம் இராமனை அழைத்து வரச் சொன்னார். தந்தையின் அழைப்பை ஏற்ற இராமன் விரைந்து அவர் முன் வந்து நிற்க, தசரதன் அவரிடம்,

*"புனையும் மாமுடி புனைந்து*
*இந்த நல் அறம் புரக்க"*

என்று கூறி மணிமுடி சூடி ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டினார். அதைத் தொடர்ந்து இராமன் முடி சூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தொடங்கின.



தசரதன் கைகேயியைச் சந்திக்க அவளது மாளிகை வந்தடைந்தார். அங்கு முன்னரே மந்தரையின் சூழ்ச்சியால் மனம் திரிந்திருந்த கைகேயி கண்ணீருட னும் கவலையுடனும் வீற்றிருந்தாள். அவள் நிலை கண்டு வருந்திய தசரதன் அவளின் துயரத்திற்கான காரணம் கேட்டார். அதற்கு கைகேயி முன்னர் தசரதன் இரண்டு வரங்கள் தருவதாகக் கூறியதை நினைவு கூர்ந்தாள். பின்னர் அவள் தசரதனிடம்,

*''ஏய வரங்கள் இரண்டின், ஒன்றினால் என்*
*சேய் அரசு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றால்*
*போய் வனம் ஆள்வது''*

என்று வரம் கேட்க, தசரதன் மிகுந்த மனவேதனை கொண்டு மயங்கி விழுந்தார். பின்னர் கைகேயி சுமந்திர னிடம் இராமனை தான் காண வேண்டும் என்றாள். சுமந் திரன் இராமனைச் சந்தித்து கைகேயியின் விருப் பத்தைக் கூறினான். அதைக் கேட்ட இராமன் உடனே அங்கு வந்து சேர்ந்தார்.

இராமனைக் கண்ட கைகேயி, "அன்பு மகனே, உன் தந்தை உனக்குச் சொல்வதாகிய ஒன்று உள்ளது. நான் அதை உன்னிடம் சொல்வது சரி என்று நீ கருதினால் சொல்கிறேன்'' என்றாள். அதைக் கேட்ட இராமன், "தந்தையின் சொல்லைத் தாங்கள் கூறுவது என் பெரும் பேறு'' என்றார். அப்போது கைகேயி, "ஆழி சூழ் உலகெலாம் பரதன் ஆள, நீ பதினான்கு ஆண்டுகள் கானகம் சென்று தவம் புரிந்து, புனித நதிகளில் நீராடி வா" என்று மன்னர் கூறினார் என்றாள்.

கைகேயியின் மொழி கேட்டதும் செந்தாமரை மலர்ந்தது போன்ற முகப்பொலிவு கொண்டு விளங்கிய இராமன்,





*''மன்னவன் பணியன்றாகின் நும்பணி மறுப்பனோ? என்*
*பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ*
*என் இனி உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்*
*மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்''*

என்றுரைத்தார்.

இவ்வாறு தந்தை தசரதன் ஏவலை ஏற்று, சிற்றன்னை கைகேயியின் சொல் தட்டாது கானக வாழ்வை இனிதென ஏற்ற இராமபிரான் தாய், தந்தையர் போற்றுதற்குரிய சான் றோர் என்னும் அறம் காத்து நின்றார்.

## சினம் தீர்த்தார் :

எச்செயலையும் உற்றுநோக்கி முழுமையாய் உணர்ந்துகொள்ளும் குணம் கொண்டவர் இராமபிரான். எனவேதான் இளவல் இலக்குவன் சீற்றமும் ஐயமும் கொண்டபோது தன் தெளிந்த அறிவால் நல்வழி காட்டி நிற்பதைக் காண்கிறோம்.

அண்ணன் இராமன் முடிசூடுவதற்குக் கைகேயி தான் பெற்ற வரத்தால் பெருந்தடை ஏற்படுத்தியிருக்கிறாள் என்பதைக் கேட்ட இலக்குவன் அடங்காச் சினம் கொண் டான். தடை செய்தவர் எவராயினும் தயை இன்றி அவரை நொடிப்பொழுதில் அழித்து இராமனுக்கு முடி சூட்டுவேன் என்று உறுதியுடன் கூறித் தன் வலிமை மிக்க வில்லினை வளைத்து நாணொலி எழுப்பி நின்றான்.

சீற்றம் கொண்ட இலக்குவன் செய்த நாணொலி கேட்டு திடுக்கிட்ட இராமன், அவனிடம் வந்து அவன் சினத்தைத் தணிக்க முயன்றார். கைகேயி செய்த பிழையால் இராமன் முடிசூடுவது தடைப்பட்டதே என்று வருந்திக் கூறிய இலக்குவனிடம் இராமன், "நதியில் சில காலம் நீர் இன்றி வற்றிப் போவது நதியின் பிழையன்று, என்னை காடு செல்லும்படி சொன்னது தந்தையின் குற்றமன்று, என்னை காடு செல்ல வரம் பெற்றது கைகேயியின் அறிவின் குற்றமன்று, எல்லாம் விதியின் பிழையாகும். எனவே இதற்குச் சீற்றம் கொள்ள வேண்டாம் என்றார்."

இராமனின் நல்லுரை கேட்டும் சினம் அடங்காத இலக்குவனோ, தாங்கள் கூறிய விதியையும் மாற்ற வல்ல என் வில்லின் வலிமையைப் பாருங்கள் என்று சீறி நின்றான். சினம் அறிவை மறைக்க அறம் வழுவும் செயல் செய்யத் துணிந்த இலக்குவனிடம் இராமன்,


*"தோன்றா நெறிவாழ் துணைத்*
*தம்முனைப் போர் தொலைத்தோ?*
*சான்றோர் புகழும் தனித்*
*தாதையை வாகை கொண்டோ?*
*ஈன்றாளை வென்றோ, இனி*
*இக் கதம் தீர்வது? என்றான்"*

இராமனின் இத்தகைய தெளிந்த நன்மொழிகளால் இலக்குவன் சினம் தணிந்தான். ஈன்ற தாயை வெல்லும் இழி பழியைச் செய்யத் துணிந்த இலக்குவனுக்கு நல்லறிவு தந்து அறம் காத்து நின்றார் அண்ணல் இராமன்.

## முழுது உணர் சிந்தையான் :

சித்திரக்கூட மலையில் இராமன், சீதை, இலக்குவன் ஆகியோர் தங்கியிருந்தனர். அப்போது பரதன் அண்ணன் இராமனை அயோத்திக்கு அழைத்து வந்து அரசுகட்டில்





ஏறச் செய்வேன் என்ற உறுதியுடன் நகர மாந்தர்கள் உடன் வர சித்திரக்கூடம் வந்து சேர்ந்தான். பரதனின் வருகையைத் தொலைவிலேயே கண்ட இலக்குவன் இராமனுடன் போர் செய்யவே பரதன் பெரும்படையுடன் இக்கானகம் வந்துள்ளான் என்று எண்ணி வெகுண்டெழுந்தான்.

அவன் இராமனிடம் சென்று, "அண்ணா, பரதன் உம்முடன் போர் புரிய வந்துள்ளான். வஞ்சனை மிக்க பரதனையும் அவனது பெரும் படையையும் இமைப்பொழுதில் அழித்தொழிப்பேன். என் செயலால் அவன் நாடாள்வதை விட்டு நரகாளப் போகிறான்" என்று கூறி கையில் வில்லேந்தி நின்றான். இலக்குவனின் சீற்றம் கண்ட இராமன் அவனை நோக்கி, "சீற்றமும் அவசரமும் கொள்ள வேண்டாம். வேதங்கள் பலவாயினும் அவை கூறும் உயர்ந்த ஒழுக்கங்கள் யாவும் பரதனின் ஒழுக்கமே. நம் குலத்தவர் எவரும் முறைதவறி எதுவும் செய்யார். அதுமட்டுமன்று, பரதன் நேர்மை என்னும் தேருக்கு அச்சாணிப் போன்றவன். அத்தகையவன் மீது ஐயம் கொள்ளக்கூடாது. செம்மையின் ஆணியை அன்னது நினைக்கலாகுமோ" என்று கூறி சீற்றம் தணித்துச் சிந்தையில் தெளிவு கொள்ளச் செய்தார்.

அப்போது பரதன், தன் இரு கைகளையும் தலை மீது குவித்துக் கொண்டு இராமனை நோக்கி வந்தான். தன்னை நோக்கி விரைந்து வந்த அவனை,

*"தொழுது உயர் கையினன்; துவண்ட மேனியன்*
*அழுது அழி கண்ணினன்; அவலம் ஈது என*
*எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை*
*முழுது உணர் சிந்தையான், முடிய நோக்கினான்"*

வேதங்கள் கூறும் உயர்ந்த ஒழுக்கங்களின் வடிவமெனத் திகழும் பரதன் மட்டுமல்லாது தம் குலத்தவர்

எவரும் முறை தவறி எதுவும் செய்யார் என்னும் முழு துணர் சிந்தை உடைய இராமன், பரதன் குறித்த ஐயம் தீர்த்து அறம் காத்து நின்றார்.

## வாய்மையும் தூய்மையும் :

இராமன் தன்னை கானகத்தில் சந்திக்க வந்த பரதனிடம் நாட்டில் நடந்தவைகளைக் கேட்டறிந்தார். பின்னர் அவர் பரதனிடம், நம் தந்தையார் ஆட்சியை உனக்குத் தந்துவிட்டு விண்ணகம் சென்று விட்டார்.

நீ அதை ஏற்று மக்களைக் காக்காமல் தவக்கோலம் தரித்து இங்கு வந்த காரணம் யாது? என்று வினவினார். அதைக்கேட்ட பரதன் மூத்தவராகிய நீங்கள் இருக்க இளையவனாகிய நான் அரசாளுதல் முறையா? எனவே,

*"உந்தை தீமையும் உலகு உறாத நோய்*
*தந்த தீவினைத் தாய் செய் தீமையும்*
*எந்தை! நீங்க மீண்டும் அரசு செய்க"*

என்று கூறி இராமனை முடி சூட்டிக் கொள்ள வேண்டி பணிவுடன் வற்புறுத்தினான். அதைக்கேட்ட இராமன், "சிறந்த நூலறிவு கொண்டவர்களும், குற்றமில்லா நல்லுணர்வு மிக்கவர்களும், பின்பற்றத்தக்க நல்லொழுக்கம் உடையவர்களும், வணங்குதற்குரிய தேவர்களும் பெரியவர்கள் அல்லவா. அப்பெரியவர்கள் யார் என்று சிந்தை தெளிய நோக்கினால் தந்தை, தாய் என்பதைத் தெளிவாக அறியலாம்" என்றார்.

மேலும் அவர், "தாய் கைகேயி பெற்ற வரத்தின்படியும், தந்தை தசரதன் கட்டளை ஏற்றும் நான் நம் குலத்திற்குரிய தருமத்தை மேற்கொண்டேன். ஆதலால் உன் வேண்டுதலை ஏற்று அதை விலக்குதல் முறையாகாது" என்றார்.

ஆனால் பரதனோ, அன்னை விரும்பியபடி நான் அரசு ஏற்றேன். இப்போது என் விருப்பத்தின்படி அதை உங்களுக்குத் தந்தேன். எனவே *"மன்னா! போந்து நீ மகுடம் சூடு"* என்று மீண்டும் வற்புறுத்தினான்.

அதைக் கேட்ட இராமன், "இவ்வுலகில் வாய்மையே தூய்மையாகும். தீமை என்பது வாய்மை தவறுவதால் விளைவதாகும். எனவே தந்தையின் மொழியை, சத்தியத்தைக் காப்பது என் கடமை" என்று கூறிய அவர்,

நீ என் ஆணையை மறுக்கலாகுமோ?

என்று வலியுறுத்திக் கூறினார். இவ்வாறு வாய்மையின் தூய்மையை பரதனுக்கு எடுத்துரைத்து அறம் காத்து நின்றார் அண்ணல் இராமன்.

## அபயதானம் கடப்பாடு :

சீதையை வஞ்சகத்தால் கவர்ந்து வந்து அசோக வனத்தில் சிறை வைத்த இலங்கை வேந்தன் இராவணனின் உடன் பிறந்த சகோதரன் வீடணன். அவன் பிறப்பால் அரக்கர் குலம் சார்ந்தவன் என்றாலும், மனம்–மொழி–மெய்யால் அறநெறி தவறாத வாழ்க்கை கொண்டவன்.

எனவேதான் அவன் தன் அண்ணனுக்கு சீதையை சிறை வைத்திருப்பது அறநெறிக்கு மாறானது என்றும், சீதையை சிறை விடுத்து குலம் காத்திடுக என்றும் பல்வேறு அறவுரைகள் கூறுகிறான். ஆனால் அகந்தை கண் மறைக்க நின்ற இராவணனோ வீடணனை நோக்கி, *"விழி எதிர் நிற்றியேல், விளிதி"* என்று சினந்து கூறித் தன் கண்முன் நிற்காதே, போய் விடு என்று ஆணையிடுகிறான்.

அவ்விடம் விட்டு அகன்ற வீடணன், தன்னுடன் வந்த அனலன், அனிலன், அரன், சம்பாதி ஆகியோருடன் ஆலோசித்து இறுதியாக அறத்தின் எல்லையாம் இராமனின் திருவடிகள் சரண் புகுவதே நலம் என்று முடிவெடுத்தான். சரண் வேண்டி நின்ற அவனைக் கண்ட இராமன் வீடணனைச் சரண் ஏற்பது குறித்து உடன் இருந்தவர்களிடம் ஆலோசித்தார். ஆனால் அவர்கள் வீடணன் மீது தாம் கொண்டிருந்த ஐயத்தை வெளிப்படுத்தினர்.

இறுதியாக அனுமனின் தெளிந்த கருத்தறிந்த இராமன், அனைவரும் உணரும் வகையில், "வீடணன் நம்மை நாடி வந்துள்ளான். புறாவிற்காகத் தன் இன்னுயிர் தந்த சிபி மன்னன், வேடனின் பசிக்குத் தன்னுயிர் தந்த புறா, முதலையால் பிடிக்கப்பட்டபோது ஆதிமூலமே என்று பிளிறிய யானையின் வேதனை தீர்த்த திருமால், அடைக்கலம் தந்த மார்க்கண்டனை காப்பதற்குக் காலனைக் காலால் உதைத்த சிவன், சீதை அழுதபோது அஞ்சாதே என்று கூறி இராவணனுடன் போர் செய்து உயிர் துறந்த சடாயு ஆகியோர் செய்த செயல் அபயம் என்று வந்தவர்க்கு அருளிய செயல் அல்லவா.

எனவே, அபயம் என்று வந்தவரது உயிரைத் தன்னுயிர்போல் போற்றாத கயவனும், ஒருவன் செய்த உதவியை மறந்தவனும், வேதம் கூறும் மெய்யினைப் பொய் என்பவனும் கொடிய நரகத்தில் வீழ்வார்கள். ஆதலால், அபயம் என்ற பொழு தத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு" என்றார்.

இவ்வாறு அபயதானம் நல்குவதின் மேன்மை கூறி "கொற்றவ சரண்" என்று நின்ற வீடணனுக்கு அபயம் தந்து அறத்தின் எல்லையென நின்றார் அண்ணல் இராமன்.



# முத்திரை பதிக்கும் சித்திரை

அமரர். வி.எஸ். ஸ்ரீனிவாசன்,
சென்னை.

தமிழ்ப் புத்தாண்டின் நுழைவு வாயிலாக முத் திரை பதிக்கும் சித்திரைத் திங்களில் இளவேனிற் காலம் இன்பமுடன் எழுகிறது. வந்தது வசந்தம் என்று அனை வரும் மகிழ்ந்து வரவேற்கும் பொன்னான நாள் சித்திரைத் திங்களின் முதல் நாள்.

சித்திரை மாதத்தை "சைத்ரா" என்றும் "சைத்ரவிஷு" என்றும் கூறுவர். இந்த நாளில்தான் பிரம்மன் நானிலத் தையும் தோற்றுவித்தார் என்று புராணம் கூறுகிறது. சித்திரையில் வரும் பௌர்ணமியை சித்ரா பௌர்ணமி என்று கொண்டாடுவர். எமதர்ம ராஜனின் கணக்கரான சித்ரகுப்தரின் ப்ரீதிக்காக சித்ராபௌர்ணமி கொண்டாடப் படுகிறது. நம் பாவ, புண்ணியங்களை கணக்கிடும் தேவ னான சித்ரகுப்தனை திருப்தி செய்ய விரதம் இருந்து வழிபடுவர். இவ்விரதம் அனுஷ்டிக்கும் நாளில் பசுவின் பால், பசுவின் மோர் சாப்பிடக்கூடாது. ஆனால் எருமைப் பால் உபயோகிக்கலாம்! உப்பு சேர்க்கக் கூடாது. பயற் றம் பருப்பும், எருமைப் பாலும் சேர்த்து பாயசம் செய்து நிவேதனம் செய்வது மிகச் சிறப்பாகும். பூஜையை முடித்து விட்டு சித்ரகுப்தரை பயபக்தியுடன் கீழ்வருமாறு பிரார்த்திக்க வேண்டும்.

"சுவாமி, அடியேன் இப்பிறவியில் அறியாது செய்த பாவங்கள் மலையளவு இருந்தாலும், தேவரீர் எங்களை மன்னித்து அப்பிழைகளை கடுகளவாக்கிக் கொள்ள வேண்டும். அதேபோல் அடியேன் கடுகளவு புண்ணியம் செய்திருந்தாலும் தேவரீர் கருணைக் கூர்ந்து அதை மலையளவு புண்ணியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்."

சித்ரகுப்தரின் சிலையை சில கோயில்களில் ஏடும், எழுத்தாணியும் தாங்கிய கரங்களுடன் கூடிய வடிவில் காணலாம். சித்ரா பௌர்ணமியன்று சித்ர குப்தரை திருப்தி செய்ய வேண்டி பல மன்னர்கள் அன்னதானம் செய்தனர் என்று திருச்சி மலைக்கோயிலிலுள்ள கல் வெட்டு சாசனம் கூறுகிறது.

சித்ரா பௌர்ணமி தினத்தன்று தேவேந்திரன் சொக்க நாதப் பெருமானை வழிபட்ட வைபவத்தை புராணத்தில் காணலாம்.

ஒரு முறை தேவ குருவான பிரகஸ்பதி, தேவேந்திர னின் போக்கு பிடிக்காமல் அவனை விட்டு விலகிச் சென்று விட்டார். குருவின் அருள் இல்லாத இந்திரன் ஆட்சியில் இருள் சூழ்ந்தது. பல வழிகளில் துயரம் கொண்ட இந்திரன் தன் தவறை உணர்ந்து வருந்தி குருதேவரை பிரார்த்தித்தான். தேவகுருவான பிரகஸ்பதி யும் இந்திரன் பிழையை பொறுத்தருளினார்.

குருவிற்கு அபச்சாரம் செய்து விட்ட தேவேந்திரன் தன் பாவத்திற்கு பரிகாரம் தேடுவதற்காக க்ஷேத்ராடனம் புறப்பட்டான். பூ மண்டலத்திலுள்ள பல்வேறு க்ஷேத்திரங்



களுக்குச் சென்று, தரிசனம் செய்து கொண்டே வந்தவன் மதுரை மாநகர் வந்ததும் தன் உடலிலும், உள்ளத்திலும் ஒரு வித புத்துணர்ச்சியையும் பெருமிதத்தையும் உணர்ந்து மதுரையிலேயே தங்கினான். சிவலிங்கப் பெருமானுக்கு திருக்கோயில் கட்ட எண்ணி தேவதச்சன் விசுவ கர்மாவை அழைத்து சித்ரா பௌர்ணமி தினத்தில் கோயிலை கட்டி முடித்து அபிஷேக ஆராதனை செய்தான்.

அதனால்தான் இன்றும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தேவேந்திரன் சொக்கநாத பெருமாளையும், மீனாட்சி அம்மனையும் வழிபடுவதாகக் கொண்டு மதுரையில் சித்ரா பௌர்ணமி விழா ஒரு பெரிய திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. சித்திரை மாதம் வரும் அமாவாசையும், கிருத்திகையும் கூட பண்டிகைகளாகக் கொண்டாடப்படுகிறது. இராம நவமியும் இம்மாதத்தில்தான் வருகிறது. சித்திரை மாதம் அமாவாசைக்குப் பிறகு வரும் சுக்ல பட்ச பஞ்சமியில் புண்ணிய புருஷர் ஸ்ரீஆதிசங்கரர் அவதரித்தத் திருநாள் வருகிறது.

சந்தோஷம் பொங்கும் இந்த சித்திரை மாதத்தில் ஸ்ரீஇராமானுஜர் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. ஸ்ரீஆதிசங்கரர் அவதரித்தது பஞ்சமி திதி. ஸ்ரீஇராமானுஜர் அவதரித்தது திருவாதிரை நட்சத்திரம். சில ஆண்டுகளில் இருவரது ஜெயந்தியும் ஒரே நாளில் வருவதும் உண்டு! சித்திரை வருடப்பிறப்பு கேரள மக்களால் "விஷு" என்றழைக் கப்படுகிறது. விஷு விழா இரு நாட்கள் கொண்டாடப்படும். விஷுவுக்கு முதல் நாள் ஓலை வேய்ந்த வீடுகளில் பழைய ஓலைகளை நீக்கி புது ஓலை வேய்வர். மற்ற வீடுகளில் வர்ணம் பூசுவர். வீடுகளை பல விதங்களிலும் அலங்கரிப்பார்கள். விஷுவுக்கு முதல் நாள் இரவில் ஒரு பெரிய தட்டில் அரிசியை பரப்பி அதில் நவதானியங்கள், பொன் நகைகள், புத்தகங்கள், உடைத்த தேங்காய்கள், கொன்றை மலர், வெள்ளரிக்காய், மாவடுக் கொத்து, தின்பண்டங்கள் ஆகியவற்றை அழகாய் அடுக்கி படுக்கையறையில் வைத்து விடுவர். விஷு நாளில் பொழுது விடியும் முன்பாக விழி திறவாமல், முதல் நாள் வைத்த தட்டை கண்டு விட்டு பிறகு மற்ற பொருட்களைக் காண்பர். இதனை "விஷுக்கனி" காணுதல் என்றழைப்பர். மலரும் புத்தாண்டில் விழிகளை திறந்ததும் நல்ல பொருள்களை காண்பதால் அசைக் கனவுகள் நனவாகும் என்று நம்புகின்றனர். இவ்விதம் விஷுக்கனி காண்பதை "மங்களத் திண்ட ப்ரதீஷ" என்றழைக்கின்றனர். விஷுவன்று இரவும், பகலும் பெரும்பாலும் சமமாகும். "விஷு" என்றால் சமத்துவம் அல்லது சரி சமமான நிலை என்று பொருள்.

இவ்வாறு மாதங்களில் பெருமைக் கொண்டு முத்திரை பதிக்கும் சித்திரை மாதத்தை இரு கரம் கூப்பி வரவேற்போம்.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 32க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | 2 வ | ல் | லி | க் | கே | ணி | 3 அ | வ | ந் | 4 தி |
| ரு | 5 வ | ல | | | | 6 ஆ | ன் | க | ன | 7 ஜ | |
| ப் | ர | ம் | ய | யா | தி | த் | அ | ம் | தா | த் | 8 ப |
| ப | த | பு | 9 செ | ந் | தா | ம | ரை | 10 பி | ர | 11 சு | |
| தி | ரா | ரி | தி | த் | 12 அ | கா | | ரு | | 13 பெ | |
| ம | ஜ | ச் | தி | க | ணா | ர | 14 ச | ந் | | ரு | |
| லை | ஸ் | 15 ச | வு | ர | ம் | க | ப | தா | மி | மா | ர் |
| | த | ங் | 16 வ | ரா | க | ர் | ரி | வ | சு | ள் | ளு |
| | வ | 17 கு | ம் | ப | 18 க | ர் | ண | ன் | ட் | தி | ள் |
| 19 ந | ம் | மா | ழ் | வா | ர் | த | | ய | ல | ரு | வ |
| 20 அ | லி | பி | ரி | | ண | ர | | ஜ | கா | மொ | ரு |
| 21 தி | ரு | வ | ல் | லா | ன் | 22 நா | | 25 வி | 23 ம | ழி | 24 தி |

ஆலய தரிசனம்



# வலங்கைமான் ஸ்ரீமதுவன ராமர் கோயில்

அமரர். வி.பி.கே. மூர்த்தி, பாபநாசம்.

பல ஆண்டுகளாக பக்தர்களால் போற்றப்படும் புகழ்பெற்ற கோயில் ஸ்ரீமதுவனராமர் கோயில் ஆகும். இக்கோயில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அக்ரகாரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் 3 நிலை ராஜகோபுரம், நீண்ட மதிற்சுவர் – கருவறை விமானத்துடன் காட்சியளிக்கிறது.



**மது வனம் :**

அழகிய அடர்ந்த காடு, தேனீக்களும், தேன்கூடும் நிறைந்த காடு. எப்போதும் தேன் சொட்டிக் கொண்டேயிருக்கும். அதனால் இந்த ஊருக்கு "மதுவன சேத்திரம்" என்ற சிறப்பு பெயரும் உண்டு. இராமருக்கு சீதை இலங்கையில் அசோக வனத்தில் இருக்கிறாள் என்ற செய்தி, வலங்கைமான் பகுதியில் இருந்தே கிடைத்ததாக வும் கூறப்படுகிறது. வலங்கைமானின் புராண பெயர் "மதுவனம்" ஆகும்.

இராமர் சீதையுடன் இலங்கையிலிருந்து புறப்பட்டு, பாரத தேசம் வருகிறார் என்ற மகிழ்ச்சியான செய்தி கேட்டு, சுக்ரீவனும், அவனுடைய படைகளும், மதுவனத்தில் புகுந்தனர். தேனைக் குடித்து, மதிமயங்கி காடுகளை சின்னாபின்னம் ஆக்கினர்.



**கதிமுகராஜன் :**

வலங்கைமான் பகுதி மதுவன காடுகளை கதிமுகராஜன் என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். தனது காடுகள் அழிக்கப் பட்டதை அறிந்து மிகவும் வருந்தினான். இராமரை மனதில் தியா னித்து வழிபாடு செய்தான். வானரப் படைகள் அமைதி அடைந் தன. இராமருக்கு உள்ள சக்தியையுணர்ந்த கதிமுகராஜன், இராமர் சீதை லட்சுமணரை வரவேற்கும் நோக்கத்திலும், மக்கள் வழிபாட்டிற்காகவும் இக்கோயிலைக் கட்டினான். அக்கோயிலே "ஸ்ரீமதுவனராமர் கோயில்" ஆகும்.



### மூலவர் :

இக்கோயிலின் மூலவர் ராமர், சீதை, லட்சுமணன் ஆவர். கருவறையில் அமர்ந்த நிலையில், மிகவும் சக்தி வாய்ந்த வராக இராமர் அருள்பாலிக்கிறார். இங்கு அர்த்த மண்டபம், மகாமண்டபம் உள்ளன. ஸ்ரீராமானுஜர், ஸ்ரீநவநீத கிருஷ்ணன், ஆழ்வார் சன்னதிகளும் உள்ளன.

### வீணா கான ஆஞ்சநேயர் :

கருடாழ்வாரை தரிசித்தபிறகு, படியேறியதும், வீணாகான ஆஞ்சநேயரை தரிசிக்கலாம். சரஸ்வதிக்கு உரிய வீணையை ஆஞ்சநேயர் மீட்கிறார். இன்னொரு கையில் பஜனை (சப்பலா கட்டை) ஏந்தி ஒரு காலை மடித்து, அமர்ந்து வீணா கானம் பாடுகிறார். கருவறையில் இருக்கும் மூலவர் இராமர் சீதை லட்சுமணரின் இந்த ஆனந்த குடும்பத் தோற்றத்தைக் கண்டு ஆஞ்சநேயர் மெய்மறந்து வீணை இசைக்கிறார் போலும் – ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் மூல நட்சத்திரத்தில் “ஆஞ்ச நேய ஜெயந்தி” விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இவரை வணங்கினால் இசைஞானம் பெருகும், புகழ் சேரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இராமர் சீதை லட்சமணருக்கு அழகிய உற்சவரும் இருக்கின்றது. விஜய நகர அரசர் காலத்து செப்பேடு ஒன்றும் உள்ளது. அதில் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட நிலம், தானம் ஆகியவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாலயம் தமிழக இந்துசமய அறிநிலையத்துறை ஆட்சி நிர்வாகத்தில் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக தை மாதத்தில் மாபெரும் சீதை ராமர் திருக்கல்யாண உற்சவத்தை பெரிய அளவில், உற்சாகத்துடன் பக்தர்கள் நடத்துகிறார்கள். அப்போது நூற்றுக்கணக்கில் பக்தர்கள் கூடி, திருமண வைபவத்தை கண்டுகளிக்கிறார்கள்.

### வழிபாட்டு பலன் :

நித்திய பூஜையில் கலந்து கொள்பவர்களுக்கு, கேட்டதெல்லாம் கைமேல் பலனாகக் கிடைக்கும். திருமணக் காட்சியை காண்பவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். பிரிந்த தம்பதிகள் கூடுவர். குழந்தை பாக்கியம் கிடைக்கும். இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். வியாபாரிகளுக்கு வருமானம் கூடும். இன்னும் பல பலன்கள் கிடைக்கும். இக்கோயில் பூஜைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு மூல காரணமாய் இருப்பவர்கள் கிராமவாசிகள், இளைஞர்கள், உபயதாரர்கள் உள்ளிட்ட பக்தர்கள் குழு ஆவர்.

### கோயில் இருக்குமிடம் :

கும்பகோணம் – வலங்கைமான் பஸ்மார்க்கம். அக்கிரகாரத்தில் மதுவன இராமர் கோயில் உள்ளது. தரிசன நேரம் காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை. மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்**

- “ஸப்தகிரி” மாத இதழ் தொடர்பான ஆலோசனைகள்/அறிவுரைகள்/புகார்களை sapthagiri_helpdesk@tirumala.org வாயிலாக தெரியப்படுத்தவும்.
- ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலைபேசி எண்ணிற்கு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண் வாயிலாக மட்டுமின்றி sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.
- ஆன்லைன் சந்தாதாரர்கள் தங்களுடைய முழு முகவரியை தி.தி.தே. இணையதளத்தின் வாயிலாக கட்டாயம் தெரியப்படுத்தவும்.

–பிரதான ஆசிரியர்



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## தேவஹூதி கர்தமர் கதை

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

உலக உயிர்களைப் படைக்கத் தொடங்கிய போது, மனித உற்பத்திக்குக் காரணமான பெரியோர்களைப் பிரஜாபதிகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் பிரம்ம தேவரின் பிள்ளைகளாவர். பிரம்ம தேவரும் தன்னுடைய பிள்ளைகளைப் போலவே பிரஜாபதி என்றே அழைக்கப்பட்டார். பகவானின் ஆணைக்கிணங்க பிரம்மா படைப்புத் தொழிலை தொடங்கிய போது எவ்வளவு முயற்சித்தப் போதிலும், அவர் எண்ணத்திற்குத் தகுந்தாற்போல் அது சரியாக அமையவில்லை. ஆகவே, அவர் தீவிரமான தபசும், ஆராதனையும், சமாதி தன்மையும், பக்தி யோகங்களோடு கூடி, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்க மகரிஷிகளைப் படைத்தார். பின்பு, சமாதி, யோகம், அசாதரணமான சக்தி, தபசு, ஆராதனை, வைராக்கியம் முதலான சக்திகளோடு கூடிய தன் உடலில் இருந்து ஒவ்வொரு பகுதியையும் அந்த மகரிஷிகளுக்குத் தந்தார். அப்படியாக பிரம்மாவிற்குப் பிறந்த பிள்ளைகளில் ஒருவர் கர்தமர் முனி. மனித உற்பத்திக்குப் பெரும் பங்கு ஆற்றியக் காரணத்தால், அவர் கர்தமர் பிரஜாபதி என்னும் சிறப்பு பெற்றார். தன் தந்தையான பிரம்மாவின் கட்டளைப்படி மக்களை உருவாக்குவதற்கு முன்பாக சரஸ்வதி நதிக்கரையில் பத்தாயிரம் ஆண்டுகள் கடுமையான தவம் இயற்றினார். உலக நன்மையின் பொருட்டு செய்யப்படும் எக்காரியமானாலும் வெற்றிப் பெற வேண்டுமானால் இறைவனின் அருளாசி நிச்சயம் வேண்டும். அதற்கு தவம் இயற்றுவது அவசியமாகின்றது. சத்திய யுகத்தில் ஆயுட்காலம் என்பது ஒரு லட்சம் வருடமாக சொல்லப்பட்டுள்ளது. எனவே அவ்வாயுட்காலத்தில் 10 சதவீதம் என்றால் 10,000 ஆண்டுகள் கர்தமர்முனி தவம் செய்வதிலேயே காலத்தை செலவிட்டார். ஆனால் கலியுகத்தில் இது சாத்தியம் ஆகக் கூடியது அல்ல. எனவே இறைவனை அடைவதற்கான எளிமையான வழி “ஹரி நாம சங்கீர்த்தனமே” என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

கர்தமரின் தவத்தால் மகிழ்ச்சியுற்று ஸ்ரீஹரி அவர் முன் தோன்றி “உன் மனதில் நீ என்ன கோரிக்கை வைத்துக் கொண்டுள்ளாய் என்பதை நான் அறிவேன். அஃது நிறைவேற என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்வேன். பூமியைப் பரிபாலனம் செய்து வரும் சுயம்புவ மனுவுக்கு திருமண வயதில் ஒரு பெண் உள்ளாள். அவளை உனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி அவர் இங்கே வரப் போகிறார். நீயோ மனித உற்பத்திக்கு தேவையான சரியான பத்தினியைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறாய். அவள் உனக்கு மிகவும் பொருத்தமானவளாய் இருப்பாள். உங்களுக்கு ஒன்பது பெண் குழந்தைகள் பிறப்பர். அந்த ஒன்பது பேரும் மகரிஷிகளை மணப்பர். அவர்கள் மூலம் பூமியில் சந்ததி விருத்தி பெருக்கமடையும். அடுத்து உங்களுக்கு மகனாக நானே வந்து பிறப்பேன். உங்கள் இருவருக்கும் நான் தத்துவ உபதேசம் செய்து உங்களுக்கு நன்மார்க்கத்தை வழங்குவேன். பின்பு நீ என்னை வந்தடைவாய்” என்று கூறினார்.

பகவான் இவ்வாறு கூறிப் பின் தன் கருட வாகனத்தின் மீதேறி வைகுண்டத்திற்குச் சென்றார். இறைவன் எதிர்காலத்தைப் பற்றி கூறிச் சென்றதை நினைத்து, அது நிறைவேறும் காலத்தை எதிர்பார்த்து அங்கேயே காத்திருந்தார். இறைவன் கூறியவாறு சுயம்புவ மனுவும், அவருடைய மனைவியும், தன் மகள் தேவஹூதியுடன் அங்கு வந்து சேர்ந்தனர். வந்த அவர்கள் கர்தமர் முனிவரை மிகவும் பணிவுடன் வணங்கினர். அப்பொழுது கர்தமர் அவர்களைப் பார்த்து நீங்கள் எண்ணி வந்த காரியத்தை நல்ல விதமாக தீர்த்து வைக்க தான் தயாராக உள்ளதாகக் கூறினார். அப்பொழுது சுயம்புவ மனு தன் மகள் திருமணத்தைப் பற்றி எடுத்துக் கூறி, அவள் தங்களையே திருமணம் செய்து கொள்ள விருப்புவதாகக் கூறினார். அதைக் கேட்ட கர்தமர் முனி எல்லாம் இறைவனின் அனுக்கிரகமாக பாவித்து திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். பின்பு வேத முறைப்படி தேவஹூதிக்கும் கர்தமருக்கும் திருமணம் நடந்தேறியது.



தேவஹூதி பெரிய மாளிகையில் பிறந்து வளர்ந்திருந்தாலும், திருமணத்திற்குப் பின்பு ஆசிரமத்தில் கணவரின் மனம் கோணாமல் நடந்து வந்தாள். மேலும் ஆசிரம விரதங்களை அனுஷ்டித்தாள். தன்னுடைய உடல் நலத்தைப் பற்றி கவலைக் கொள்ளாமல் தன் கணவருக்கு பலவிதமான பணிவிடைகள் செய்து வந்தாள். கர்தமரும் தன்னுடைய மனைவியின் நடவடிக்கைகளால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். எனவே, அவர் தன்னுடைய மனைவியை நோக்கி, "பெண்ணே! உன் பதிசேவையைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனவே உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறேன் என்றார். அதைக் கேட்ட தேவஹூதி, எனக்குப் புத்திரப் பேறு உண்டாக வேண்டும் என்றும், அப்படி உண்டாகும் புத்திரப் பேற்றினை தாங்கக் கூடிய ஆரோக்கியமான தேகபலத்தைக் கொடுக்கும்படியும், மேலும் குடும்ப வாழ்க்கையை சுகமாக வாழ்வதற்கு ஏற்றார்போல நல்ல வீடு ஒன்றையும் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். உடனே கர்தமர் தன்னுடைய மனைவியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தன் யோக பலத்தால் ஒரு விமானத்தை உண்டாக்கினார். அந்த விமானம் தேவேந்திரனின் மாளிகையைப் போல ஒளி வீசியது. பின்பு அவர் தன் மனைவியைப் பார்த்து பிந்து சரோவரத்தில் நீராடி விட்டு வரும்படி கூறினார். அவளும் சரோவரத்தில் மூழ்கி எழுந்தாள். அப்பொழுது அழகிய, இளமையான குமரிப் பெண்ணாக உருவம் மாறியவளாய் வெளியில் வந்தாள். அது மட்டுமின்றி அவளுடன் பல பணி பெண்களும் சூழ அவள் வெளியே வர கர்தமர் அவளுடைய அழகில் மயங்கினார். அப்பொழுது கர்தமரின் தவவலிமையால் தேவஹூதி ஒரே நாளில் ஒன்பது பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அவர்கள் எல்லோரும் மிகவும் அழகானவர்களாக விளங்கினார்கள். பின்பு கர்தமர் இல்லற வாழ்க்கையைத் துறந்து, துறவற வாழ்க்கையை மேற்கொள்வதற்குத் தயாரானார். அதைக் கண்டு தேவஹூதி கண்ணீர் மல்க அவரைத் தடுத்து நிறுத்தி, "சுவாமி! நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினீர்கள். குழந்தை பாக்கியத்தை உண்டாக்கினீர். ஆனால் அக்குழந்தைகள் எல்லோரும் பெண் பிள்ளைகள். இவர்கள் அனைவரும் திருமணம் செய்து கொண்டு சென்ற பின்பு என்னை யார் பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் வரம் கொடுத்த போதும் இந்திரிய சுகத்தில் மூழ்கி, மோட்சத்தை அடையும் வழியை மறந்தே போனேன்" என்று அவள் முறையிட்டாள்.

அவளுடைய வேண்டுகோளைச் செவிமடுத்த கர்தமர், கவலைக் கொள்ளாதே பகவானே உன்னுடைய கர்ப்பத்தில் மகனாகத் தோன்றப் போகிறார் என்றும், அவரே தம் குலத்தை விஸ்தரிக்க செய்வதாகவும், தாயாகிய உனக்கு பிரம்ம ஞானம் உபதேசம் செய்வார் என்றும் அதன் காரணமாகக் கர்ம பந்தம் அறுபட்டு மோட்சத்தை அடைவாய் என்றும் கூறினார். சில காலம் கழித்து தேவஹூதி கர்ப்பம் அடைந்தாள். பகவானே அவளுடைய கர்ப்பத்தில் பிரவேசித்தக் காரணத்தால், அதை அறிந்த பிரம்மதேவன், மரீசி முதலான முனிவர்கள் கர்தமரின் ஆசிரமத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பிரம்ம தேவரின் கட்டளைப்படி கர்தமர் முனி தன்னுடைய ஒன்பது பெண்களையும் ஒன்பது முனிவர்களுக்குக் கொடுத்து

திருமணம் செய்து வைத்தார். தன்னுடைய ஒன்பது பெண்களில் கலையை மரீசிக்கும், அனுசூயை அத்திரிக்கும், சிரத்தையை அங்கிரஸ்சுக்கும், அவிர்பூ புலஸ்தியருக்கும், கதியை புலகருக்கும், கிரியையை கிருதுவருக்கும், கியாதியை பிருகுவுக்கும், அருந்ததியை வசிட்டருக்கும், சாந்தியை அதர்வா முனிவருக்கும் கொடுத்து முறைப்படி திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்த பின்பு முனிவர்கள் எல்லோரும் தன் மாமாவின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு தம்தம் மனைவியரோடு ஆசிரமத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பிறகு கர்தமர் முனி ஆசிரமத்தில் கபில பகவான் அவதாரம் செய்தார். பகவானே நேராக தம் வீட்டில் அவதாரம் செய்துள்ளதை உணர்ந்து கொண்ட கர்தமர் ஏகாந்தமாக கபில பகவானிடம் சென்று தன் எதிர்கால திட்டத்தை அவரிடம் எடுத்துக் கூறினார். துறவறவத்தை மேற்கொண்டு தேவாதி தேவனாகிய இறைவனை எப்பொழுதும் தன் இதயத்தில் நிறுத்தி மோட்சத்தை அடைவதே இலட்சியம் என்று கூறினார். அதைக் கேட்ட கபிலர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து தான் அவதரித்த நோக்கத்தை, பயனைக் கூறத் தொடங்கினார். நானே உனக்கு மகனாகப் பிறப்பேன் என்று கொடுத்த அந்த சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு இப்பொழுது இங்கு அவதரித்து உள்ளேன்.



நீ உன்னுடைய கர்ம பலன்களை எல்லாம் என்னிடத்தில் சமர்ப்பித்துவிட்டு உன் விருப்பப்படி நீ செல்வாயாக. மரணத்தை வென்று மரணமிலா பெருவாழ்வு வாழ்வாயாக. இறைவனாகிய என்னை ஆத்மாவின் மூலம் தரிசனம் செய்வாயாக.

மேலும், என் தாயாருக்கும் ஆத்ம ஞானத்தை உபதேசிப்பேன். அவளும் கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடைவாள் என்று கூறினார். அப்பொழுது கர்தம பிரஜாபதி தன் மகனான கபில பகவானை மூன்று முறை வலம் வந்து, நிறைந்த மனதோடு கானகம் புறப்பட்டுச் சென்றார். அங்கு நிஷ்டையில் இருந்து ஆத்மாவின் மூலம் இறைவனை தரிசனம் செய்தார். அவருடைய மனம் அலைகள் அற்ற கடலாக ஆயிற்று. இப்படியாக இருந்து முடிவில் பரமபதத்தை அடைந்தார்.

தன் கணவர் கானகம் சென்ற பின்பு தேவஹூதி தன் பிள்ளையான கபிலருடன் பிந்து சரோவரத்திற்கு அருகிலேயே வசித்து வந்தாள். பிறகு, தேவஹூதி தன் மகனிடம் சென்று தனக்கு ஞான மார்க்கத்தை போதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். மேலும், மாயமோக சாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் என்னை அதிலிருந்து கடைத்தேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாள். உடனே கபிலர் தன் தாயின் வேண்டுகோளை ஏற்று அவளுக்கு பக்தி யோகத்தை பற்றியும், சாங்கிய யோகம் பற்றியும் விவரித்துக் கூறினார். ஞானமார்க்கத்தை தாய்க்கு போதித்த பின்பு கபிலர் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். இன்னும் சிறிது காலத்திற்குள் மோட்சத்தை அடைவாய் எனத் தன் தாய்க்கு வரம் கொடுத்தார்.

அதன் பிறகு கபிலர் அங்கிருந்து புறப்பட்டு வடதிசை நோக்கிச் செல்லத் தொடங்கினார். அப்பொழுது சாரணர்களும், கந்தர்வர்களும், மகரிஷிகளும், சித்தர்களும் அவரைப் போற்றி புகழ்ந்து வணங்கினர். சமுத்திரராஜன் அவரை வரவேற்றுத் தக்க ஆசனத்தின் மீது அமரச் செய்து வணங்கினான்.

கபிலர் முதல் முதலில் இமாலயத்திற்குச் சென்று அங்கு கங்கா நதி உற்பத்தியாகும் இடத்தை கண்டு கொண்டார். பின்பு கங்கா நதி தீரத்திற்கு வந்தார். அப்பொழுது தேவாதி தேவனாகிய கபிலருக்குக் கங்கை நதிக்கரையை ஒட்டிய பிரதேசத்தில் அவர் நிவசிப்பதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் சமுத்திரராஜன் செய்து கொடுத்தான். அவரும் அங்கு அமர்ந்து யோகம் செய்யத் தொடங்கினார். இன்றும் அங்கேயே இருந்து அவர் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

கபிலர் சரித்திரத்தையும், கபிலர் உபதேசித்த சாங்கிய தத்துவத்தைக் கேட்போரும் படிப்போரும் கருட வாகனனான கிருஷ்ணனின் பக்தர்களாவர் என்று பலஸ்ருதியில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத்பாகவதத்தில் கபிலருடைய அவதாரம் ஐந்தாவதாகக் கூறப்பட்டிருப்பது மேலும் சிறப்புடையதாக அமைகிறது.

பாகவத கதை சாகரம் தொடரும்...

சிறார் வாக்கு

# அநந்தாழ்வார் வைபவம்

செல்வி ஸ்மிருதி கிருஷ்ணன், அடையார்

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பல நூற்றுக் கணக்கான மைல் தூரத்திலிருந்து குடும்ப சமேதராய் திருமலைக்கு வந்து சேர்ந்து, சில மணி நேரங்களில் திருமலையானை மிக மிக சுலபமாகத் தரிசித்து விட்டு தத்தம் இருப்பிடத்தை அடைந்து விடுகிறார்கள். இதற்கு வித்திட்டவர் வைணவ ஜகதாசாரியராக விளங்கும் பெரும்பூதூர் மாமுனி இராமாநுஜரின் சீடரான "அநந்தன்" என்பவராவார். அந்த அணுக்கத் தொண்டரான "அநந்தன்" வைபவத்தை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, இராமாநுஜர் தம் நூற்றுக்கணக்கான சிஷ்யர்களிடையே ஒரு கேள்வி கேட்டார். என்ன கேள்வி தெரியுமா? இந்தக் கூட்டத்தில் யாரேனும் ஒருவர் தெழிகுரலருவி சிந்து பூ மகிழும் திருவேங்கட வனத்தையடைந்து அவ்வேழுமலையானுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி கைங்கர்யம் பண்ணுவீர்களா? என்பது தான் அது. எல்லோரும் வாய் மூடி மௌனியாய் இருக்க, அனைவரும் அதிசயிக்கும் வண்ணம் அனந்தன் மட்டும் எழுந்து பவ்யமாக நின்று, "அடியேனுக்கு உத்திரவிட்டால் திருமலை சென்று திருமலை ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு நித்ய கைங்கர்யம் பண்ண சித்தமாயிருக்கிறேன்" என்றார். உடனே அதை ஆமோதித்த இராமாநுஜர் "ஓ, அநந்தனே, இக்கூட்டத்திலே நீர் ஒருவர் தான் ஆண்பிள்ளை காணும்!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார். அன்றிலிருந்தே அனந்தனின் வம்சத்தினருக்கே "திருமலை அநந்த(ா)ஆண்பிள்ளை வம்சம்" என்ற பெயர் ஏற்படலாயிற்று.

அனந்தரும், அவர் தம் நிறை மாத கர்ப்பிணியான மனைவியுடன் வனங்கள் சூழ்ந்த ஏழு மலைகளையுடைய திருமலையை மிகக் கடினத்துடன் கடந்து உச்சியை அடைந்தார். இரவு பகல் பாடுபட்டு திருமலை கோவிலுக்கு அருகிலேயே தோட்டங்கள், நந்தவனங்களையெல்லாம் அமைத்து, குளமும், ஏரியும் வெட்டி, புஷ்ப கைங்கர்யங்களை இடைவிடாது அவர் காலம் வரை நடத்தி வந்தார்.

அனந்தாழ்வான் அமைத்து வைத்த தோட்டம் "அனந்தாழ்வான் தோட்டம்" என்றே இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தோட்டம் திருமலை கோயிலின் பின் புறத்தில் இருக்கிறது. அவர் உபயோகப்படுத்திய "இரும்பு கடப்பாறையும் கோவிலின் முகப்பில் உள்ள இடது பக்கக் கதவிற்கு மேலே சுவற்றில் மாட்டப்பட்டு இன்றளவும் தரிசனமாகிக் கொண்டிருக்கிறது.

திருமலை செல்லும் பக்தர்களே, அடுத்த முறை செல்லும் போது இவை இரண்டையும் தரிசித்து வருவது நாம் அனந்தாழ்வார்க்குச் செலுத்தும் நன்றிக் கடனாக அமையும்.



# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**நம்மாழ்வார் வாழித் திருநாமம் தொடர்ச்சி...**

(மதுரகவி தம்பிரான்) நம்மாழ்வார் மதுரகவியாழ்வாருக்குத் தலைவர். தம்பிரான் – "தேவு மற்றறியேன்" என்று நம்மாழ்வாரையே ஆசார்யராகவும் தெய்வமாகவும் கொண்டு வழிபட்டு ஆழ்வாரைப் பற்றி ***"கண்ணிநுண் சிறுத் தாம்பு"*** என்ற பத்து பாசுரங்களைப் பாடி அவர் அருளால் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களைப் பெற்றமையால் ஆழ்வார் மதுரகவி தம்பிரானார்.

***"ஆன திருவிருத்தம் நூறும் அருளினான் வாழியே***
***ஆசிரியம் எழுபாட்டளித்தபிரான் வாழியே***
***ஈனமற அந்தாதி எண்பத்து ஏழு ஈந்தான் வாழியே***
***இலகு திருவாய்மொழி ஆயிரத்து ஒரு நூற்றிரண்டு உரைத்தான் வாழியே***
***வாரணியும் மாமாடக்குருகை மன்னன் வாழியே***
***வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே***
***சேனையர்கோன் அவதாரம் செய்த வள்ளல் வாழியே***
***திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே."***

(பதவுரை) ஆன – "அந்த" என்று கொண்டாடும்படியான, திருவிருத்தம் – திருவிருத்தம் என்னும் பிரபந்தம், நூறும் – நூறு பாட்டையும் –அருளினான். ஆசிரியம் – பாவகையில் முதலாவதான ஆசிரியப்பாவில் அமைந்த திருவாசிரியம், –ஏழு பாட்டளித்த, பிரான் – உதவி செய்தவன். ஈனமற – குறைபாடு இல்லாத, அந்தாதி – முடிவும் முதலும் ஒரு சொல் கொண்ட, எண்பத்து ஏழு ஈந்தான் –87 பாடல்களை அருளினான். இலகு – விளங்குகிற, திருவாய்மொழி – மனதின் உதவியின்றி வாய்மொழியால் பாடிய திருவாய் மொழி, ஆயிரத்து ஒரு நூற்றிரண்டு – 1102 பாடல்கள், உரைத்தான் – அருளினான். வாரணியும் – வரிசையும் அழகும் கொண்ட, மா – பெருமை பொருந்திய, மாடம் – உபரிகையுள்ள வீடுகளுடன் கூடிய, குருகை – ஆழ்வார் திருநகரிக்கு, மன்னன் – தலைவரான நம்மாழ்வார். வைகாசி – மாதவ மாதம் எனப்படும் வைகாசியில், விசாகத்தில் – விசாக நக்ஷத்ரத்தில், வந்து உதித்தான் – அவதரித்தவன். சேனையர் – நித்ய சூரிகளுக்கு, கோன் – பரமபதத்தில் தலைவரான சேனை முதலியார், அவதாரம் செய்த – இங்கு இரங்கி வந்து, நம்மாழ்வாராக அவதரித்த, வள்ளல் – வண்மையுடன் வந்தவர். திருக்குருகை – ஆழ்வார் திருநகரியில் அவதரித்த, சடகோபன் – சட என்னும் வாயுவை போக்கிய சடகோபன், திருவடிகள் வாழியே.

(சிறப்புரை) (ஆன திரு விருத்தம்) ஆன – "அந்த" என்று பிரசித்தியைச் சொல்லுகிறது. திருவிருத்தத்துக்கு பிரசித்தியாவது "உயிரின் பொருள்கட்கு ஒரு விருத்தம் புகுதாமல் குருகை யர்கோன் உரைத்த திருவிருத்தம்" என்பர் கிடாம்பியாச்சான். அதாவது உடலளவன்றிக்கே ஆத்ம பயன் பொருட்டாக ஒரு கெட்ட செயல்கள் ஒன்றும் சென்று அணு காமல் செய்த பிரபந்தம் என்பர் பிள்ளை லோகம் சீயர். இதில் திரு மந்திரத்தில் முதல் பதமான பிரணவத்தையும், உபாயத்தை நிச்சயித்துச் சொல்லும் இரண்டாவது பதமான நம: என்பதையும் விவரிப்பதாகும். அதாவது "அடியேன் செய்யும்



விண்ணப்பமே" என்று அடிமைத்தன்மையை விளக்கிக் கொண்டு தொடங்கி அதை சிறப்பாக விளக்கிக் கொண்டு சென்று இறுதியில் *''ஞானப்பிரானையல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே''* என்று உபாயம் எம்பெருமானே என்று நிச்சயிக்கிறார் ஆழ்வார். நூறு பாடல்கள் கொண்ட இப்பிரபந்தத்தில் முதல் பாட்டும் கடைசி பாட்டும் தானான தன்மையிலும் மற்ற பாடல்கள் நாயிகாபாவத்திலும் அமைந்துள்ளது. இதில் பயிற்சியுடைய அறிவை தாய் என்றும், பாகவதர்களை தோழி என்றும், சேர்ப்பிப்பவனான ஆசார்யனை தூது என்றும், அறிவின் பிரிதொன்றுக்கில்லாச் சிறப்பை கண்ணழகு என்றும், பக்தியின் சிறப்பை அநுபவிப்பதற்குக் கருவியான முலை அழகு என்றும், வைராக்யத்தை இடை அழகு என்றும், அனுட்டானத்தை நடை என்றும், அவனுக்கே உரிய அடையாளங்களை வளைகள் என்றும், அறியாமையை இருள் என்றும், துன்புறுத்தும் பொருள்களை வாடை, தென்றல், அன்றில் என்றும், தாமதத்தைப் பொறுக்காமையை இரவு நெடுமை என்றும், அநுபவத்துக்குத் தகுந்த காலத்தை பொழுதொடு புலம்பல் மாலைக்கு ஆற்றாமை என்றும், பிரிவில் வருத்துவதான விவேகத்தை சந்திரோதயம் என்றும் கூறப்பட்டுள்ளன. இதில் நடந்த கதைகளைச் சொல்லுகிறபடியால் இந்தப் பிரபந்தத்துக்குத் திருவிருத்தம் என்று திருநாமமாயிற்று என்பர்.

(ஆசிரியம்) – *''காசினியோர் தாம் வாழக் கலி யுகத்தே வந்துதித்து ஆசிரியப்பாவதனால் அருமறை நூல் விரித்தானை''* என்று அருளாளப் பெருமாள் எம்பெருமானார் என்னும் ஆசாரியர் திருவாசிரிய தனியனில் அருளியபடியே "நம்மாழ்வார் இப்பூமியிலுள்ள மனிதர்கள் உய்யும் பொருட்டு கலியுகத்தில் வந்து அவதரித்து தமிழில் வெண்பா முதலான பலவகையான பாக்கள் இருந்தபோதிலும் ஆசிரியப்பாவிலேயாயிற்று திருவாசிரியம் என்னும் ஏழு பாட்டை அளித்தான்" என்பர் பிள்ளைலோகம் சீயர். திருவாசிரியத்தில் ஆசிரியப் பாவுக்குரிய ஈரசைச் சீர்களான மாச்சீரும் விளச்சீரும் பெரும்பாலும் வந்து, அகவலோசை பெற்று, ஒவ்வொரு பாடலின் ஈற்றடியின் இறுதிச்சீர் ஏகாரமாக முடிவது சிறப்புடையதாகும்.

(ஏழு பாட்டளித்த பிரான்) – யஜுர்வேதம் ஏழு காண்டங்களைக் கொண்டது. அதுபோல இப்பிரபந்தமும் ஏழு பாடல்களைக் கொண்டது. யஜுர் வேத ஸாரமான இந்தப் பிரபந்தத்தை மறவாமல் இருக்க உதவி செய்த நம்மாழ்வாரைப் "பிரான்" என்கிறார். திருமந்திரத்தின் மூன்றாவது பதமான "நாராயணாய" என்பதன் பொருள் இந்தப் பிரபந்தத்தில் விளக்கம் பெறுகிறது. அதாவது *''செக்கர்மா முகிலுடுத்து''* என்று தொடங்கி எம்பெருமானுடைய ஸ்வரூபம். ரூபம், குணம், விபூதிகளையும், தன் பயனான பக்தியையும், *''தனிமாத் தெய்வத்தடியவர்க்கு இனி நாம் ஆளாகவே இசையுங்கொல்''* என்று சரம பர்வமான பாகவதர்கள் திறத்து கைங்கர்யமாகிற உயர்ந்த உறுதிப் பொருளையும், *''மாயக் கடவுள் மா முதல் அடியே...''* என்று எம்பெருமான் திறத்து மங்களாசாசனமும் கைங்கர்யமுமாகிற உறுதிப் பொருளையும் விளக்குகையாலே "நாராயணாய" என்பதன் பொருளாக அமைந்தது காணலாம்.

(ஈனமற அந்தாதி) நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களில் பெரிய திருவந்தாதி மூன்றாவதாவதாகும். அந்தாதி என்பது ஒரு பாடலில் இறுதிச் சொல்லோ எழுத்தோ அடுத்த பாடலின் முதல் சொல்லாகத் தொடுத்து வருவதாகும். உலகிலுள்ள விஷயங்களை அனுபவிக்கும்போது சிறந்தவை என்று சொல்லாத தகுதியற்றவையாய் அனுபவித்தாலும் இன்னது அனுபவித்தோம் என்று அநுபவிப்பவனாலும் சொல்ல முடியாததாய் இருக்கும். ஆனால் பகவானாகிற விஷயம். அனுபவித்த பகுதியும் வருணிக்க முடியாததாய் அனுபவிக்க வேண்டிய பகுதியும் மிகப் பெரியதாயிருக்கும். எனவே பகவத் விஷத்துக்குத் தக்கபடி அனுபவிக்கும் ஆர்வம் ஆழ்வாருக்கு இருக்கிறபடியைச் சொல்லுவதால், எந்தக் குறையீடுமில்லாமல் அமைந்தது பற்றி "ஈனமற அந்தாதி" எனப்பட்டது. 87 பாடல்களைக் கொண்ட இப்பிரபந்தம் அதர்வண வேத ஸ்தானம் என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இரகசிய நூல்களில் மூன்றாவதான சரம ச்லோகத்தை விளக்குவது இப்பிரபந்தம்.

(இலகு திருவாய்மொழி) இலகுதல் – விளக்குதல். சூரியனுடைய ஆயிரம் கிரணங்கள் இருளைப் போக்குவது போல ஆழ்வாருடைய ஆயிரம் பாசுரங்கள் எல்லா மக்களுடைய அக இருளைத் தொலைக்கும் என்பர். இது பற்றியே நம்மாழ்வாரை வகுள பூஷண பாஸ்கரர் என்பர். திருவாய்மொழியானது, பிள்ளான், நஞ்சீயர், பெரிய வாச்சான்பிள்ளை, நம்பிள்ளை, வாதி கேசரி அழகிய மணவாளச்சீயர் ஆகியோரின் ஐந்து உரையால் சிறந்து விளங்குகிறது. *''மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் ராமாநுசன்''* என்கிறபடியே வருந்திப் பெற்ற பிள்ளையை வளர்த்தெடுக்கும் தாயைப் போல, திருவாய்மொழியை உரையால் வளர்த்த தாய் எம்பெருமானாராவார்.

(ஆயிரத்து ஒரு நூற்றிரண்டு உரைத்தான்) ஆயிரம் சாகையான ஸாமவேதமாய், அதன் ஸாரமான சாந் தோக்ய உபநிஷத்தாய், அதன் ஸாரமான உத்கீதம் என்ற தாய், அத்தையாயிற்று இப்படிப் பாடியருளினார் என்பர். இதுதான் பத்துப்பத்துக்களாலும் சிறந்து விளங்குகிறது. ஒவ்வொரு பத்தும் பத்து பதிகங்களாய், ஒவ்வொரு பதிக மும் பதினொரு பாடல்களைக் கொண்டதாய் விளங்கி 1102 பாடல்கள் கொண்டதாகும். இந்தத் திருவாய்மொழி எம்பெருமானின் மேன்மை, காரணமாம் தன்மை, பரந்தி ருக்கும் தன்மை, நியமிக்கும் தன்மை, கருணை உடைய தன்மை, தஞ்சமாகும் தன்மை, ஆற்றலுடைமை, ஸத்ய காமமாம் தன்மை, ஆபத்தில் தோழனாம் தன்மை, துக்கத் தைப் போக்கும் தன்மை ஆகியவற்றை விளக்குவதா கும். இரகசிய நூல்களில் இரண்டாவதான துவயத்தின் விவரணம் இத்திருவாய் மொழி என்பர் நம்பிள்ளை. அதாவது முதல் மூன்று பத்துக்கள் துவயத்தின் இரண்டா வது தொடரையும், நாலு, ஐந்து, ஆறு பத்துக்கள் முதல் தொடரையும், கடைசி மூன்று பத்துக்களால் குணங்கள், ஆத்மா, உடைமைப் பொருள்களில் நசையற்றபடியை யும், எம்பெருமானோடு உண்டான இயற்கை உறவையும் சொல்லுவதாகக் கூறுவர். கடைசி பத்து ஆழ்வார் தாம் வேண்டியதைப் பெற்றமையைச் சொல்லுகிறது.

(குருகை மன்னன்) – திருக்குருகூர்க்குத் தலைவ ரான நம்மாழ்வார். இது பற்றியே *''குருகைக்கோன்''* (திருவா.3.8.11) என்று அருளுவர். அதாவது திருநகரிக் குத் தலைவர் என்பர் நம்பிள்ளை. *''எழில் குருகை நாதன்''* என்பர் மாமுனிகள். அதாவது குருகூரிலே ஆதிப்பிரா னான ஆதிநாதனும் உண்டாயிருக்கவும் ஆழ்வாருடைய தலைமை ஆயிற்று நடந்து செல்கிறது. ஆதிநாதனும் குருகைநாதனுமாகிய இரு வடிவு உண்டாயிருக்கவும் ஆழ்வாருடைய தலைமை ஆயிற்று அவன் நடத்தினபடி என்பர். (வாரணியும்) மலை போல் மணி மாடங்களையும் மாடலர் பொழில்களையும் குளங்களையும் அழகிய வளங்களையும் உடையதாயிருக்கும் குருகூர். இது பற் றியே *''வாரணியும் மாமாடக் குருகை''* எனப்பட்டது. *''குரு கூரில் வந்துதித்த கோ''* என்பர் மாமுனிகள். ஸ்ரீவைஷ்ணவர் களுக்கெல்லாம் ராஜா என்றபடி.

(வைகாசி விசாகம்) வைகாசி மாதமானது மாதவ மாதம். ஆகையாலே மலரும் போதான அழகை உடைய தாயிருக்கும். ஆழ்வார் அவதரித்த தேசமான குருகையா னது கொத்துக் கொத்தாக மலர்ந்த மலர்களையுடைய பொழிலையும் குயில்கள் நிறைந்த பொழிலையும் உடை யதாய் இருக்குமாபோலே ஆயிற்று இம்மாதம் என்பர்.



திருவிசாகத்திருநாள் என்னும்படி இருப்பது. ஆழ்வார் அவதரித்த நாளன்று உகந்த திவ்ய தேசங்கள் எல்லா வற்றிலும் பாலும் பழமுமாக அமுது செய்து கொண்டாடப் படும் நாளாயிருக்கை. அதாவது பால் மாங்காய் அமுது செய்யப்பண்ணுகை. ஆழ்வார் அவதரித்த வைகாசி விசாகத்தை ஸம்ஸாரத்தின் இடையிலே அவர்கள் உய் யும் வழியைச் செய்தவர் அவதரித்த நாள் என்று கூறுவர். ஊரும் நாடும் உலகமும் தம்மைப் போலே ஆக்கவல்ல வர் அவதரித்த நாள் என்றும் சொல்லுவர். இவர் அவத ரித்த நாளைச் சொல்லும்போது *''உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பொருநாள்''* என்பர் மாமுனிகள். ஸர்வேச் வரனும் அவன் செல்வமும் வளர்ச்சி பெற்றதாம்படி மங்களாசாசனம் பண்ணப் பிறந்த திருவிசாகத் திருநாளுக்கு ஒப்பாவதொரு நாள் உண்டோ என்பர் சீயர்.

(சேனையர்கோன் அவதாரம்) சேனையர் – நித்ய சூரிகள் – வானவர். அவர்களுக்குத் தலைவன் சேனையர் கோன். ஸ்ரீசேனாபதியாழ்வான் என்று சம்பிரதாய வழக்கு. *''லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்''* என்ற பொதுத் தனியனில் "ஸமாரம்பாம்" என்பதற்கு ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதை யில் பகவானாலே பிரபத்தி உபதேசம் பண்ணப்பட்டவர் பெரிய பிராட்டியாராலே அருள் பெற்று அத்தாலே கைங்கர்யஸ்ரீயை உடையவர் சேனை முதலியார். அவரே சடகோபராக அவதரித்தார் என்பதற்கு ஏற்ப *''வைசாகே து விசாகாயாம்''* என்ற திவ்யசூரி சரித ச்லோகத்தில் "சடாரி ம்சைந்யாம்பஜே" என்று கூறியபடியே "சடகோபராகிற சேனை முதலியார்" என்று அருளியது காண்க. மேலும் "ஆதௌ கலேர்ஹி" என்ற ச்லோகத்தில் "மகவானலபேம் சஜாதம்" என்று சேனை முதலியாருடைய அம்சமாக

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## தானத்தில் சிறந்தது அன்னதானம்

- ⇨ அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- ⇨ அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- ⇨ குழந்தைகள்/பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- ⇨ கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பால் தேவைப்படு பவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

*இறைவனின் சேவையில் பக்தர்கள்; பக்தர்களின் சேவையில் தி.தி.தே.*

அவதரித்தவர் சடகோபர் என்றதும் காண்க. (வள்ளல்) "தென் குருகை வள்ளல்" என்று இராமாநுச நூற்றந்தாதியில் (54) அமுதனார் அருளிய தற்கு ஏற்ப திருநகரியைத் தமக்கு இருப்பிடமாக உடையவராய், எம்பெருமானை அனுபவித்த அநுபவப் பெருக்கான தன் சொற்களை உலகுக்கு உதவிய வள்ளல் என்று மாமுனிகள் அநுபவிப்பர். பகவத் குணங்களை அநுபவிக்க அநுபவிக்க உள்ளடங்காமல் அதன் அநுபவ பெருக்காய் *"மொழிபட்டோடும் கவியமு தின் நுகர்ச்சி உறமோ முழு துமே"* என்று தம்மாலே கொண்டாடப்பட்ட பாசுரங்களை உலகத்தார் எல்லாருக்கும் உதவின வள்ளல் நம்மாழ்வார் என்பர் பிள்ளை லோகம் சீயர்.

(திருக்குருகைச் சடகோபன்) "கர்ப்பஸ்த ஏவ சடஜித்" என்று அரு ளியபடியே கர்ப்பத்தில் இருக்கும் போதே "சடம்" என்னும் வாயுவைக் கோபித்து அடக்கியவராகை யாலே "சடகோபர்" என்று பெயர் பெற்றார். கர்ப்பத்திலிருக்கும் போது ஞானமுடையவ னாயிருக்கிற குழந்தை களைப் பிறந்தவுடனே தனது தொடுதலால் அறியாமைக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலிய செய்யும்படி பண்ணிவிடும் தன்மைய தான "சடம்" என்னும் வாயு இவ்வாழ்வாரை யும் பிறக்கும்போது தொடுவதற்கு வர, அப் போது இவர் அதனை உங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்ததனால் இவருக்கு "சடகோபர்" என்றும் திருநாமமாயிற்று என்பர். "சடகோபன்" (திருவா. 1.1.11) என்ப தற்கு சடரான வேதத்துக்குப் புறம்பாகப் பொருள் கூறும் குத்ருஷ்டிகளை வெல் லும் தன்மையரான ஆழ்வார் என்று வாதி கேசரி சீயர் உரை.

(சடகோபன் திருவடிகள்) "வகுளா பிராமம்... அங்க்ரியுகளம்" என்று ஆளவந் தார் அருளியதற்கு ஏற்ப ஆழ்வாருடைய திருவடியானது மகிழ்மாலையால் அலங் கரிக்கப்பட்டது என்றும், திருவடிகளில் அவற்றின் பரிமளத்தாலே வந்த அழகையும் சேர்த்தியால் வந்த அழகையும் உடையது என்றும் கூறுவர் பிள்ளைலோகம் சீயர். ஆழ்வார் திருவடிகளை நினைக்கும்போது அவரது திருவவதார இடமான திருநகரி, இருக்கும் நாடான திருவழுதி வளநாடு, அந்நாட்டுக்கு அலங்காரமான தாமிரபரணி நதி ஆகியவற்றை நினைத்து ஆழ்வார் திருவடிகளே சரணம் என்று சொல்ல வேணும் என்பர். "மனத்தாலும் ... சடகோபன் பாதங்கள்" என்ற தனியனில் "பாதங்கள்" என்பதற்கு "உரிய தலைவரானவர் திருவடி கள்" என்று சீயர் உரை. அப்படிப்பட்ட திருவடிகளை வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

## பிழைத்திருத்தம்

**கடந்த 2019 ஜனவரி மாத இதழில் 28ம் பக்கத்தில் இடம் பெற்ற ஏப்ரல், மே மாத முக்கிய பருவ தினங்கள் மற்றும் பண்டிகைகள் பற்றிய பட்டியல் இடம் மாறி அச்சிடப்பட்டுள்ளது. அவற்றினை கீழ்க்குறிப்பிட்டபடி திருத்தி வாசிக்கவும்.**

### ஏப்ரல் 2019

| | |
|---|---|
| 01 | அன்னமாச்சார்யர் நினைவு தினம் |
| 02-10 | திருப்பதி ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 06 | தெலுங்கு வருடப்பிறப்பு -(விகாரி நாம) |
| 13-21 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 14 | ஸ்ரீராம நவமி, தமிழ் வருட பிறப்பு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஜெயந்தி |
| 17-19 | திருமலையில் வஸந்தோத்ஸவம் |
| 19-27 | நாகலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

### மே 2019

| | |
|---|---|
| 7 | அக்ஷய திருதியை, ஸ்ரீபரசுராம ஜெயந்தி |
| 9 | ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி, ஸ்ரீசங்கர ஜெயந்தி |
| 11-19 | திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 12-14 | ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம்(திருமலை) |
| 16-24 | [illegible], நாராயணவனம் ஸ்ரீகல்யாண வெங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 17 | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, ஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா ஜெயந்தி |
| 17-19 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வசந்தோத்ஸவம் |
| 18 | ஸ்ரீ கூர்ம ஜெயந்தி, ஸ்ரீஅன்னமாச்சார்யர் ஜெயந்தி |
| 29 | ஸ்ரீஹனுமத் ஜெயந்தி |

### ஜூன் 2019

| | |
|---|---|
| மே26-ஜூ3 | கார்வேட்டி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 13-21 | அப்பலாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வெங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 13-17 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் |
| 14-16 | திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 23-25 | திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம் |




**புராண வரலாறு :**

கருடனுக்கும், ஆதிசேஷனுக்கும் இருந்த பகை உணர்ச்சி நீங்கிய இடம். கருடனுக்கு அஞ்சிய ஆதிசேஷன், பல இடங்களுக்குச் சென்றும் பயம் நீங்காமல், இவ்வூரில், இந்த எம்பெருமான் திருவடிகளைச் சரண் அடைந்து, இங்குள்ள புஷ்கரணிக் கரையில் கடும் தவம் செய்தார். பகவான் இளமை ததும்பும் பால மூர்த்தியாக ஆதிசேஷன் முன்பு தோன்றி, தன்னைச் சுமக்கும் பாக்யத்தைக் கொடுத்து அருளியதையும், அச்சமயம், கருடன் அங்கு வர, ஆதிசேஷன், கருடனை, கருடா – சௌக்யமா... என்று கேட்டதாகவும், அதற்கு கருடன் அவரவர் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் சுகம்தான் என்று இந்த ஊரில்தான் சொன்னதாகவும் கூறுவர். பகவானைச் சுமந்து கிடப்பவன் ஆதிசேஷன், பகவானைச் சுமந்து பறப்பவன் கருடன். பகவானின் மூன்று கோலங்களில், அதாவது, தலசயனம் (திருக்கடல்மல்லை), வடசயனம் (ஸ்ரீவில்லிபுத்தூர்... வட... ஆலிலை), ஜல சயனம் (இவ்வூரில் புஷ்கரணியில் மிதக்கும் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்ட கோலம்). இது அநந்த புஷ்கரணி... அநந்த ஸரஸ் ... பறந்து செல்லும் கருடன், இங்கு நிலத்து அடியில் வாழ்கிறான். ஊர்ந்து செல்லும் ஆதிசேஷன், குளக்கரையில், நிலத்தின் மேல் தனிக் கோயிலில் விளங்குகிறான்.

கொடிய பகைவர்களும் இவ்வூர் எம்பெருமானைத் தரிசித்தால் நண்பர்கள் ஆகி விடுவர். இங்கு ஆதிசேஷனை வழிபட்டால், கொடிய சர்ப்ப தோஷம் எல்லாமே போய் விடும். பிரம்மா, ப்ருகு மஹரிஷி இருவருக்கும் ப்ரத்யக்ஷம்.

தில்லையம்பலம் நடராசனிடம் பக்தி கொண்ட வ்யாக்ரபாத முனிவர் (புலிக்கால் முனிவர்) நடராஜரிடம் முக்தியை வேண்டியதாகவும், பொன்னம்பலநாதர் சிறு புலியூர் எம்பெருமானைத் தரிசிக்கச் சொன்னதாகவும், அப்படியே முனிவர் இங்கு வந்து பகவானைத் தரிசிக்க இயலாமல்,மறுபடியும் நடராஜரை வேண்டியதாகவும், அவர் இங்கு தோன்றி லிங்க வடிவெடுத்து, பகவானைக் காட்டியதாகவும், வ்யாக்ரபாதர், ஆச்சர்யத்துடன் பகவானைத் தரிசித்தபோது, பகவான், திருவனந்தபுரம் அனந்த பத்மநாபரைப் போல சேவை சாதித்ததாகவும், இவ்வளவு பெரிய திருஉருவை அனந்த சயனத்தைக் கண்களால் தரிசித்து, கைகளால் ஸ்பர்சிக்க இயலவில்லையே என்று முனிவர் வருந்தியதாகவும், உடனே பகவான், தன்னுடைய திரு உருவைச் சுருக்கிப் பால சயனனாகக் காக்ஷி கொடுத்ததாகவும் வரலாறு சொல்கிறது. பகவானின் திருநாபியில் பிரம்மா, பகவானின் திருவடி அருகே வ்யாக்ரபாதர், கண்வ மஹரிஷி இவர்களையும் சேவிக்கலாம்.

திருமங்கை மன்னன், இங்கு எம்பெருமானைப் பெரிய வடிவில் தரிசிக்க ஆசைப்பட்டபோது, அருள்மா கடல் அமுதனாகிய இந்த எம்பெருமான், நம் பெரிய திரு உருவைத் திருக்கண்ணமங்கை திவ்ய தேசத்துக்கு வந்து தரிசிக்க என்று ஆணையிட்டாராம். வ்யாக்ரபாதருக்குச் சிறிய உருவில் காக்ஷி கொடுத்ததால், இவ்வூர், சிறு புலியூர் ஆயிற்று.

**பெருமாள்** – அருமா கடல் அமுதன், சல சயனப் பெருமாள், தெற்கு

நோக்கிக் கிடந்த (சயன) திருக்கோலம். பால சயனம்.

| | |
|---|---|
| **உத்ஸவர்** | – க்ருபா ஸமுத்ரர். |
| **தாயார்** | – திருமாமகள் நாச்சியார், உத்ஸவர் – தயா நாயகி. |
| **தீர்த்தம்** | – அநந்த ஸரஸ், மானஸ புஷ்கரணி. |
| **விமானம்** | – நந்தியாவர்த்த விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – வ்யாஸர், பால வ்யாக்ர முனிவர், ஆதிசேஷன். |
| **ஸ்தல வ்ருக்ஷம்** | – வில்வ மரம். |
| **ஆகமம்** | – பாஞ்சராத்ரம். |
| **மங்களாசாஸனம்** | – திருமங்கை ஆழ்வார், |
| **சிறப்புகள்** | – ஸ்ரீரங்கம் போல தெற்கு நோக்கி, சயன திருக்கோலம்... சிறிய எம்பெருமான் கருடனிட மிருந்து, ஆதிசேஷனைக் காத்த ஸ்தலம். இந்த எம்பெருமான் சரணாகத ரக்ஷகன். |

## த்யான ச்லோகம்

*பால வ்யாக்ரபுரே க்ருபா ஜலநிதி: ஸ்ரீ தேவிகா ப்ரேயஸீ*
*நந்த்யா வர்த்த விமாந மத்ரச மஹத்தீர்த்தம்*
*த்வநந்தாஹ்வயம் |*
*பால வ்யாக்ரமுநி ப்ரஸாத ஸுமுக: சேஷாங்க சாயீஸதா*
*ஸ்ரீமாந் தக்ஷிண திங் முகஸ் ஸுரகணை:*
*ஸம்ஸேவிதோராஜதே ||*

----

## பாசுரம்

*கருமா முகில் உருவா! கனல் உருவா! புனல் உருவா!*
*பெருமால் வரை உருவா! பிற உருவா! நினது உருவா!*
*திரு மா மகள் மருவும் சிறுபுலியூர்ச் சல சயனத்து*
*அரு மா கடல் அமுதே! உனது அடியே சரண் ஆமே.*

------

*ஆமருவி மேய்த்த அரங்கர் எதிர் ஆர் நிற்பர்*
*தாம் மருவி வாணணைத்தோள் சாய்த்த நாள் ....சேமம்*
*உறு புலி ஊர் வன்தோல் உடையான் உடைந்தான்*
*சிறு புலியூர் எந்தை மெல் சென்று.*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

## நாமாக்கள்

301. *ஓம் யுகாதி க்ருதே நம:*
(யுகங்களுக்குத் தொடக்கமான சிருஷ்டியைச் செய்பவனே)
*ஓம் வரிஷ்டாயை நம:*
(விரும்பப்படுபவர்களில் சிறந்தவளே)

302. *ஓம் யுகாவர்த்தாயை நம:*
(யுகங்களைச் சுழற்றுபவனே)
*ஓம் கமலேக்ஷணாயை நம:*
(தாமரையைப்போலக் குளிர்ந்த பார்வையை உடையவளே)

303. *ஓம் நைகமாயாய நம:*
(பலவித ஆச்சர்யங்களை உடையவனே)
*ஓம் பத்மப்ரியாயை நம:*
(தாமரை மலரை விரும்புபவளே)

304. *ஓம் மஹாசநாய நம:*
(சம்ஹார காலத்தில் எல்லாவற்றையும் விழுங்குபவனே)
*ஓம் ஸுப்ரஸந்நாயை நம:*
(சீற்றம் சிறிதுமின்றி எப்போதும் அருள்பவளே)

305. *ஓம் அத்ருச்யாய நம:*
(ஒன்றுக்கும் புலப்படாத செய்கைகளை உடையவனே)
*ஓம் ப்ரமோதாயை நம:*
(நல்ல முறையில் மகிழ்ச்சி அளிப்பவளே)

306. *ஓம் வ்யக்தரூபாய நம:*
(தெளிவாகப் புலப்படும் திருமேனி உடையவனே)
*ஓம் ப்ரியபார்ச்வகாயை நம:*
(தன்னை அண்டியவர்களிடம் ப்ரீதி உள்ளவளே)

307. *ஓம் ஸஹஸ்ரஜிதே நம:*
(ஆயிரக்கணக்கான அசுரர்களை ஜெயித்தவனே)
*ஓம் விச்வபூஷாயை நம:*
(அனைத்துக்கும் அழகை அளிப்பவளே)

308. *ஓம் அநந்தஜிதே நம:*
(எவராலும் காண முடியாதவனே)
*ஓம் காந்தி மத்யை நம:*
(புகழ் மிக்க, திருமேனியை உடையவளே)

309. *ஓம் இஷ்டாய அவிசிஷ்டாய நம:*
(ப்ரளய சமயத்தில் தன் உதரத்தில், எல்லா ஜீவன் களையும் பேதமில்லாமல், தாய் போல் காப்ப வனே)
*ஓம் க்ருஷ்ணாயை நம:*
(மனதை ஆகர்ஷிப்பவளே)

310. *ஓம் சிஷ்டேஷ்டாய நம:*
(ஞானிகளால் விரும்பப்படுபவனே)
*ஓம் வீணாரவோத் ஸுகாயை நம:*
(வீணா நாதத்தை விரும்புபவளே)

*ஸ்ரீமதே திருமாமகள் நாச்சியார் தயா நாயிக ஸமேத ஸ்ரீ க்ருபா ஸமுத்ர, க்ருபா ஜலநிதி ரூப ஸமேதாய திவ்ய அம்ருத மஹா ஸாகராய பர ப்ரஹ்மணே நம:*

திவ்ய தேச வைபவம் வளரும்...



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# இலட்சயப்பாதையில் உள்ள ஆறு தடைகள்

ஒவ்வொரு மானிடருக்கும், முக்கியமாக மாணவர்களுக்கு இலட்சயமே உயிர் நாடி போன்றது. உயிர் நாடியானது துடித்துக் கொண்டே இருந்தால் தான் உயிர் உள்ளது போன்றாகும். இலட்சயம் இருந்தால் மட்டுமே மானிடரின் வாழ்க்கை மேன்மையானதாக அமையும். இலட்சயம் என்பது புத்தியுடன் தொடர்புடையதாகும். ஆனால் கோரிக்கை என்பது மனதுடன் தொடர்பு உடையதாகும். கோரிக்கைகள் அனைவரிடமும் இருக்கும். ஆனால் அக்கோரிக்கைகளை இலட்சயமாக மாற்றிக் கொள்பவர்களே வெற்றியடைவர். நாட்களும் கழிந்துக் கொண்டே இருக்கும். காலமும் கடந்துக் கொண்டே இருக்கின்றன. வாழ்க்கையும் கூட ஏதோ ஒரு விதமாகக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் அது போன்ற வாழ்க்கையை எவரும் வேண்டமாட்டார்கள். ஆனால் இலட்சயத்தை வைத்துக் கொள் என்றால் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஒரு வேளை பலவந்தமாக இலட்சயங்களை பெற்றிருந்தால் அந்த இலட்சய சாதனையில் ஆறு வகையான தடைகளும் உள்ளன என்பதை அறிதல் வேண்டும். அவை 1) அதிக உணவு, 2) தேவையற்ற விருப்பம், 3) உபயோகமற்ற உரையாடல், 4) வேண்டுதலாக நியமங்களை கடைபிடித்தல், 5) தீயோர் உறவு, 6) அதிக ஆசை. இந்த ஆறும் இலட்சய சாதனையில் நிச்சயமாக தடைகளை உண்டாக்கும் என்றும், பெரிய இடையூறுகளாகத் திகழும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவற்றில் அதிக உணவு என்பது நாக்கு, வயிற்றினால் ஏற்படுகிறது. இவற்றில் ஒன்று ஞானேந்திரியமாகும். மற்றொன்று கர்மேந்திரியமாகும். அடுத்ததான தேவையற்ற விருப்பத்தினால் மனதும், உடலும் துன்பமடைகின்றன. உபயோகமற்ற உரையாடலினால் காதுகள் (ஞானேந்திரியங்கள்) செவிமடுக்கின்றன. இரண்டு மானிடர்கள் சந்திக்கும் பொழுது சிறிது நேரம் கூட அமைதியாக இருக்க மாட்டார்கள்.

மருத்துவமனைக்குச் சென்றாலும், கோயிலுக்குச் சென்றாலும், பள்ளிக்குச் சென்றாலும், சந்தைக்குச் சென்றாலும் மானிடர்கள் பேச்சிலே மூழ்கி விடுவார்கள். அந்த உரையாடல் தேவையானதா, தேவையற்றதா என்பதைக் கூட சிந்திக்க மாட்டார்கள். பேசுதல் என்பது நம் மனநிலையினையும், ஆலோசனைகளையும் மற்றவர்களுக்குக் கூறுவதற்காக இறைவனால் வழங்கப்பட்ட பெரிய வரப்பிரசாதமாகும். அதனை கேள்விகள் கேட்பதின் மூலம் ஞானம் பெற பயன்படுத்த வேண்டும். மாணவர்கள் பலவிதமான உத்தமமான கேள்விகளின் மூலமாக தினமும் குறைந்தது ஐந்து புதிய தகவல்களை அறிந்து கொள்ளல் வேண்டும். கற்றுக் கொள்ளவும் வேண்டும். ஏதோ வேண்டுதலாக நியமங்களை கடைபிடித்தலில் மனதும், இந்திரியங்களும் பங்கு பெற்றது போல் காணப்பட்டாலும் அவற்றில் பிடிப்பு இருக்காது. ஏதோ வேண்டுதலாக செய்யும் எந்த ஒரு செயலாலும் காலம் வீணாகுமே தவிர பலன் கிடைக்காது. சாதாரணமாக பெரியோர்கள் அனுபவத்தால் கூறுவதனை மாணவர்கள்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

### வயது முதிர்ந்தவர்கள் / உடல் ஊனமுற்றோர்க்கான "தரிசன டோக்கன்கள்" வழங்கும் மையம்

**டோக்கன்கள் வழங்கும் நேரம் : காலை 7.00 மணி**

- டோக்கன் வைத்திருப்பவர்கள் காத்திருக்கும் கூடத்தில் காலை 10.00 மணியளவில் 11 மணி தரிசனத்திற்கும், மாலை 2.00 மணியளவில் 3.00 மணி தரிசனத்திற்கும் ஆஜராக வேண்டும்.
- குறிப்பிட்ட ஒதுக்கீடு முடிந்ததும் டோக்கன் கௌண்டர் மூடப்படும். யாத்திரிகர்கள் அடுத்த நாள் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- இந்த டோக்கனை பெற ஆதார் அட்டை/வாக்காளர் அட்டையை தவறாமல் காண்பிக்க வேண்டும்.
- இந்த டோக்கனை பெற்று தரிசனம் செய்தவர்கள் அடுத்த மூன்று மாதத்திற்கு பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

ஏதோ வேண்டுதலாக எடுத்துக் கொள்கிறார்கள். நல்ல பலன்களை பெறமால் போகின்றனர். இனி ஐந்தாவதான தீயோர் உறவினால் மானிடர்களையும், முக்கியமாக மாணவர்களுக்கு தீய வழியைக் காட்டி இழிவான நிலைக்கு கொண்டு செல்லும். இதுவரை கூறிய நான்கு இன்னல்களில் சிற்சில இந்திரியங்கள் பங்கு கொண்டாலும் ஐந்தாவது இன்னலில் அனைத்து இந்திரியங்களும் பங்கு கொள்கின்றன. அக்னி அருகே செல்லும்போது வெப்பம் தொற்றிக் கொள்வது போன்று, தீயவர்களின் அருகில் சென்றால் தீய புத்தியே ஏற்படும். அடுத்து லட்சய பலனில் ஆறாவது இன்னலாக இருப்பது அதிக ஆசையே ஆகும். இது முழுமையாக மனதுடன் சம்பந்தப்பட்டதாகும். தன்னுடைய இலட்சயத்திற்குத் தேவையானவற்றை எடுத்து, தேவையற்றதை விடுதலே மாணவர்களுக்கு நன்மை பயப்பதாக அமையும்.

இந்த ஆறு வகையான இன்னல்களை எளிமையாக கடக்க வேண்டுமென்றால் ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத் கீதையில் கூறிய ஒரு முக்கியமான வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அதுவே *"பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே"* (பகவத் கீதை 2–59) என்பதாகும். எப்பொழுது மானிடன் மேன்மையான செயல்களின் வாயிலாக அநுபூதி பெறுகின்றானோ, அப்பொழுது கீழ்த்தரமான செயல்களிலிருந்து விடுபடுகின்றான். ஆதலால்தான் மாணவர்களும் உயர்வான இலட்சயங்களை மனதில் கொண்டு, அவற்றில் சிறிது சிறிதாக வெற்றி பெறுதலை மேற்கொண்டாலே மிக விரைவில் இந்த ஆறு இன்னல்களில் இருந்தும் விடுபடலாம். கத்தியோடு விளையாடும் குழந்தையின் கையிலிருந்து கத்தியை எடுத்து வீச வேண்டுமெனில் அக்குழந்தையின் கையில் வேறொரு பொருளைத் தர வேண்டும். அதுவும் அக்குழந்தைக்கு கத்தியை விட அதிகமாக பிடித்த பொருளாகவும் இருத்தல் வேண்டும். அது போன்றே காய்ந்த ரொட்டித் துண்டை தின்று மகிழும் குழந்தைக்கு மிக ருசிகரமான குலாப்ஜாம் கொடுத்தால் அந்த ரொட்டித் துண்டை தூக்கி எறிந்து விடும். இது தான் *"பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே"*

ஆகவே மாணவர்களும் இவ்வார்த்தையினை மீண்டும் மீண்டும் உச்சரித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். அதுமட்டுமின்றி ஒரு காகிதத்தில் இதனை எழுதி தாம் படிக்கும் இடங்களில் உள்ள சுவரில் ஒட்டி வைத்தல் வேண்டும். எவரெஸ்ட் சிகரத்தை முதன்முதலில் ஏறிய எட்மண்ட் ஹிலாரி தன் வீட்டில் ஒவ்வொரு அறையிலும் எவரெஸ்ட் புகைபடத்தை வைத்து கொண்டு, அதையே பார்த்துக் கொண்டிருந்தார் என்பர்.

பகவத்கீதை தொடரும்...

## சிறுவர் பகுதி விடைகள்



1. நட்சத்ரம் - புனர்பூசம், திதி - நவமி.
2. பரதன் - பூசம், லட்சுமணன் - ஆயில்யம்.
3. புத்ரகாமேஷ்டி யாகம்.
4. கடக ராசி.
5. விச்வாமித்ரர்.
6. அஹல்யை.
7. விதேக நாடு ஜனகர்.
8. ஊர்மிளை.
9. பரசுராமர்.
10. மாண்டவி - பரதன், ச்ருத கீர்த்தி - சத்ருக்னன்.

தொகுப்பு : திரு. ராமஸ்வாமி ஐயங்கார், சென்னை.

தொடர்

# ஆயுர்வேதம்







# வேம்பு

**தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.**
**தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.**

நம் இந்திய நாட்டில் பல வகையான மூலிகை மரங்கள் உள்ளன. அவைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது வேப்பமரம். அதனை வேம்பு என்றும் கூறுவர். வேம்பை அறியாதவர் இவ்வுலகில் யாரும் இலர். திருக்கோயில்களில் வேம்பு ஓர் தலமரமாகவும் உள்ளது. இஃது கசப்புச் சுவையுடையது. இம்மரம் வீடுகளிலும் தோட்டங்களிலும் வளர்க்கப்படுகிறது. "அம்மை" போன்று கடுந்தொற்று நோய்களுக்கு மருந்தாவதாலும், உடலுக்கு நோய் எதிர்ப்பாற்றலை நல்குவதாலும் இம்மரம் தொன்று தொட்டு தெய்வீக மரமாகக் கருதப்பட்டு வருகிறது.

ஸ்ரீசிரிடி சாய்பாபா தம் பதினாறாம் வயதில் இம் மரத்தின் கீழ் தியானம் செய்தவாறு சிரிடி மக்களுக்கு முதன்முறையாக தரிசனமளித்தார். தெலுங்கு வருடப் பிறப்பான யுகாதி நன்னாளில் வேம்பு பூவைக் கொண்டு யுகாதி பச்சடி செய்து உட்கொள்வர்.

சமஸ்கிருதத்தில் இதனை நிம்ப விருக்ஷம் என்றும், ஆரோக்கியத்தைத் தருவதால் "ஸ்வஸ்தத" என்றும், மங்களகரமானது ஆகையால் "சர்வதோ பத்ர" என்றும், இந்த விருக்ஷம் இருக்கும் இடம் மிக்க தூய்மையாக இருப்பதால் இதனை பாரிபத்ரிக என்றும், சரும வியாதிகளை போக்குவ தால் பிசுமர்த என்றும் அழைக்கின்றனர்.

ஆங்கிலத் தில் நீம் (Neem), மார்கோசா (Margosa), ஹோலீட்ரி (Holy Tree), அஜாடிரக்ட் (Azadirachta), பெட்டீரி என்று பல வித பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இதன் தாவரப் பெயர் அஜாடிரக்டா இண்டிகா என்பதாகும். பெர்ஷியன் மொழியில் அஜாடிரக் என்றால் தூய்மை யானது என்பது பொருள். ஆகவே இப்பெயர் ஏற்பட்டது. இந்த மரம் மிலியேசி என்ற குடும்பத்தைச் சார்ந்தது.

மேலும் தானியங்கள் மற்றும் அரிசியில் புழுக்கள் வராமல் இருப்பதற்கு வேப்ப இலையை மூட்டைகளில் போட்டு வைப்பர். உடலில் அரிப்பு ஏற்பட்டால் வெந்நீரில் வேப்ப இலையைப் போட்டு குளிப்பர். முற்காலத்தில் மக்கள் "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற பழமொழிக்கு ஏற்ப வேப்பங்குச்சியாலும், ஆலங்குச்சியாலும் பல் துலக்கி வந்தனர். அவ்வாறு பல் துலக்கி வந்ததால் தான் அக் காலத்தில் மக்கள் சர்க்கரை வியாதிகள் அண்டாமல் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அதுமட்டுமின்றி வேப்பங் குச்சியைக் கொண்டு பல் துலக்குவதால் அதன் கசப்புத் தன்மை நம் உடலில் சேர்ந்து, கிருமிகள் அழிந்து ஆரோக்கி யமான வாழ்வை பெறலாம்.

### டெங்கு, சிகன்குன்யா, ஸ்வைன்ப்ளூ போன்ற வைரஸ் வியாதிகள் வராமல் தடுக்க :

ஒரு வாரத்திற்கு காலை வெறும் வயிற்றில் 5 வேப்ப இலை, 5 மிளகு கலந்து சாப்பிட வேண்டும் அல்லது நன்கு அரைத்தும் விழுங்கலாம். இவ்வாறு சாப்பிடுவதால் இந்த வியாதிகள் வராமல் தடுக்கலாம்.

**பொடுகு தொல்லை குறைய :**

வாரத்திற்கு 2 முறை 250 மி.லி. நீரில் 20–25 வேப்ப இலை ஒரு டீஸ்பூன் மஞ்சள் ஆகியவற்றை போட்டு 50 மி.லி. ஆகும் வரை கொதிக்க வைக்க வேண்டும். ஆறியபின் வடிகட்டி அதனை தலைக்கு பூசி ஒரு மணி நேரத்திற்கு பிறகு, தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை குறையும்.

**காது வலி நீங்க :**

50 கிராம் வேப்ப இலையை 100 மி.லி. கடுகு எண்ணெய் உடன் கலந்து மிதமான சூட்டில் இலைகள் கருப்பாக மாறும் வரை கொதிக்க வைத்து 10 கிராம் மஞ்சள் பொடி போட்டு இறக்கி நன்கு ஆறிய பிறகு வடிகட்டி 10 மி.லி. தேன் கலந்து நாள்தோறும் இரண்டு அல்லது 3 சொட்டு காதில் விட்டால் காது வலி, சீழ் வடிதல் போன்ற உபாதைகள் நீங்கும்.

**இரத்தத்தை சுத்திகரிக்க :**

வேப்பம் பட்டை பொடி, பாவஞ்சாலபொடி ஆகியவற்றை 25 கிராம் வீதம் எடுத்துக்கொண்டு, நாள்தோறும் 2 கிராம் பொடியை ஒரு டீஸ்பூன் தேன் அல்லது 50 மி.லி. நீரில் கலந்து குடிப்பதன் மூலம் இரத்தத்தை சுத்தப் படுத்தி பலவித தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் குறைய துணை புரிகிறது.

**காய்ச்சல் குறைய :**

நாள்தோறும் காலை அரைலிட்டர் நீரில் 10 கிராம் வேப்பங்குச்சிகளை சிறு துண்டுகளாக்கி சிறிது நேரம் ஊற வைத்து பின் 50 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி ஒரு டீஸ்பூன் தேன் கலந்து குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் காய்ச்சல் குறையும்.

**காமாலை குறைய :**

வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை 2 கிராம் வேப்பங்கொழுந்தை நான்கு கிராம் புளி இலைகளுடன் கலந்து மிருதுவாக அரைத்து உட்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு கப் பால் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்வது மட்டுமின்றி பத்திய உணவுகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**பற்பொடி :**

காயவைத்த வேப்பம்பழப்பொடி, படிகம் பொடி, உப்பு ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, பல் துலக்க பயன்படுத்தினால் பற்கள் பளபளப்பாக இருக்கும். மேலும் பற்கோளாறுகள் நீங்கும்.

**மூல வியாதி :**

வேப்பங்கொட்டையில் உள்ள பருப்பு 50 கிராம், வெல்லம் 20 கிராம் ஆகியவற்றை கலந்து மிருதுவாக பொடி செய்து கொண்டு இரு வேளைகளில் 1 கிராம் அளவு உட்கொள்ள வேண்டும். இதனை புளியங் கொட்டை அளவு சிறு உருண்டையாக செய்தும் சாப்பிட லாம். 2 அல்லது 3 கிராம் வேப்பப்பொடி, 5 அல்லது 6 கிராம் வெல்லம் கலந்து சாப்பிட்டாலும் மூல வியாதி குறையும்.

**சரும நோய்கள் குறைய :**

100 மி.லி. வேப்ப எண்ணெய், 100 மிலி Chalmogar Oil ஆகியவற்றை கலந்து நன்கு சூடுபடுத்தி, இறக்கிய வுடன் 25 கிராம் கற்பூரம் போட்டு அதனை ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு சொறி, சிரங்கு, படர்தாமரை, அரிப்பு, சொரியாஸிஸ் போன்ற சரும வியாதிகளுக்கு தடவி வந்தால் நோய் குறையும்.

ஆயுர்வேதம் வளரும்...


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

**டயல் யுவர் ஈ.வோ.**

**பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!**

எந்த மாநிலத்திலிருந்தும், எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சி
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

இந்த வாய்ப்பினை அனைவரும் உபயோகித்துக் கொள்ளவும்.



# 2019
# ஏப்ரல் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | யுரேனஸ் | செவ்வாய் | ராகு |
| நெப்ட்யூன்<br>சந்திரன்<br>புதன்<br>சுக்ரன் | **ஏப்ரல் - 2019**<br>10 – குரு – வ.ஆ.<br>11 – புதன் – மீனம்<br>14 – சூரியன் – மேஷம்<br>15 – சுக்ரன் – மீனம்<br>20 – சனி – வ.ஆ.<br>22 – குரு(வ) – விருச்சிகம் | | |
| | | | |
| கேது<br>சனி<br>குரு | | | |


மேஷம்

உங்கள் ராசிக்கு 2,11 ஆம் இடங்களில் உலவிடும் கிரகங்கள் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். மனத்துணிவு கூடும். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். தொலைத் தொடர்புத் துறையைச் சேர்ந்தவர்கள்வளர்ச்சி காண்பார்கள். அரசியல்வாதிகளின் மதிப்பு உயரும்.


ரிஷபம்

ராசி நாயகனின் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. திருமணம் ஆகாதவர்கள் மணமேடையிலமர்வர். பணப் பெருக்கம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களது எண்ணம் ஈடேறும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். சுக்ரன் பத்தில் உலவிடுவதால் தொழிலில் விசேஷமான வளர்ச்சியைக் காணலாம்.


மிதுனம்

9,10 ஆம் இடங்களில் உலவிடும் கிரகங்களின் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. தகவல் தொடர்பு மற்றும் பத்திரிக்கைத் துறைகளில் உள்ளோர் வளர்ச்சி காண்பர். புதன் 10ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாவதால் வியாபாரம் செழிக்கும். குருவினால் மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.


கடகம்

ராசி நாதன் சந்திரன், அஷ்டமத்தில் உலவிட இம்மாதம் ஆரம்பமாகிறது. விருச்சிகத்தில் உலவப் போகும் குரு உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். "குரு பார்க்கக் கோடி நன்மை" என்பர். இல்லத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


சிம்மம்


உங்கள் ராசிக்குப் பத்தில் செவ்வாயும், பதினொன்றில் ராகுவும் உலவுவது சிறப்பாகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். சுக்ரனின் ஏழாமிடத்துச் சஞ்சாரத்தால் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். ஐந்தில் சனி வக்ரமடைவதால் பிள்ளைகளின் பிடிவாதம் அதிகரிக்கக் கூடும்.


கன்னி

ராசி நாயகன் புதன் முதல் வாரத்தில் ஆறாம் இடத்திலும் பின்னர் இரண்டாம் வாரம் முதல் ஏழாம் இடத்திலும் சஞ்சரிப்பார். கடன் மற்றும் எதிரிகளின் தொல்லைகள் குறையும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு உடல் நலம் தொடர்பான துறைகளில் வேலை கிடைக்கலாம்.


துலாம்

உங்கள் ராசி நாயகன் முதலிரண்டு வாரங்களில் ஐந்தாம் வீட்டில் சஞ்சரிப்பார். பதவியில் உள்ள அரசியல் கட்சி பிரமுகர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்ப்பார்த்ததை விட அதிக லாபம் பெறுவீர்கள். 6ல் சூரியனிருப்பதால் உயர் பதவி பட்டங்கள் கிடைக்கும். சனி வக்ரம் பெறுகிறார்.


விருச்சிகம்

ராசி நாயகன் செவ்வாய் ஏழிலிருந்து ராசியை நோக்குகிறார். முன்னேற்றத்திற்கான தகவல்கள் வந்து சேரும். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். எழுத்து, கணிதம், விஞ்ஞானம், ரசாயணம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். பணவரவு திருப்தி தரும்.


தனுசு


ராசி நாயகன் குரு வக்ரம் பெற்று விரயஸ்தானத்தில் பயணிக்கிறார். ராசியில் சனி, கேது உலவிடுவது சிறப்பில்லை. செவ்வாய் ஆறாம் வீட்டில் உலவுவதால் கடன் மற்றும் எதிரிகளின் தொல்லைகள் இராது. புதன் பத்தாமிடத்தை நோக்குவதால் வியாபாரத்தில் ஆதாயம் எதிர்ப்பார்க்கலாம்.


மகரம்

வக்ர சனியின் பன்னிரண்டாம் வீட்டுப் பயணத்தால் செலவினங்கள் கூடுமாயினும், இரண்டில் உலவிடும் யோகக்காரனாகிய சுக்ரனால் அதிகப்படியான செலவுகளைச் சமாளிக்க உதிரி வருமானங்கள் பெருகும். புதனின் சஞ்சாரம் புதிய ஒப்பந்தங்களை வரவழைத்துக் கொடுக்கும்.


கும்பம்

ராசிக்குப் பதினொன்றில் சனியும், கேதுவும் சஞ்சரிப்பது சிறப்பாகும். பத்தில் குரு சஞ்சரிக்க உள்ளார். தெய்வப் பணிகளிலும் தர்மப் பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். மூன்றில் சூரியன் உலவிடுவதால் பயணத்தின் போது பாதுகாப்பு தேவை. கலைஞர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவி வரும்.


மீனம்

ராசி நாயகன் குரு மற்றும் சனியினுடைய சஞ்சாரம் நன்றாக உள்ளது. வாழ்க்கைத் தரம் உயரும். மற்றவர்கள் போற்றும் வகையில் உங்கள் உற்றார் உறவினர்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்துவர். உதாசினப் படுத்தியவர்கள் உடன் வந்து சேருவர். அரசியல் செல்வாக்கு உள்ளவர்களின் ஆதரவு பெறுவீர்கள்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்)

மாவட்டம் & பின்கோடு எண்

அலைபேசி எண்

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

## 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
0877-
2233333
2277777

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/– ஆயுள்சந்தா ரூ.500/–டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*




# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

**இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை! இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!**





கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!

பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.

அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
"ஸப்தகிரி" படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... "ஸப்தகிரி" படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பெறுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!

### சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

அலுவலக பணிநாட்களில்
"ஸப்தகிரி" மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...
அலுவலகம் : 0877-2264543
டி.டி.பி. பிரிவு : 0877-2264359
ஆசிரியர் : 0877-2264360

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**sapthagiri_helpdesk@tirumala.org**

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams 25-03-2019
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

ஏவரிவெஞ்சிலை வலவா!
இராகவனே! தாலேலோ!

- குலசேகராழ்வார்

